20.00

www.onlineuthayan.com



பக்கங்கள் : 30

# உதயன்

சுடர் 27
கதிர் 221

வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 20 புதன்கிழமை (04/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

## அச்சத்தால் இலங்கையை விட்டு வெளியேறும் தமிழர்



### ஆஸ்திரேலிய ஊடகங்கள் தகவல்

கான்பரா, ஜூலை 4

இலங்கை அகதிகள் தொடர்ந்தும் ஆஸ்திரேலியக் கரையை நோக்கிப் படையெடுத்து வருவதாகவும், தமது நாட்டில் துன்புறுத்தல்களை எதிர்கொள்வதாலேயே இவர்கள் ஆஸ்திரேலியாவுக்குப் படையெடுப்பதாகவும் ஆஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினமும் இரண்டு பதின்மவயதினர் உள்ளிட்ட 37 ஆண்களுடன் சஞ்ஜன புத்தா 04 என்ற மீன்பிடிப் படகு கிறிஸ்மஸ் தீவைச் சென்றடைந்தது. இதனுடன் சேர்த்து கடந்த ஜூன் 24ஆம் திகதிக்குப் பின்னான் 9 நாள்களில் கிறிஸ்மஸ் தீவு மற்றும் கொக்கோஸ் தீவுக்கு 6 படகுகளில் இலங்கையில் இருந்து மொத்தம் 353 அகதிகள் சென்றுள்ளனர்.

கடைசியாக வந்தபடகில் இருந் 04↘

# இலங்கை கடற்படை அதிகாரியை திருப்பி விரட்டுகிறது கனடா அரசு

### போர்க்குற்றச்சாட்டுக்களே இவரது அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்படக் காரணம்

கொழும்பு,ஜூலை 4

போர்க்குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள இலங்கைக் கடற்படையில் பணியாற்றிய உயர் தமிழ் அதிகாரி ஒருவரின் அரசியல் தஞ்சக் கோரிக்கையை நிராகரித்து அவரை நாடுகடத்துமாறு உத்தரவிட்டுள்வது கனேடிய நீதிமன்றம்.

கொமடோர் நடராஜா குருபரன் என்ற இலங்கைக் கடற்படை அதிகாரியே மேற்படி அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவராவார்.

இலங்கைக் கடற்படையின் அட்மிரல் தரத்துக்கு மூன்று நிலைகள் கீழாகப் பணியாற்றியுள்ள முன்னாள் கொமடோர் குருபரன், விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட – எண்ணிலடங்காத பொதுமக்கள் கொல்லப்பட்ட – கொடூரப் போர் முடிவடைந்த காலப்பகுதியான 2009 ஜூனில் ஓய்வுபெற்றிருந்தார்.

2009 ஓகஸ்ட் 4 ஆம் திகதி தனது மனைவி பாமினி குருபரன் மற்றும் இரு பிள்ளைகளான மயூரன், கிருசாந்தி ஆகியோருடன் கனடாவில் இவர் அடைக்கலம் கோரினார்.

இவர் இலங்கை அரசு, அரச ஆதரவுக் குழுக்கள் மற்றும் போராளிகள் தொடர்பாக தாம் அச்சம் கொண்டிருக்கிறார் எனக் கூறியுள்ளார்.

ஆனால், குடிவரவு அதிகாரிகள் இவர் உண்மையான அகதி அல்லர் என்றும், மனித குலத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு உடந்தையாக இருந்தவர் என்றும் தெரிவித்துள்ளனர்.

இவரது மேன்முறையீட்டை சமஷ்டி நீதிமன்றம் கடந்த ஜூன் 13ஆம் திகதி நிராகரித்தது. இதனால், 04↘

## 10 இந்திய மீனவருக்கு 12ஆம் திகதிவரை விளக்க மறியல்

மன்னார், ஜூலை 4

தலை மன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் ஜூலை 12ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதவான் ஏ.யூட்சன் நேற்று செவ்வாய்க் கிழமை உத்தரவிட்டார்.

இந்திய, இராமேஸ்வரம் வேர்கோடு - கரையத்தெரு என்ற கிராமத்தைச் சேர்ந்த குறித்த 10 மீனவர்களும் 2 இழுவை படகுகள் மூலம் தலை மன்னார் கடற்பரப்பில் நேற்று 04↘

## 16 போராளிகள் இன்று விடுதலை

யாழ்ப்பாணம்,ஜூலை 4

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் பேராளிகள் 16 பேர் இன்று அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். எனப் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தார்கள் எனக் 04↘

## கலைப்பீடாதிபதியாக வி.பி.சிவநாதன்

யாழ்ப்பாணம்,ஜூலை 4

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதியாக பேராசிரியர் வி.பி.சிவநாதன் இன்று புதன்கிழமை பதவியேற்கிறார்.

அண்மையில் நடைபெற்ற பீடாதிபதித் தெரிவு வாக்கெடுப்பில் போட்டி எதுவுமின்றி பொருளியல் துறைப் பேராசிரியர் வி.பி.சிவநாதன் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

முன்னர் கலைப்பீடாதிபதியாக பேராசிரியர் என்.ஞானக்குமரன் பதவிவகித்தமை குறிப்பிடத்தக்கது. (த-4)

### இந்தியப் பொலிஸ் நிலையம் முன்

## ஈழத்தாயும் 3 குழந்தைகளும் தீ மூட்டித் தற்கொலை முயற்சி

சென்னை, ஜூலை 4

சென்னை புழல் பொலிஸ் நிலையம் முன்பாக் பெண் ஒருவரும், 3 குழந்தைகளும் தங்களது உடலில் மண் ணெண்ணெயை ஊற்றித் தீ மூட்டித் தற்கொலை செய்ய முயற்சி செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத் தியுள்ளது.

சென்னை, புழல் சிறைச்சாலை அருகில் காவாங்கரை இலங்கைத் தமிழர் முகாம் செயல்பட்டு வருகிறது. இந்த முகாமில் நீண்ட கால மாக இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வரும் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இங்கு வெள்ளை வாகனத்தில்வந்தபொலிஸார் அங்கிருந்து 04↘

## இந்தியாவை ராஜதந்திர ரீதியாக அணுக இலங்கை அரசு தீர்மானம்

கொழும்பு, ஜூலை 4

இந்தியாவின் தற்போதைய நடவடிக்கைகளை இராஜதந்திர ரீதியாகவே அணுக வேண்டும் என்று ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

தியத்தலாவயில் இலங்கை இராணுவப் பயிற்சி முகாமில் பயிற்சியை முடித்த 140 அதிகாரிகளின் அணிவகுப்பு நிகழ்வில் பங்கேற்ற அவர், அங்கு ஊடகவியலாளர்களிடம் பேசிய போதே இவ்வாறு கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இறுதிக்கட்டப் போரை வடக்கு, கிழக்கில் முன்னெடுத்த போது, போர் நடவடிக்கைகளை நிறுத்துமாறு 04↘

## மனிதக் கடத்தலுக்கான நிலையமாக இலங்கை

கொழும்பு,ஜூலை 4

மனிதக் கடத்தலுக்கு இலங்கை ஒரு இடைத்தங்கல் நிலையமாகப் பயன்படுத்தப்படுவதாகத் தேசிய கடத்தல் முறியடிப்புப் பிரிவின் தலைவர் பிரபாத் அளுத்கே கூறியுள்ளார்.

'பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளைச் சேர்ந்த 04↘

## புலிகளுக்கு உளவு பார்த்தனராம் மூன்று பேர் வவுனியாவில் கைது

வவுனியா,ஜூலை 4

விடுதலைப் புலிகளின் உளவாளிகள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒரு பெண் உள்ளிட்ட மூன்று பேரைப் பொலிஸார் வவுனியாவில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

சிறப்பு அதிரடிப்படை பற்றிய 04↘

## கொழும்பில் அவசரமாக கூடுகிறது கூட்டமைப்பு

கொழும்பு, ஜூலை 4

இன நெருக்கடிக்கான தீர்வு விடயம் ஸ்தம்பிதமடைந்துள்ள நிலையில், அடுத்த கட்ட நடவடிக்கைகளை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து ஆராயும் முக்கிய கூட்டமொன்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பங்காளிக் 04↘

## யாழ்.மருத்துவர் வெள்ளியன்று வேலை நிறுத்தப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று யாழ். வைத்திய சங்கம் அறிவித்துள்ளது.

வைத்தியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள், புற்று நோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரனின் வீடு மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பான விசாரணை, வெளி நோயாளர் பிரிவு வைத்திய பொறுப் 04↘

## புலிகளைப் பலப்படுத்த முயற்சிக்கிறது இந்தியா

### புலம்புகிறார் குணதாச அமரசேகர

கொழும்பு,ஜூலை 4

இந்திராகாந்தி அம்மையார் அன்று ஆயுதங்களை வழங்கிப் புலிகளை வளர்த்துவிட்டதுபோல் இன்று அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொடுத்து புலிகளைப் பலப்படுத்துவதற்கு இந்தியா முயற்சிக்கின்றது. 04↘

## சிறுமி மீது பாலியல் வன்புணர்வு சந்தேகநபருக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி, ஜூலை 4

கிளிநொச்சி முல்லையடி பனைப்பகுதியில் 14 வயதுச் சிறுமி ஒருவரைப் பாலியல் வண்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட குடும்பஸ்தரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதவான் உத்தவிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இந் 04↘

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா அரசியல் கைதிகளுக்கும் சர்வதேசப் புலிகளுக்கும் தொடர்பு

### குற்றஞ் சாட்டுகிறார் சிறைச்சாலைகள் அமைச்சர்

கொழும்பு, ஜூலை 4

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் சந்தேக நபர்களிடம் மூன்று செய்மதித் தொலைபேசிகளும் மேலும் 56 கையடக்கத் தொலைபேசிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தக் கைதிகளுக்கும் சர்வதேச புலிகள் அமைப்புக்கும் நேரடித் தொடர்புகள் இருக்கின்றன என்பதை ஊகிக்கக் கூடியதாக இருக்கிறது. சர்வதேச புலிகள் அமைப்பின் தூண்டுதலின் பேரிலேயே வவுனியா சிறையில் கைதிகள் கலகத்தை ஏற்படுத்தி உள்ளனர். இதுதொடர்பாக புலனாய்வு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜதீர கூறினார்.

> பெருந்தொகையான கைதிகள் ஒரே நேரத்தில் கலகம் ஏற்படுத்தியதனால் பொலிஸாரையும் விசேட அதிரடிப் படையினரையும் அழைக்க நேரிட்டது



வவுனியா சிறைச்சாலையில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக விவரிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா சிறைச்சாலையில் சிறை அதிகாரிகள், காவலர்கள் உட்பட 53 பேர் கடமையில் இருக்கின்றனர். ஆனால் சம்பவம் நடந்த அன்று 10 பேர் மட்டுமே கடமையில் இருந்துள்ளனர். ஏனையவர்கள் நான்கு சந்தேக நபர்களை நீதிமன்றங்களுக்கு அழைத்து சென்றுள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் புலிச் சந்தேக நபர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டுள்ளனர். இது சர்வதேச புலிகள் அமைப்புடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட செயல். இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட செய்மதி தொலைபேசிகளும் கையடக்க தொலைபேசிகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

பெருந்தொகையான கைதிகள் ஒரே நேரத்தில் கலகம் ஏற்படுத்தியதனால் பத்து சிறைக்காவலர்களால் கட்டுப்படுத்த முடிய வில்லை. அதனாலேயே பொலிஸாரையும் விசேட அதிரடிப் படையினரையும் அழைக்க நேரிட்டது - என்றார். (த-2)

# ஸ்ரீலங்கா மிரர், எக்ஸ் நியூஸ் முற்றுகைக்கு ஐ.நா. கவலை

கொழும்பு, ஜூலை 4

சிறிலங்கா மிரர் மற்றும் லங்கா எக்ஸ் நியூஸ் இணையத்தளங்களின் அலுவலகங்கள் திடீர் சோதனையிடப்பட்டு 9 ஊழியர்கள் கைது செய்யப்பட்டமைக்கு ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டுள்ளது.

மேற்படி இணையத்தளங்களின் அலுவலகங்கள் சோதனையிடப்பட்டதை ஐக்கிய நாடுகள் சபை அறிந்துள்ளதாக ஊடகவியலாளர்கள் சந்திப்பில் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மார்ட்டின் நெஸக்கி தெரிவித்துள்ளார்.

'நாம் கூறியிருப்பது போன்று இலங்கையில் மாத்திரமின்றி வேறு பல நாடுகளிலும் ஊடகவியலாளர்கள் தங்களது கடமையை எந்தவித தலையீடுகளுமின்றி செய்யக்கூடியதாக இருப்பது அவசியமாகும். இது இலங்கைக்கும் பொருந்தும்' எனவும் அவர் கூறினார்.

> ஊடகவியலாளர்கள் தங்களது கடமையை எந்தவித தலையீடுகளுமின்றி செய்யக்கூடியதாக இருப்பது அவசியமாகும். இது இலங்கைக்கும் பொருந்தும்.

மேற்படி இணையத்தளங்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு கண்டனம் தெரிவித்திருந்த ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா, ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல் மற்றும் துன்புறுத்தல்களின்றி தங்களது பணிகளை முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக இருக்க வேண்டுமெனவும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# மாநகர சபை மாநாட்டு மண்டபம் அரசியல் மேடையா என்ன?

### எதிரணி உறுப்பினர் விந்தன் சீற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ். மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் வேம்படி மகளிர் கல்லூரி விவகாரம் தொடர்பில் அதன் பழைய அதிபர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பிரதிநிதிகள், மாணவர்களுடன் மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கலந்துரையாடல் ஒன்றை நேற்று நடத்தியுள்ளார்.

இது மேயரின் அதிகார துஷ்பிரயோகமும் சட்ட விரோதமுமான செயற்பாடும் ஆகும். இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாநகர சபை எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம்.

இது தொடர்பில் அவர் உதயனுக்குத் தெரிவிக்கையில் -

மாநகர சபைக் கேட்போர் கூடமானது சபையின் உள் விவகாரங்கள், நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் மாதாந்தக் கூட்டங்கள் என்பவற்றுக்கு இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் மேயர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பொதுப் பிரச்சினைகளை விவாதிக்கும் இடமாக நேற்று மாற்றியுள்ளார்.

பாடசாலையின் புதிய அதிபராக உயர் கல்வி அமைச்சினால் உத்தியோக பூர்வமாக நியமிக்கப்பட்ட அதிபர் கடமையேற்றுள்ள நிலையில் அதனைக் குழப்பும் வகையில் தன்னிச்சையான செயற்பாட்டை இரகசியமாக நடத்திவருகிறார்.

புதிய அதிபரை பதவியேற்காது தடுப்பதற்கு மாநகர சபை முதல்வர் எடுத்த முயற்சி தோல்வியடைந்த நிலையில் இப்போது முதல்வர் புதிய குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார். இதற்காகவே மாநகர சபை உறுப்பினர்கள் எவருக்கும் தெரியாத வகையில் தன்னிச்சையாக கூட்டம் ஒன்றை மாநகர சபை முதல்வர் நடத்தியுள்ளார். இதனை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அரசியல் அதிகாரங்களை மேயர் தன்னிச்சையாக நடத்துவதற்கு கவலை தரும்விடயமாக உள்ளது என்று அவர் தெரிவித்தார். (த-10)

# மின்சார சபை ஊழியர்கள் நேற்று நள்ளிரவு முதல் வேலைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 4

நேற்று நள்ளிரவு தொடக்கம் 24 மணித்தியாலங்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை ஒன்றிணைந்த தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

சம்பளப் பிரச்சினையை தீர்க்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததால் இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படுவதாக இலங்கை மின்சார சபை ஒன்றிணைந்த தொழிற்சங்க முன்னணியின் செயற்குழு உறுப்பினர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

வேலை நிறுத்த காலத்தில் நாட்டின் பல பகுதிகளுக்கும் மின்சாரம் தடைப்பட வாய்ப்புள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் யார் எந்த வேலை நிறுத்தத்தை மேற்கொண்டாலும் 24 மணிநேரமும் தடையற்ற மின்சாரம் வழங்கப்படும் என மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகள் தங்களுடன் இணங்கியுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (த)

# ஆணின் சடலம் வவுனியாவில் மீட்பு

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் நகர சபைக்கு சொந்தமான திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்தில் உள்ள கிணற்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலத்தை வவுனியா பொலிஸார் மீட்டுள்ளனர். மாவட்ட நீதிவான் முன்னிலையில் சடலம் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கோவில்குளத்தைச் சேர்ந்த ஸ்ரான்லி பீரிஸ் (வயது-40) என்பவரது சடலமே அது என அடையாளம் காணப்பட்டுள்ளது. விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (த-400)

# ஐ.தே.க. சார்பில் போட்டியிட ஆளும்கட்சியினர் ஆர்வம்

கொழும்பு, ஜூலை 4

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களில் ஐ.தே.கவுடன் இணைந்து போட்டியிட விரும்பும் ஆளும் கட்சி அரசியல்வாதிகள் சிலர் தொடர்பாக ஐ.தே.க. தீர்மானம் எதையும் மேற்கொள்ளவில்லை என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.



ஆளும்கட்சி அரசியல்வாதிகள் சிலர் ஐ.தே.க. பட்டியலில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அவர்களில் சிலர் மாகாண சபைகளில் சில பதவிகளைக் கோரியுள்ளதாகவும் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை முதலமைச்சர் வேட்பாளர்களாக நிறுத்துவதற்கு ஐ.தே.க. தீர்மானித்துள்ளதாக வெளியான செய்திகள் குறித்துக் கேட்டபோது, இந்தத் தேர்தல் தொடர்பான தீர்மானங்கள் கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலேயே தீர்மானிக்கப்படும் என அவர் கூறினார். (த)

# விபசார நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த பெண் கைது

கொழும்பு, ஜூலை 4

கையடக்கத் தொலைபேசி வலையமைப்பின் மூலம் விபசார நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர் ஜூலை 12ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யமுயன்ற பொலிஸ் உத்தியோகத்தரின் கையைக் கடித்து விட்டுத் தப்பி ஓடிய இந்தப் பெண்ணை கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் மடக்கிப் பிடித்து கோட்டை நீதிவானிடம் முன்னிலைப் படுத்தினர்.

நேற்றுமுன்தினம் கொள்ளுப்பிட்டிப் ஆர்.ஏ.டி.மெல். மாவத்தையில் தொலைபேசி மூலம் பெண்களை ஏற்பாடு செய்து விபசார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பெண் ஒருவரை கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் சுற்றி வளைத்தனர்.

சிவில் உடையில் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் இந்தப் பெண்ணை அணுகி தனக்கு ஒரு பெண்ணை ஏற்பாடு செய்து தரும்படி கேட்டுள்ளார்.

குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரியிடம் ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொண்ட அந்தப் பெண் தொலைபேசி மூலம் பெண் ஒருவரை ஏற்பாடு செய்துள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தப் பெண்ணை கைது செய்ய முயன்ற போது அவர் அந்தப் பொலிஸ் அதிகாரியின் கையைக் கடித்து விட்டுத் தப்பி ஓடியுள்ளார்.

அவரைப் பின்தொடர்ந்து விரட்டிச் சென்ற பொலிஸார் தப்பி ஓடிய பெண்ணையும் அவருடன் இருந்த மற்றுமொரு யுவதியையும் கைது செய்துள்ளனர். இந்தப் பெண்களின் நடமாடும் விபசார நட வடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்ட சொகுசுக்கார் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றி உள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு பெண்களும் கோட்டை நீதிவான் திருமதி. கனிஸ்கா விஜேரத்ன முன்னிலையில் ஆஜர் செய்தபோதே இவருவரையும் இந்த மாதம் 12+ ஆம் திகதிவரை தடுப்புக் காவலில் வைக்கும்படி அவர் உத்தரவிட்டார்.

இந்த விபசார நடவடிக்கையின் பிரதான சூத்திரதாரி ஒருவரைக் கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-2)

# குவைத் விமான நிலையத்தில் இலங்கையர் ஐவர் கைது

### திருட்டில் ஈடுபட்ட குற்றத்துக்காக

குவைத் சிற்றி, ஜூலை 4

குவைத் விமான நிலையத்தில் கவச வாகனமொன்றிலிருந்து 60,000 குவைத் தினார்களைத் திருடிய குற்றச்சாட்டில் இலங்கையர்கள் ஐவர் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி வாகனம் இரு ஊழியர்களால் இயக்கப்பட்டது. பல்வேறு வங்கிகள், மற்றும் தொலைத்தொடர்பு நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட 570,000 தினார்கள் இந்த வாகனத்தில் இருந்தன. இந்த வாகனத்தைக் குவைத் சர்வதேச விமான நிலையத்தில் நிறுத்தி விட்டு மற்றொரு தொலைத் தொடர்பு நிறுவனத்தில் பணம் பெறுவதற்காக ஊழியர் ஒருவர் சென்றபோது அப்துல் அமீர் என இனங்காணப்பட்ட மற்றொரு ஊழியர் வாகனத்துடன் தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் இந்த வாகனம் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது. எனினும், அதிலிருந்து 60,000 குவைத் தினார் பணம் காணாமல் போயிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு உயர் அதிகாரிகள் முன்னுரிமை வழங்கினர். சந்தேக நபர்களை கைது செய்வதற்கு பல்வேறு குழுக்கள் நியமிக்கப்பட்டதுடன் பிரதான சந்தேக நபர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு தடைவிதிக்கப்பட்டு இந்த அறிவித்தல் அனைத்து எல்லைகளிலும் காட்சிப் படுத்தப்பட்டது.

சந்தேக நபர்களின் செல்லிடத் தொலைபேசி தொடர்பாடல்கள் செய்மதி மூலம் கண்காணிக்கப்பட்டன. இறுதியில் ஹவாலி பகுதியிலிருந்து சந்தேக நபர் தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொண்டமை கண்டறியப்பட்டது.

அதையடுத்து பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அந்த இடத்துக்கு விரைந்து சந்தேக நபரைக் கைது செய்தனர்.


தனது நாட்டைச் சேர்ந்த ஏனைய இருவருடன் இணைந்து இந்தத் திருட்டைத் தான் திட்டமிட்டதாகவும் 24.06. 2012 ஆம் திகதி இந்நடவடிக்கையை மேற்கொள்வதற்கு தீர்மானித்ததாகவும் விசாரணையின் போது, அந்தச் சந்தேக நபர் ஒப்புக்கொண்டார்.

வாகனத்திலிருந்து பணத்தைத் திருடியபின் தனது சகாக்களுடன் தொடர்பு கொண்டதாகவும் அவர்கள் 'எகைல்லா' பிரதேசத்தில் மற்றொரு நபரின் உதவியுடன் சிலநாட்கள் மறைந்திருந்ததாகவும் அவர் கூறினார்.

மற்றொரு நபரின் காதலி நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்ததால் அவர் வெளியேறுவதற்கு உதவுவதற்கு பணம் வழங்கியதாகவும் அப்பெண்ணுக்கும் 5000 தினார்களை வழங்கியதகாவும் பிரதான சந்தேக நபர் தெரிவித்தார். எனினும், அந்த நபரை பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் தேடிவந்ததால் அவர் தலைமறைவாகியிருந்தார்.

குழந்தைகளுக்கானபால்மா கொள்கலன் ஒன்றுக்குள் வைத்து தனது பெற்றோருக்கு 10,000 தினார்களை அனுப்பியதாகவும் பிரதான சந்தேகநபர் கூறினார். ஆனால், பாதுகாப்பு அதிகாரிகள், அந்தச் சரக்கு நிறுவனத்தை தொடர்புகொண்டு அந்தக்கொள்கலன் நாட்டைவிட்டு வெளியேறுவதை தடுத்ததுடன் அந்தப் பணத்தையும் கைப்பற்றினர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேற்றுமுன்தினம் விசேட பொலிஸ் குழுவினரால் எழுதுமட்டுவாழ் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான வெடிபொருள்கள் மீட்கப்பட்டன. (ங-6)

# நகரசபையைச் சீர்குலைக்கவே தொழிலாளர்களின் போராட்டம்

## வவுனியா நகரசபைப் பதில் தலைவர் தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 4

வவுனியா நகரசபையின் சுகாதாரத் தொழிலாளர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் அரசியல் ஆதாயத்தை அடைவதற்கான உள்நோக்கம் கொண்ட சிலரால் தூண்டிவிடப்பட்ட ஒன்றே. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள நகரசபை நிர்வாகத்தைச் சீர்குலைப்பதற்கான ஒரு முயற்சியே இது. சுகாதாரத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நகரசபை நடவடிக்கை எடுத்துள்ளநிலையில் எதற்காக இந்தப் போராட்டம் என்று புரியவில்லை- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வவுனியா நகரசபையின் பதில் தலைவரான எம்.எம்.ரதன்.

வவுனியா நகரசபைத் தொழிலாளர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் தொழிலாளர்களின் முக்கிய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கையுறைகள், சப்பாத்துகள் வழங்குவதும் மலசலகூடம், ஓய்வறை என்பன அமைப்பதும் இதில் அடங்கும். விரைவில் இவை நிறைவேற்றப்படவுள்ளன.

இந்த நிலையில் இவர்களின் போராட்டம் வேடிக்கையாகவுள்ளது.

மேலும் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சில் இருந்து கிடைக்கப்பெற்ற 04.11.2011 ஆம் திகதிய கடிதத்தில் நிரந்தர நியமனங்கள் வழங்குவதை உடனடியாக நிறுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் தொழிலாளர்களின் கோரிக்கைகளில் ஒன்றான பதில் கடமை புரியும் தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்பதை எம்மால் நிறைவேற்ற முடியாதுள்ளது.

தற்போது வவுனியா நகர மக்களின் உதவியுடன் கழிவுகளை அகற்றும் செயற்பாடுகளை நாம் மேற்கொண்டுள்ளோம். இதற்குப் பொது மக்களிடமிருந்து அதிகளவில் ஒத்துழைப்புக் கிடைக்கின்றமை மகிழ்ச்சி தருகின்றது.

எனவே சுகாதாரத் தொழிலாளர்கள் உண்மை நிலையை உணர்ந்து தமது போராட்டத்தைக் கைவிட்டுத் தமது பணிகளுக்குத் திரும்ப வேண்டும்- என்றார்.

(ங-க-400)

# பன்னிரண்டு பனடோல்களை பள்ளியில் விழுங்கிய மாணவன்

## தலைவலியால் வந்த வினை

புதுக்குடியிருப்பு, ஜூலை 4

திடீரென ஏற்பட்ட கடும் தலைவலி காரணமாக இரண்டு மணித்தியாலத்துக்குள் 12 பனடோல் வில்லைகளை பள்ளி மாணவன் ஒருவன் விழுங்கியதால் கடும் தலைச்சுற்று ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். இந்தச் சம்பவம் அண்மையில் புதுக்குடியிருப்பில் உள்ள பாடசாலையில் நிகழ்ந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

புதுக்குடியிருப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை ஒன்றில் தரம் ஒன்பதில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனுக்கு திடீரென கடுமையான தலைவலி ஏற்பட்டது. ஆனால் தலைவலி குறித்து அந்த மாணவன் ஆசிரியர்களுக்குத் தெரியப்படுத்தவில்லை. தலைவலிக்கு பனடோல்தான் மருந்து என்று தானாகவே முடிவெடுத்து, பாடசாலையில் 12 பனடோல் வில்லைகளை இடைவேளை நேரத்தில்- முற்பகல் 11.15 க்கும் பிற்பகல் 1.15க்கும் இடைப்பட்ட இரு மணி நேரத்தில் உட்கொண்டுள்ளான்.

இதனால் சற்றுநேரத்தில் சோர்வாகக் காணப்பட்ட அந்த மாணவனை ஆசிரியர் விசாரித்தபோது தான் அவன் பன்னிரண்டு பனடோல்களை விழுங்கிய விவகாரம் தெரிய வந்தது. உடனடியாகவே அந்த மாணவன் அருகில் உள்ள பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டான். அங்கு முதலுதவிச் சிகிச்சையின் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டான்.

அவன் மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பின்னர் வீடு திரும்பி விட்டதாக மருத்துவர் ரி.சத்தியரூபன் தெரிவித்தார்.

''மாணவர்கள் மட்டுமல்லாது அனைவருமே மருந்துகளைப் பயன்படுத்தும் போது அவதானமாக இருக்க வேண்டும். வைத்தியரின் பரிந்துரையின்றி மாத்திரைகளைப் பாவிப்பதைத் தவிர்க்க வேண்டும்'' என்றும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

(ங- க-20)

# முத்துமாரி அம்பாள் ஆலயங்களில் சிறப்பான பொங்கல் உற்சவங்கள்

முல்லைத்தீவு,ஜூலை 4

முல்லைத்தீவு நட்டாங்கண்டலில் அமைந்துள்ள முத்துமாரி அம்பாள் ஆலயங்களின் வருடாந்தப் பொங்கல் உற்சவங்கள் மிகவும் சிறப்பாக நடைபெற்றுள்ளன.

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் நட்டாங்கண்டல் குளத்தடியில் அமைந்துள்ள மிகவும் பழைமை வாய்ந்த முத்துமாரி அம்பாள் ஆலயம் மற்றும் நட்டாங்கண்டல் பாடசாலைக்கு அருகில் அமைந்திருக்கும் முத்துமாரி அம்பாள் ஆலயம் என்பவற்றின் வருடாந்தப் பொங்கல் உற்சவங்கள் கடந்த வெள்ளிக்கிழமை காலை விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி நடைபெற்றுள்ளன.

கிராமிய வழிபாட்டுமுறைப்படி பூசை வழிபாடுகள் இடம்பெற்று இரவு முத்துமாரி அம்பாளும் காத்தவராய சுவாமியும் வீதியுலா வந்தனர். மேலும் பண்டம் எடுத்து வழிபட்டு இரவுப் பொங்கல் விழா இடம்பெற்றதுடன் காவடி, தீமிதிப்பு, பாற்செம்பு போன்ற நேர்த்திக் கடன்களும் நிறைவேற்றப்பட்டன.

இந்த உற்சவங்களில் பல்வேறு இடங்களில் இருந்தும் பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டதுடன் இன்னிசை நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன. (க-6)

# கடைகளின் பெயர் மாற்றத்தில் இனிமேல் புதிய நடைமுறை

## வவுனியா நகரசபை முடிவு

நெளுக்குளம், ஜூலை 4

வவுனியா நகரசபைக்குச் சொந்தமான கடைகளில் பெயர் மாற்றத்தை மேற்கொள்ளும் போது இனிமேல் 12 வருடங்களுக்கான வாடகைப் பணத்தை மாத்திரம் முற்பணமாகச் செலுத்தினால் போதும் - இவ்வாறு வவுனியா நகரசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**வவுனியா நகரசபையின் பதில் தலைவர் எம்.எம்.ரதன் தலைமையில் இடம்பெற்ற ஆனி மாதத்துக்கான சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது**

இந்தக் கூட்டத்தில் வவுனியா நகரசபையின் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு மலசலகூடம், ஓய்வு அறை என்பன அமைப்பதென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வவுனியா நகரசபை ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். இவற்றுள் மலசலகூடம், ஓய்வு அறை என்பன முக்கியமாக இருந்தமையால் இதற்குத் தீர்வுகாணும் வகையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன் அங்காடி வியாபாரிகள் அனைவரும் நகரசபைக் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக இனம் காணப்பட்ட இடங்களில் மட்டுமே வியாபாரம் செய்தல் வேண்டும். அதற்கு மாறாக வியாபாரம் செய்பவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடவேண்டிய நிலை ஏற்படும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

> இதுவரை காலமும் 20 வருடத்துக்கான வாடகைப் பணமே முற்பணமாகப் பெறப்பட்டு வந்தது.

கடைப் பெயர்களை, உறவுமுறை உரித்துடையவர்கள் தகுந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து மாற்றிக்கொள்ளலாம். ஏனையவர்களுக்கு விசாரணை அறிக்கை மூலமே இந்த விடயம் தீர்மானிக்கப்படும் எனவும் முடிவெடுக்கப்பட்டது. அத்தோடு இதுவரைகாலமும் கடைப் பெயர் மாற்றத்தின் போது 20 வருட வாடகைப் பணத்தையே முற்பணமாகச் செலுத்தவேண்டியிருந்தது. தற்போது 12 வருட முற்பணத்தை மட்டும் செலுத்தினால் போதும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

(ங-க-402)

# ஒக்ரோபரில் நிரந்தர வீடுகள்

## அமதிபுரம் மக்களுக்கு விடிவு

அமதிபுரம் கிராம அலுவலர் பிரிவில் நிரந்தர வீடுகளை அமைக்கும் பணிகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று துணுக்காய்ப் பிரதேச செயலர் எஸ்.குணபாலன் தெரிவித்துள்ளார்.

அமதிபுரத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும் நிரந்தர வீடுகள் அமைக்கப்படாததால் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வந்தனர். அவர்களின் நீண்டநாள் கோரிக்கையின் பின்னர் தற்போது அமதிபுரம் கிராம அலுவலர் பிரிவில் 29 வீடுகளை அமைப்பதற்கான பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன. (ங-க-18)

# இந்த மாதம் இடம்பெறவுள்ள தாய், சேய் சிகிச்சைத் தினங்கள்

வவுனியா,ஜூலை 4

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இந்த மாதம் நடைபெறவுள்ள தாய், சேய் நல சிகிச்சைத் தினங்கள் தொடர்பான விவரங்கள் சுகாதார திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இன்று புதன்கிழமை கணேசபுரம் தாய், சேய் குடும்பத் திட்ட சிகிச்சை நிலையம், வைரவபுளியங்குளம் குழந்தைகளுக்கான சிகிச்சை நிலையம், நெளுக்குளம் சுகவனிதையர் சிகிச்சை நிலையம்.

நாளையதினம் மூன்றுமுறிப்பு தாய், சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம், கூமாங்குளம் தாய், சேய் குடும்பத் திட்ட சிகிச்சை நிலையம்.

7 ஆம் திகதி வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத் தாய், சேய் குடும்பத் திட்ட சிகிச்சை நிலையம்.

9 ஆம் திகதி கோவில்குளம் தாய், சேய் குடும்பத் திட்ட சிகிச்சை நிலையம், சமனங்குளம் தாய், சேய் குடும்பத் திட்ட சிகிச்சை நிலையம்.

10 ஆம் திகதி செக்கட்டிப்புலவு தாய், சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம், ஓமந்தை தாய், சேய் குடும்பத் திட்ட சிகிச்சை நிலையம், தோணிக்கல் குழந்தைகளுக்கான சிகிச்சை நிலையம்.

11 ஆம் திகதி பட்டாணிச்சூர் கர்ப்பவதிகளுக்கான சிகிச்சை நிலையம், பாலமோட்டை தாய், சேய் சிகிச்சை நிலையம்.

12 ஆம் திகதி சாஸ்திரி கூழாங்குளம் தாய், சேய் குடும்பத்திட்ட நிலையம், கல்மடு தாய், சேய் குடும்பத் திட்ட சிகிச்சை நிலையம்.

13 ஆம் திகதி பட்டாணிச்சூர் குழந்தைகளுக்கான சிகிச்சை நிலையம்.

14 ஆம் திகதி வவுனியா சு.வை.அதிகாரி அலுவலகம் தாய், சேய் குடும்பத் திட்ட சிகிச்சை நிலையம்.

16 ஆம் திகதி தவசிகுளம் தாய், சேய் குடும்பத் திட்ட சிகிச்சை நிலையம், இராஜேந்திரகுளம் தாய், சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம், வவுனியா நகரம் குழந்தைகளுக்கான சிகிச்சை நிலையம், ஈச்சங்குளம் சுகவனிதையர் சிகிச்சை நிலையம்.

18 ஆம் திகதி தோணிக்கல் கர்ப்பவதிகளுக்கான சிகிச்சை நிலையம், மகாறம்பைக்குளம் கர்ப்பவதிகளுக்கான சிகிச்சை நிலையம், இறம்பைக்குளம் குழந்தைகளுக்கான சிகிச்சை நிலையம், சமனங்குளம் சுகவனிதையர் சிகிச்சை நிலையம்.

19 ஆம் திகதி பண்டாரிக்குளம் தாய், சேய் குடும்பத் திட்ட சிகிச்சை நிலையம், மகாறம்பைக்குளம் தாய், சேய் குடும்பத் திட்ட சிகிச்சை நிலையம்.

21 ஆம் திகதி வவுனியா சு.வை.அதிகாரி அலுவலகம் தாய், சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம்.

23 ஆம் திகதி சாந்தசோலை தாய், சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம்.

24 ஆம் திகதி பூந்தோட்டம் தாய், சேய் குடும்பத் திட்ட சிகிச்சை நிலையம்.

25 ஆம் திகதி மகாறம்பைக்குளம் கர்ப்பவதிகளுக்கான சிகிச்சை நிலையம், வவுனியா சு.வை.அதிகாரி அலுவலகம் சுகவனிதையர் சிகிச்சை நிலையம்.

26 ஆம் திகதி சேமமடு தாய், சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம், ஈச்சங்குளம் கர்ப்பவதிகளுக்கான சிகிச்சை நிலையம்.

28 ஆம் திகதி வவுனியா சு.வை. அதிகாரி அலுவலகம் தாய், சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம். (க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 போராளிகள்...

கூறி தடுத்து வைக்கப்பட்டுப் பின்னர் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட அந்த 16 பேரும் இன்று விடுதலை செய்யப்படுகின்றனர்.

பொலநறுவையில் உள்ள சேனப்புர புனர்வாழ்வு முகாமில் புனர் வாழ்வுபெற்ற இவர்கள் அங்கு வைத்து உத்தி யோகபூர்வமாக விடுதலை செய்யப்படவுள்ளனர் என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (த-4)

## இலங்கை...

இவரும் இவரது குடும்பத்தினரும் தற்போது இலங்கைக்கு நாடு கடத்தப்படும் நிலையிலுள்ளனர். இலங்கைப் படைகள் கொடூரங்களைப் புரிந்துள்ளதை உறுதி செய்துள்ள இந்த நீதிமன்றத் தீர்ப்பு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

பத்தாயிரக்கணக்கான காணாமற்போதல்கள், நிறுவனமயப்படுத்தப் பட்ட சித்திரவதைகள் தொடர்பாக அறிக்கையில் அடங்கியுள்ள விரிவான சாட்சியங்களும், ஆதாரங்களும் இலங்கைக் கடற்படையை உள்ளடக்கிய இலங்கைப் பாதுகாப்புப் படைகள் இலங்கையின் பரந்துபட்ட, ஒழுங் கமைக்கப்பட்ட மக்கள் மீதான தாக்குதல்களுக்கு உதவியாக இருந்துள் ளன என்று தனது 50 பக்கத் தீர்ப்பில் நீதிபதி ஜோன் ஓ கீவ் தெரிவித்துள் ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள கனேடிய தமிழ்க் காங்கிரஸ் பேச் சாளர் டேவிட் பூபாலபிள்ளை, இலங்கைப் படைகள் போர்க்குற்றங்களை இந்த நீதிமன்றத் தீர்ப்பு உறுதி செய்துள்ளது எனவும், இதுகுறித்து விசார ணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

முன்னாள் கொமடோர் குருபரன், 1981இல் இலங்கைக் கடற்படை யில் ஒரு மின் பொறியியலாளராக இணைந்த தாம் ஒரு தமிழர் என்பதால் பல சவால்களை எதிர்நோக்கினார் எனக் கூறியுள்ளார்.

2001 ஆம் ஆண்டில் இலங்கைக் கடற்படையினரின் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களைத் தருமாறு விடுதலைப் புலிகள் கோரிய போதும் அதை தாம் நிராகரித்து விட்டார் என்றும் கொமடோர் குருபரன் தெரிவித்துள்ளார்.

பின்னர் 2008 ஆம் ஆண்டில் மீண்டும் அதே கோரிக்கை விடுக்கப்பட் டது எனவும் தான் தொலைபேசி மூலம் மிரட்டப்பட்டார் எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

இருந்தாலும் தன்னை இலங்கைக் கடற்படையினர் புலிகளின் அனுதா பியாகவே சந்தேகித்தனர் எனவும், இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் தாம் கண்காணிக்கப்பட்டார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஓய்வுபெற்ற ஒரு மாதத்தின் பின்னர், அரச ஆதரவு கருணா குழு வினரால் தனது மனைவி கடத்தப்பட்டு, பெரும்தொகையான பணத்தை கப்ப மாக அவர்கள் கோரினர் எனவும், இல்லையேல் குடும்பத்தை முற்றாக அழித்து விடுவோம் என்று மிரட்டினர் எனவும் கொமடோர் குருபரன் கூறியுள்ளார்.

இதையடுத்து இவர் அமெரிக்கா சென்று கனேடிய எல்லையில் அடைக்கலம் கோரியுள்ளார். கனேடிய குடிவரவு அதிகாரிகள் இவர் போரில் ஈடுபடவில்லை என்றும், தனிப்பட்ட ரீதியான போர்க்குற்றங்க ளைச் செய்யவில்லை என்றும் கண்டறிந்துள்ளனர்.

## ஈழத்தாயும்...

6 இளைஞர்களை வண்டியில் ஏற்றிக் கொண்டும், அந்த இளைஞர் கள் வைத்திருந்த இரண்டு இரு சக்கர வாகனங்களை யும் தங்களது வாகனத்தில் எடுத்துக் கொண்டும் சென்று விட்டதாகக் தெரிவிக்கப்பட்டது.

சுரேஷ்குமார் (3 பெண் குழந்தைகளின் தந்தை), ரமேஷ் (திரு மணமாகாத வர்), உமேஸ் (திருமணமாகாதவர்), சுயா (திருமணமா காத வர்) சுதர்சன் (திருமணமானவர், மனைவியும் ஒரு மகளும் இலங்கையில் உள்ளனர்), சுரேஷ் (திருமணமாகாதவர்) ஆகியோரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

இந்தச் செய்தி காவாங்கரை முகாமில் உள்ளவர்களுக்குத் தெரிய வர புழல் பொலிஸ் நிலையம் முன்பு சுரேஷ் குமாரின் மனைவியும், அவரது 3 பெண் குழந்தைகளும் தங்களது உடலில் மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டனர். அவர்களுக்கு ஆதரவாக முகாம் வாசிகளும் போராட்டத்தில் குதித்தனர். இதனால் அந்த பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

போராட்டம் வலுக்கவே, முகாமிலிருந்து 6 இளைஞர்களையும் விசார ணைக்கு அழைத்துச் சென்றதை ஒப்புக் கொண்டதுடன், 4 இளைஞர் களை விசாரணைக்குப் பின்பு விடுதலை செய்வதாகப் பொலிஸார் உறுதி யளித்தனர். அதன்படி சுரேஷ் குமார், உமேஸ், சுயா, சுரேஷ் ஆகியோர் விடுவிக்கப்படவுள்ளனர்.

இதற்கிடையே, பொலிஸார் விசாரணையில் ரமேஷ், சுதர்சன் ஆகிய இருவரும் இந்தியாவில் உள்ள ஈழ அகதிகளை கேரளா வழியே ஆஸ்தி ரேலியாவுக்கு படகு மூலம் அனுப்பப் பணம் பெற்றுக் கொண்டதை ஒப் புக் கொண்டதால் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்துள்ளதாகப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர். (த)

## 10 இந்திய...

முன்தினம் திங்கட் கிழமை இரவு மீன் பிடி யில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது, ஒரு இழு வைப் படகு பழுதடைந்த நிலையில் மற் றைய இழுவை படகில் பயணித் துக் கொண்டிருந்த குறித்த மீன வர்களைக் கடற்படையினர் கைது செய்த நிலையில் தலை மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

விசாரணைகளின் பின்னர் இந் திய மீனவர்களைத் தலை மன்னார் பொலிஸார் நேற்று மன்னார் மாவட்ட நீதவான் ஏ.யூட்சன் முன் னிலையில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது குறித்த மீனவர் களை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறி யலில் வைக்குமாறு நீத வான் உத்தரவிட்டார். (த-)

## யாழ்....

பதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டமை மற் றும் சுகாதார அமைச்சில் இருந்து வந்த விசாரணை அதிகாரிகள் குழு இரண்டு வாரங்களாகின்ற போதி லும் விசாரணை அறிக்கையை இன்றுவரை வெளியிடாமை ஆகிய விட யங்களைக் கண்டித்து இந்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட வுள்ளதாக யாழ்.வைத்திய சங்கம் தெரிவித் தது. (த-4)

## இந்தியாவை...

வெளிநாடுகள் பல அழுத்தம் கொடுத்தன. ஆனால், இந்தியா அவ்வாறு அழுத்தம் கொடுக்காமல், மிகவும் அமைதியாக இலங்கை அரசுக்கு ஒத்துழைப்புகளை வழங்கியது.

இந்தியாவின் எதிர்கால நட வடிக்கைகளை இராஜதந்திர ரீதி யாக அணுகுவதற்கு நாம் தீர் மானித்துள்ளோம்.அதுவே புத்தி சாலித்தனமானதும் கூட என்று ஜனாதிபதியின் செயலாளர் மேலும் கூறியுள்ளார். (த)

## மனித...

வர்கள் ஆஸ்திரேலியா வுக்குச் செல்வதற்கான இடைத்தங்கல் நிலையமாக இலங் கையை அடையாளம் கண்டுள்ள னர். இது ஒரு புதிய போக்காகும்' என குடிவரவு, குடியகல்வு பணி யகத்தின் கடத்தல் முறியடிப்பு பிரிவின் தலைவரான பிரபாத் அளுத்கே தெரிவித்தார்.

மனிதக்கடத்தலை தடுப்பது தொடர்பாக இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற கலந் துரையாடலொன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

உயிர்புள்ளியியல் அடிப்படை யிலான கடவுச்சீட்டுகளை அறிமுகப் படுத்துவதற்கு இலங்கைக் குடி வரவு குடியகல்வு திணைக்களம் திட்டமிட்டுள்ளதாகவும் மனிதக் கடத்தலை கட்டுப்படுத்த இது உத வும் எனவும் அவர் கூறினார். (த)

## அச்சத்தால்...

தவர்களுடன் சேர்த்து கிறிஸ்மஸ் தீவில் தற்போது 1,475 அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, மெராக் கப்பலில் இந்தோனேசியாவில் தடுத்து வைக் கப்பட்டு, ஆஸ்திரேலியாவில் குடியேறுவதற்காக காத்திருக்கும் நிமால் என்ற தமிழ் அகதி, இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்து துன்புறுத்தப் பட்டு வருவதாகக் கூறியுள்ளார்.

இலங்கையின் வடக்கு கிழக்கில் துன்புறுத்தல்கள் தொடர்கின்றன. அங்கு பல பிரச்சினைகள் உள்ளதால் தான், உயிராபத்துள்ள பயணத்தை மேற்கொண்டு ஆஸ்திரேலியா நோக்கித் தமிழ் அகதிகள் வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஆஸ்திரேலியக் குடிவரவு சட்டவாளரான இயன் றின் ரோல், இந்தக் கருத்து உண்மையானது என்று ஒப்புக் கொண்டுள்ளார். இலங்கை அரசு தமிழர்களைத் துன்புறுத்துவதால் தமிழர்கள் அகதிகளாக வரக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த ஆண்டில் 1344 இலங்கையர்கள் படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவை வந்தடைந்துள்ளனர்.2009ஆம் ஆண் டில் 736 பேரும், 2010இல் 536 பேரும், 2011இல் 211 பேரும் இலங்கை யில் இருந்து படகுகள் மூலம் ஆஸ்திரேலியா வந்துள்ளனர். இவர்களில் பெரும் பாலானோர் தமிழர்களாவர்.

## புலிகளுக்கு...

தகவல்களை இவர்கள் வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேக நபர்களுக்குப் பரிமாறியதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக வவு னியா பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி எரிக் பெரேரா தெரி வித்துள்ளார்.

அதேவேளை, வவுனியா சிறைச்சாலையில் கைதிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக்காவலர்களை மீட்கும் நடவடிக்கையை சில சட்டவாளர்கள் ஒளிப்படம் எடுத்ததாகவும், அவர்களின் கைத்தொலை பேசிகள் பறிமுதல் செய்யப்பட்டு அவற்றில் இருந்த காட்சிகள் அழிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இதற்கிடையே, வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட் டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேகநபர்கள் 28 பேரும் புலம் பெயர் தமிழர்களுடன் செய்மதித் தொலைபேசி மூலம் தகவல்களைப் பரிமாறியுள்ளதாகச் சிறப்பு அதிரடிப்படைக் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் சந்திரசிறி ரணவான தெரிவித்துள்ளார். (த)

## புலிகளை...

- இவ்வாறு தேசப்பற் றுள்ள தேசிய இயக்கம் பரபரப்பான குற்றச்சாட்டை முன் வைத்துள்ளது.

புலிகளின் சர்வதேச வலை யமைப்பு இன்று பலமாக உள்ளது. உள்நாட்டிலும் புலிகளின் பலம் முழுதாகக் குன்றவில்லை. வவு னியா சிறைச்சாலை சம்பவம் இத னையே எடுத்துக்காட்டுகின்றது என்றும் அந்த அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

மேனனின் உபதேசமோ அல் லது ஜெயலலிதா அம்மையாரின் உபதேசமோ எமக்குத் தேவை யில்லை என்று தேசப்பற்று அமைப் பின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரி வித்தார்.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனின் இலங்கை விஜயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட தேசப்பற் றுள்ள தேசிய இயக்கத்தின் தலை வர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் இலங்கையில் ஒரு கதை யையும், இந்தியாவில் மற்றுமொரு கதையையும் கூறுகின்றார்.

மேனனின் எந்தவொரு உபதேச மும் எமக்குத் தேவையில்லை. எமது நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு எங்களுக் குத் தெரியும்.

வட மாகாணசபைத் தேர்தலை நடத்திமுடிப்பதற்கு இந்தியா ஏன் அவசரப்படுகின்றது. அமெரிக்கா ஏன் இந்த விடயத்தில் அதிக நாட்டம் காட்டுகின்றது. வடக்கில் பூரண அமைதி ஏற்பட்ட பின்னரே அங்கு தேர்தலை வைக்க வேண் டும். வடக் கில் இன்னும் முழுமை யான அமைதி திரும்பவில்லை. புலிகளின் அச்சுறுத்தல் உள்ளது.

புலிகளின் சர்வதேச வலைய மைப்பு பலமாக இயங்கி வருகின் றது. உள்நாட்டிலும் புலிகளின் செயற்பாடுகள் முழுமையாக ஒழியவில்லையென்பதையே வவு னியா சிறைச்சாலைச் சம்பவம் எடுத்துக்காட்டுகின்றது.

எனவே, அரசு வடக்கிலிருந்து படைமுகாம்களை அகற்றக் கூடாது என்பதுடன் இராணுவப் பலத்தை மேலும் அதிகரிக்க வேண்டும். இவற்றைக் குறைக் குமாறு எவர் சொன்னாலும் அது குறித்து அலட்டிக்கொள்ளக் கூடாது.

இந்திராகாந்தி அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் புலிகளுக்கு ஆயுதம் வழங்கி அந்த அமைப்பை அவர் வளர்த்துவிட்டார். அதனால் இந்தியா பல தீமைகளைச் சந் தித்தது. இன்று இந்தியா எமது நாட்டு விவகாரங் களில் மூக்கை நுழைப்பது புலிகளை அரசியல் ரீதியில் பலப்படுத்தும் நடவடிக் கையாகவே அமைந்துள்ளது என எண்ணத் தோன்றுகின்றது - என்றார்.

## கொழும்பில் அவசரமாக....

கட்சிகளுக்கிடையில் இன்று நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் கொழும்பிலுள்ள கூட்டமைப்பின் தலைமை அலு வலகத்தில் முற்பகல் 10 மணியள வில் இந்தச் சந்திப்பு நடைபெறும் எனத் தெரிய வருகின்றது.

கிழக்கு மாகாணசபைத் தேர்த லில் போட்டியிடுவது, கூட்டமைப் பைப் பலப்படுத்தும் நோக்கில் அதி உயர்பீடமொன்றை அமைக் கும் விடயம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை ஆகியவை உட்பட தமிழர் தாயகத்தில் இன்று நிலவும் பிரச்சினைகள் குறித்து இச்சந்திப்பில் முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

அதேவேளை, இந்தியத் தேசி யப் பாதுகாப்பு ஆலோசகருடன் தாம் கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பிலும், அதற்கு மேனன் தந்த பதில்கள் குறித்தும் சம்பந்தன் கூட்டமைப்பு உறுப்பினர்க ளுக்கு இதன்போது தெளிவுபடுத்து வார் எனத் தெரியவருகின்ற அதே வேளை, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கூட்டமைப்பின் வகி பாகம் குறித்தும் ஆராயப்படவுள் ளது என அறியமுடிகின்றது.

அத்துடன், தீர்வு விடயத்தில் அரசு இறுக்கமான போக்கைக் கடைப்பிடித்து வருவதால் தீர் வைப் பெற்றுக் கொள்வதற்காகத் தாம் அடுத்த கட்டமாக முன்னெடுக் கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கிடையே விரிவான தொரு கலந்துரையாடல் இடம்பெறு மென்றும், அதி உயர்பீடம் அமைப் பது தொடர்பில் உறுதியானதொரு முடிவு எடுக்கப்படும் என்றும் தெரியவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பைப் பலப்படுத்தும் நோக்கில் அதை அரசியல் கட்சியாகப் பதிவு செய்தல், அதி உயர் சபையொன்றை அமைத்தல், மாவட்டக் கிளைகளை உருவாக்கல் ஆகிய விடயங்கள் தொடர் பில் ஐந்து பங்காளிக் கட்சிகளும் அண்மைக் காலமாகப் பேச்சு நடத்தி வருகின்றன.

அனைத்துக் கட்சி உறுப்பினர் களையும் உள்ளடக்கிய வகையில் அதி உயர் சபையொன்று அமைப் பதற்கு கட்சிகளுக்கிடையே கொள் கையளவில் அண்மைய சந்திப்பு களின் போது இணக்கம் காணப்பட் டது. இந்த விடயங்கள் தொடர்பில் இதற்கு முன்னர் இடம்பெற்ற இரண்டு கூட்டங்களிலும் கலந்துரையாடப் பட்டது.

அதன் தொடர்ச்சியாக மூன்றாங் கட்ட சந்திப்பாக இக்கூட்டம் இருக் கின்ற போதிலும், இதன்போது விசேட முக்கிய விடயங்கள் குறித்து கலந்து ரையாடப்படவுள்ளன.

[illegible] மையாகத் தாக்கப்பட்டுள்ள சம்ப வம், வடக்கு, கிழக்கில் தொடர்ச்சி யாக நிலங்கள் ஆக்கிரமிக்கப்படும் சம்பவங்கள் அரங்கேற்றப்பட்டு வரும் நிலையிலேயே இந்த அவ சர கூட்டமும் கூடுகின்றமை குறிப் பிடத்தக்கதாகும்.

தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், செயலாளர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந் திரன் ஆகியோரும், தமிழர் விடு தலைக் கூட்டணி சார்பில் அதன் தலைவர் வி.ஆனந்தசங்கரி, ரெலோ அமைப்பின் சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கல நாதன், அரசியல் பிரிவுத் தலைவர் சிவாஜிலிங்கம் ஆகியோரும், ஈ.பி.ஆர். எல்.எவ். சார்பில் அதன் செயலாளர் சுரேஷ்பிரேமச்சந்தி ரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோ ரும், புளொட் அமைப்பின் சார்பில் அதன் தலைவர் சித்தார்த்தன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

அதேவேளை, நாளை 5ஆம் திகதி கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

## சிறுமி மீது...

தச் சம்பவம் இடம்பெற்ற தாகத் தெரிவிக்கப்பட் டது.

குறித்த தினம் இரவு சிறுமி வீட்டில் இருந்த போது அவரின் தாயாரை இரண்டாவது தாரமாகத் திருமணம் செய்துகொண்ட நபரே வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக சிறுமி வாக்குமூலத்தில் தெரி வித்துள்ளார். இதனடிப்படையில் குறித்த குடும்பஸ்தரை மறுநாள் பொலிஸார் கைது செய்து ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்டது டன் குறித்த சிறுமியை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த வைத் தியசாலையில் அனுமதித்தனர்.

சந்தேக நபர் நேற்று கிளி நொச்சி மாவட்ட நீதிவான் நீதி மன்ற நீதிவான் பெ. சிவகுமாரின் வாசஸ்தலத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டார். அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மக்களுக்குச் சேவை செய்ய பட்டதாரிகள் தயாராக வேண்டும்

பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்று வெளிவரும் பட்டதாரிகள் உடனடியாகவே அவர்களின் பட்டங்களுக்கு ஏற்ப தாம் விரும்பும் தொழில் துறைகளில் இணைந்து கொள்ள முடியாமல் இருப்பதற்கான காரணம் என்ன?

ஒன்றில் பட்டதாரிகள் வெளிவரும் போதே தமக்கு விருப்பமான துறைகளில் இணைவதற்கான பயிற்சி பெற்றவர்களாய் இல்லாமை, அல்லது தொழில் துறைகளில் போதிய அளவு வேலை வாய்ப்புகள் இல்லாமை என்பதுடன் வேறு காரணங்களும் இருக்கலாம். பல்கலைக் கழகங்களில் படிக்கும் போதே பிற்காலத்தில் அவர்கள் தேர்ந்தெடுக்கக் கூடிய துறைகளுக்கான பயிற்சிகளும் பெற்றுக் கொள்வதற்கான வழிகளும் வசதிகளும் பாடத் திட்டங்களில் இணைக்கப்பட்டிருப்பது அவசியம்.

மருத்துவம், பொறியியல் மற்றும் சட்டத்துறைகளில் பயிலும் மாணவர்கள் பட்டம் பெற்று வெளியில் வந்ததும் அரச துறைகளில் அல்லது தனியார் துறைகளில் இணைந்து கொள்ள வாய்ப்பிருந்தாலும், அவர்களும் முழுஅளவில் தனித்துவமாகச் செயல்படுவதற்கும் படிப்படியாக முன்னேறுவதற்கும் முறையான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள முடிகிறது.

இதே போன்ற ஒரு நிலைமை ஏனைய படிப்புகள் தொடர்பாகவும் இருப்பது நல்லது என்றே கருத வேண்டியிருக்கின்றது. அந்த நிலைமை இல்லாமை தான் பட்டம் பெற்ற பிறகும் அரச துறைகளையே தொழிலுக்காக எதிர்பார்த்து ஆயிரக்கணக்கான இளைஞர்களும் இளம் பெண்களும் காத்திருக்க நேர்கின்றது.

ஒரு காலத்தில் ஜே.எஸ்.சி என்று அழைக்கப்பட்ட கனிஷ்ட தராதர பத்திரம் பெற்ற எவருமே ஏதாகிலும் ஒரு துறையில் இணைந்து கொள்ள வாய்ப்பிருந்தது. பின்னர் கல்வித் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாகவும் தொழில்துறைகளில் அதிநவீன அம்சங்கள் புகுத்தப்பட்டதாலும் ஏதாகிலும் துறையில் பட்டம் பெற்றவர்களுக்கே வேலை வாய்ப்பு என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வெளியேறும் மாணவர் எண்ணிக்கைகளுக்கும் அவர்களுக்கான தொழில் வாய்ப்பு எண்ணிக்கைகளுக்கும் இடையில் பெரும் இடைவெளி இருப்பதனாலேயே பட்டதாரிகள் பல வருட காலம் தொழில் இன்றிக் காத்திருக்க நேர்கின்றது.

அரச துறைகளிலும் சரி, தனியார் துறைகளிலும் சரி பல்கலைக்கழகங்களில் இருந்து வெளி வரும் இளம் சந்ததியினர் சிரமமின்றியும், சுயவிருப்பத்தோடும் இணைந்து கொள்ளும் வகையில் தூர நோக்குடனான ஒரு கல்வி முறையை அல்லது திட்டத்தை அரசு வகுப்பது அவசியம். இல்லையெனில் வருடம் தோறும் பல்கலைக் கழகங்களில் இருந்து வெளிவரும் ஆயிரக்கணக்கான இளம் சந்ததியினரின் பிரச்சினை அச்சுறுத்தலாகவே இருக்கப் போகின்றது.

நாடு முழுவதுமாக தற்போது 50 ஆயிரம் பட்டதாரிகள் அரச துறைகளில் பயிலுநர்களாக அண்மையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் மட்டுமே நேற்று முன்தினம் வேலையற்ற பட்டதாரிகள் 2 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு பயிலுநர் நியமனங்கள் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த நிகழ்வொன்றில் வழங்கப்பட்டுள்ளன. வெகுகாலமாக காத்திருந்தபின் இந்த நியமனங்களைப் பெற்றுக் கொண்டுள்ள இளம் சந்ததியினர் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைந்துள்ளார்கள். அரச சேவைகளில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்பும் நோக்குடன் இந்த நியமனங்கள் வழங்கப்படுவதாக அங்கு தலைமைவகித்து உரை நிகழ்த்திய யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டுவரையில் பட்டம் பெற்றவர்களுக்கே இந்த நியமனங்கள் வழங்கப்படுகின்றன. யாழ்.மாவட்டத்தில் 14 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு நியமனம் பெறும் இவர்கள் புள்ளிவிவரங்கள் பெறும் தகவல் சேகரிப்பு பணிகளிலேயே ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அதன் பின்னர் பல்வேறு அமைச்சுக்களில் குறிப்பாக பொருளாதார அபிவிருத்தி, சிறுவர் மற்றும் மகளிர் விவகாரம், தெங்கு பொருள், விளையாட்டு போன்ற அமைச்சுக்களில் உள்ளீர்க்கப்படுவார்கள் என்று அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

அது மட்டுமல்ல அரச அதிபர் அங்கு நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்ட பட்டதாரி பயிலுநர்களுக்கு வழங்கிய அறிவுரையில் இது எங்கள் பிரதேசம், எங்களுடைய மக்கள், எங்களுடைய சமூகம் என்ற எண்ணத்தில் விசுவாசத்துடன் கூடிய தியாகமனப்பான்மையுடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்ற வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்.

இங்கு இன்னொருவிடயத்தையும் நாம் குறிப்பிடுவது அவசியம். நியமனம் பெற்ற அனைவரும் ஒரே கட்சி, ஒரே கொள்கை உடையவர்களாய் இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் தொழில் என்று வரும் போது தொழில் தருநருக்கும், தொழிலுக்கும் விசுவாசமாகப் பணியாற்ற வேண்டியது தொழிலைப் பெற்றுக் கொள்பவரின் கடமை. அரச துறைப் பணி என்பது பொது மக்களுக்கான சேவை என்பதை நினைவில் நிறுத்தி புதிதாக நியமனம் பெறும் பட்டதாரிகள் கடமை புரிய தயாராக வேண்டும்.

அரச பணியாளர்களுக்கு மக்கள் வரிப்பணத்தில் இருந்து தான் வேதனம் வழங்கப்படுகின்றது. அரச பணி புரிபவர்கள் அரசியல் வாதிகளைப் போல் இயங்க முடியாது -இயங்கவும் கூடாது.

## உயர்தேசிய டிப்ளோமா பட்டதாரிகளுக்கு வழங்கிய உறுதிமொழிக்கு என்னாயிற்று?

### தம்மைப் புறக்கணிக்காது நியமனம் வழங்குமாறு அவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 4

உயர்தேசிய டிப்ளேமா கற்கை நெறியாளர்களுக்கான நியமனம் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என யாழ். அரச அதிபர் தெரிவித்திருப்பது எமக்கு ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் அளிக்கிறது என உயர்தேசிய கணக்கியல், வர்த்தக, முகாமைத்துவ பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2012 ஆம் ஆண்டு பட்டதாரிகள் நியமனத்தில் யாழ்ப்பாணத்தில் மட்டும் எமது பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இதனை நீக்கி எமக்கு நியமனம் வழங்குமாறு கோரி அமைதிப் பேரணியாகச் சென்று யாழ். அரச அதிபருக்கும் ஜனாதிபதிக்கும் இரண்டு மனுக்களைக் கையளித்தோம். அதனை ஏற்றுக்கொண்ட அரச அதிபர் உங்களுக்கான நியமனம் வழங்கப்படும் என உறுதியளித்திருந்தார். இப்போது பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பட்டக் கற்கை நெறிகளைக் கொண்டுள்ள நாங்கள் இதன் காரணமாக பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகி உள்ளோம்.

1990 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதிய பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 46/90 ஆம் இலக்க சுற்று நிருபத்தில் 4 வருட காலப் பகுதிகளைக் கொண்ட மேற்படி கற்றை நெறிகள் பல்கலைக்கழக பட்டத்தின் சாதாரண சித்திக்குச் சமமானவை என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அரச துறைகளில் இவர்களுக்கான நியமனங்களும் வழங்கப்பட்டு வந்துள்ளன.

2005 ஆம் ஆண்டு நாடாளவிய ரீதியில் பட்டதாரிகளை ஆள்சேர்ப்பு செய்யும் போது எமது பட்டதாரிகளும் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

இதன் அடிப்படையிலேயே பட்டதாரி பயிலுநர் நியமனத்துக்காக எமது கற்கை நெறியாளர்களும் விண்ணப்பித்து இருந்தனர்.'

எனினும் 2012 ஆம் ஆண்டு பட்டதாரிகள் நியமனத்தில் எமது பட்டதாரிகளின் நியமனங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர், செயலாளர், மேலதிக செயலாளர் ஆகியோரை நேரில் சந்தித்து எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி இருந்தோம்.

மேற்படி கற்கை நெறியை பூர்த்தி செய்த நாம் நியமனம் கிடைக்கும் என காத்திருந்த நிலையில் எதுவித முன்னறிவித்தலுமின்றி எமக்கான நியமனத்தை மறுத்தமை அநீதியான செயலாகும்.

எனவே எமது பரிதாப நிலையை யாழ். மாவட்டத்தில் உள்ள புத்திஜீவிகள் கருத்தில் கொண்டு எமக்கான நியமனத்தைப் பெற்றுத்தர வேண்டும் - என்றுள்ளது. (10)

### சாரணர் ஆணையாளர் மாநாடு

இலங்கை சாரணர் சங்கத்தைச் சேர்ந்த சாரண மாவட்ட ஆணையாளர்களுக்கான மாநாடு எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் மீரிகம வி.தஸநாயக்கா பயிற்சி நிலையத்தில் நடைபெறும் என பிரதம சாரண ஆணையாளர் சந்திரசேகர வட்டுவாங்கல அறிவித்துள்ளார். (த-9)

### ஆனைக்கோட்டை அடைக்கலமாதா வீதியை புனரமைக்கக் கோரிக்கை

வலி.தென்மேற்கு,ஜூலை 4

ஆனைக்கோட்டை உயரப்புலம் அடைக்கலமாதா தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு அடைக்கலமாதா வீதியை விரைவாகப் புனரமைத்துத் தருமாறு ஆனைக்கோட்டையில் உள்ள பொது அமைப்புகள் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளரைக் கோரியுள்ளன.

தேவாலயத்துக்கு அருகில் உள்ள அடைக்கலமாதா வீதி வழியாக திருச்சொரூப பவனி நடைபெறவுள்ள நிலையில் மேற்படி வீதி, நடமாட முடியாதவாறு சேதமடைந்து காணப்படுகின்றது

மேற்படி வீதியை, சொரூபப் பவனியில் கலந்துகொள்ளும் மக்களின் நலன் கருதியும் தேவாலயத்துக்கு வருகைதரும் பாடசாலை மாணவர்களின் நலன்கருதியும் புனரமைத்துத் தருமாறு பொது அமைப்புகள் தவிசாளரைக் கோரியுள்ளன. (த-118)

## மும்மொழிப் புலமையாளர்கள் பெயர்ப்பட்டியல் தயாரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

மும்மொழிகளிலும் மொழிபெயர்ப்பு ஆற்றல் கொண்டவர்களினது தேசிய பெயர்ப்பட்டியல் ஒன்றைத் தயாரிக்க மும்மொழி இலங்கைக்கான ஜனாதிபதி செயலணி நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரதான நோக்கம் எதிர்வரும் 10 ஆண்டுகளில் இலங்கையை மும்மொழி பேசும் இனமாக மாற்றும் ஜனாதிபதியின் தூரநோக்கிலான செயற் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதாகும்.

இதன் பொருட்டு மும்மொழிகளிலும் மொழிபெயர்ப்பு ஆற்றல் கொண்டவர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வது இதன் பிரதான நோக்கமாகும்.

சிங்களம்-தமிழ், சிங்களம்-ஆங்கிலம், தமிழ்-ஆங்கிலம் போன்றவற்றில் மொழிபெயர்ப்பு ஆற்றல் கொண்ட அரசு ஊழியர்கள் இளைப்பாறிய அரச ஊழியர்கள் இதன் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் கல்வித் தகைமையை நிரூபிக்கும் சான்றிதழ்களின் பிரதி மற்றும் தேசிய அடையாள அட்டைப் பிரதி என்பவற்றுடன் பதிவுத் தபால் மூலம் எதிர்வரும் 15.07.2012 ஆம் திகதிக்கு முன்பு பணிப்பாளர் நாயகம், மும்மொழி இலங்கைக்கான ஜனாதிபதி செயலணி, 1ஆம் மாடி 5ஆவது கட்டடத் தொகுதி, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம், கொழும்பு-7 என்னும் விலாசத்துக்கு அனுப்பிவைக்கும்படி கோரப்பட்டுள்ளது. (த-122)

## பிரதம சாரணர் ஆணையாளராக பேராசிரியர் நிமால் டி சில்வா

தென்மராட்சி,ஜூலை 4

இலங்கை சாரணர் சங்க பிரதம சாரண ஆணையாளராக பேராசிரியர் நிமால் டி சில்வா ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் பிரதம சாரண ஆணையாளராக பணியாற்றிய சந்திரசேகர வட்டுவாங்கவின் சேவைக்காலத்தை ஐந்து வருடங்களாக்கியதால் புதிய பிரதம சாரணர் ஆணையாளராக பேராசிரியர் நிமால் டி சில்வா எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம சாரணர் ஆணையாளர் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் மட்டும் பணியாற்றலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (த-9)

## உயர்தரத்தில் கணிதம், விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியருக்குப் பற்றாக்குறை

### வடக்கு மாகாணப் பாடசாலைகளில் இந்த நிலை

யாழ்ப்பாணம், ஜூலை4

வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் உயர்தரவகுப்பு கணித, விஞ்ஞான பாட ஆசிரியர்களின் பற்றாக்குறை இன்னும் தீர்த்து வைக்கப்படவில்லை.

தற்பொழுது 72 கணிதம், விஞ்ஞானப் பாட ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. மன்னார் முல்லைத்தீவு, வவுனியா தெற்கு மற்றும் வலிகாமம் வலயப் பாடசாலைகளிலேயே அதிக பற்றாக்குறை நிலவுகிறது எனக் கல்வித் திணைக்களத் தரவுகள் தெரிவிக்கின்றன.

அதிகளவாக மன்னார் வலயத்துக்கு கணிதம், விஞ்ஞான ஆசிரியர்கள் 52 பேர் தேவைப்படுகின்றனர். ஆனால் 21 பேர் மாத்திரமே தற்போது அங்கு உள்ளனர். அதனால் 31 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. முல்லைத்தீவு வலயத்துக்கு இவ்வாறு 30 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். தற்போது 15 ஆசிரியர்கள் பணியில் இருக்கும் அதே சமயம் மேலும் 15 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது.

வவுனியா தெற்கு வலயத்தில் இவ்வாறு 47 ஆசிரியர் தேவைப்படுகின்றனர். தற்போது 32 பேர் உள்ளமையால் 15 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. வலிகாமம் வலயத்தில் இவ்வாறு 71 ஆசிரியர்கள் வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தேவையாக உள்ள போதும் தற்போது 57 பேர் மாத்திரமே உள்ளனர். அதனால் 14 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது.

வடமராட்சி வலயத்தில் இவ்வாறு 54 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். தற்போது 49 ஆசிரியர்கள் உள்ளனர். அதனால் 5 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. தீவக வலயத்தில் இவ்வாறு 17 ஆசிரியர்கள் இருத்தல் வேண்டும். தற்போது 11 ஆசிரியர்களே உள்ளதால் 6 பேருக்கு வெற்றிடம் நிரப்பப்படாமல் உள்ளது. மடு வலயத்துக்கு 6 பேர் தேவை. தற்போது 2 பேர் மட்டுமே உள்ளனர். தென்மராட்சி வலயத்துக்கு 16 ஆசிரியர்கள் தேவை. ஒருவரது வெற்றிடம் மட்டும் நிரப்பப்படவில்லை.

இதேவேளை, யாழ்ப்பாணம் வலயத்துக்கு இந்தப்பாட ஆசிரியர்களுக்கான எண்ணிக்கை 86 ஆசிரியர்களாக இருந்த போதும் தற்போது 99 ஆசிரியர்கள் உள்ளனர். அதனால் மேலதிகமாக 13 ஆசிரியர்கள் அந்த வலயத்தில் உள்ளனர்.

இவ்வாறு மேலதிகமாக துணுக்காய் வலயத்தில் 3 பேரும், கிளிநொச்சி வலயத்தில் 2 பேரும், வவுனியா வடக்கு வலயத்தில் ஒருவரும் மேலதிகமாக உள்ளனர். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறங்குதுறை இல்லை; தொழிலும் இல்லை ஜோசப்வாஸ் மீனவர்கள் திரிசங்கு நிலை

## 350 குடும்பங்கள் பசி, பட்டினியால் வாடும் அவலம்

மன்னார், ஜூலை 4

தொழிலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் மன்னார் ஜோசப்வாஸ் நகரைச் சேர்ந்த மீனவக் குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர்கொண்டுள்ளன.

கடந்த 10 வருடங்களாக மன்னார் கோந்தைப்பிட்டிக் கடற்கரையூடாக மீன் பிடித் தொழிலுக்காகச் சென்று வந்த ஜோசப் வாஸ் நகரைச் சேர்ந்த 350 மீனவர்கள் கடந்த 26 ஆம் திகதியிலிருந்து தொழிலுக்குச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் கடந்த ஒரு வார காலமாக இந்த மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல முடியவில்லை. இதனால் மீனவக் குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

2006 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் அனுமதியுடன் கோந்தைப்பிட்டி ஊடாக இந்த மீனவர்கள் கடலுக்குச் சென்று தொழிலில் ஈடுபட்டு வந்தனர். இந்தக் கடற் பிரதேசத்தின் நிலப் பகுதி இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமானது.

இந்த நிலையில் கடந்த 26 ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிக்கு மன்னார் அரச அதிபர் தலைமையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் மேலதிக அரச அதிபர், மன்னார் பிரதேச செயலர், மாந்தை மேற்கு பிரதேச செயலர், மன்னார் மாவட்ட உதவி கடற்றொழில் பணிப்பாளர், இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தின் பின்னர் அன்று பிற்பகல் 3 மணிக்கு முன்பாக குறித்த ஜோசப்வாஸ் நகரைச் சேர்ந்த 350 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் கடந்த 10 வருடங்களாக, தொழில் செய்து வந்த கோந்தைப்பிட்டி துறையிலிருந்த படகுகள், வள்ளங்கள், வலைகள், இயந்திரங்கள் மற்றும் கடலுணவு கொள்வனவு நிலையங்கள் அனைத்தையும் அங்கிருந்து அகற்றுவதுடன் அனைத்து மீனவர்களும் வெளியேற வேண்டும் என்ற தீர்மானத்தை முடிவாக வெளியிட்டனர்.

இதேவேளை, தலைமன்னார் பிரதான வீதியின் 2 ஆம் கட்டைப் பிரதேசத்தில் உள்ள வடக்குப் புறமான கடற்கரை பகுதியில் மேற்படி மீனவர்கள் தொழில் செய்வதற்கு இடம் ஒதுக்கப்பட்டது. அதனை மன்னார் பிரதேச செயலர், மன்னார் மாவட்ட உதவி கடற்றொழில் பணிப்பாளர் ஆகியோர் நேரடியாக வந்து ஜோசப்வாஸ் நகர் மீனவ அமைப்பு பிரதிநிதிகளுக்கு அடையாளப் படுத்திக் கொடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து மீனவர்கள் தாம் தொழில் செய்யும் நோக்குடன் அதற்கான ஆரம்ப கட்ட வேலைகளை ஆரம்பித்த போது தனிநபர் ஒருவர் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கின் காரணமாக இந்தப் பிரதேசத்தில் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ள முடியாத வகையில் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்ததுடன் ஜோசப்வாஸ் நகர் கிராமிய மீனவ அமைப்பின் தலைவர், செயலர் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அவர்களை எதிர்வரும் 13 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 26 ஆம் திகதி தொடக்கம் இன்று வரை இந்த மீனவ மக்கள் தமது நாளாந்த ஜீவனோபாயத் தொழிலான மீன்பிடித் தொழிலைச் செய்ய முடியாமல் 'திரிசங்கு சொர்க்க நிலை'யில் உள்ளனர்.

இதனால் குறித்த ஜோசப்வாஸ் நகர் 350 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 750 பேர், பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் அவல நிலையில் உள்ளனர். இந்த மக்களில் பெரும்பாலானோர் நிறுவனங்களிலும், வங்கிகளிலும் கடன் பெற்றே தமது தொழில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் கடன் வழங்கிய நிறுவனங்களின் தவணைக் கட்டணங்களைச் செலுத்த முடியாத நிலையும் மற்றும் மன்னார் நகரப் பாடசாலைகளுக்குச் சென்று கல்வி கற்கும் மாணவர்களின் பிரயாணத்துக்குச் செலவிடுவதற்கு பணமில்லாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையை நன்கு அறிந்துள்ள போதிலும் தமக்கு அரச அதிகாரிகள் எவ்வித நிவாரணங்களும் வழங்காததால் தாம் துயரத்தில் ஆழ்ந்துள்ளதாக இந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

(க-12)

## நிரந்தரக் கட்டடங்கள் இல்லாத நிலையில் கல்விக் கோட்டங்கள்

அக்கராயன், ஜூலை 4

கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் உள்ள நான்கு கல்விக் கோட்டங்களுக்கும் நிரந்தர அலுவலகக் கட்டடங்கள் அமைக்கப்படவேண்டியுள்ளன.

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளின் வளர்ச்சியில் கோட்டக் கல்வி அலுவலகங்களின் பங்களிப்பு முக்கியமாக இருந்த போதிலும் இவை நிரந்தரக் கட்டடங்கள் இல்லாத நிலையில் இயங்கி வருகின்றன

இறுதியாக நடைபெற்ற மாவட்டக் கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் கோட்ட அலுவலகங்கள் சிறந்த வசதிகளைக் கொண்டவையாக அமைக்கப்படும் எனக் கூறப்பட்டது.

ஆனால் இதுவரை எந்தக் கோட்டங்களுக்கும் அலுவலகக் கட்டடம் அமைக்கப்படவில்லை.

இதேவேளை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனைக்கும் நிரந்தரக் கட்டடம் இல்லாத நிலையே காணப்படுகின்றது. (க-18)

## மாணவர்களுக்கு பசுப்பால்

மன்னார், ஜூலை 4

மன்னார் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்குப் பசுப்பால் வழங்கும் ஆரம்ப நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்றது.

மன்னார் மோட்டைக்கடை அ.த.க.பாடசாலையில் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். சியான் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. கல்வி வலயத்துக்கு உட்பட்ட 84 பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் இதில் கலந்து கொண்டனர்.

பசுப்பால் வழங்கும் ஆரம்ப நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எ.ஆரோக்கியநாதன், உலக உணவுத் திட்டத்தின் மன்னார் மாவட்டத்துக்கான அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(க-3)

## தென்னியன்குளம் கிராமத்தில் காட்டு யானைகள் அட்டகாசம்

முல்லைத்தீவு, ஜூலை 4

முல்லைத்தீவு தென்னியன்குளத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுவதுடன் பெறுமதியான பயன்தரு மரங்களும் அழிக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள தென்னியன்குளம் கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகின்றது.

இரவு, மாலை வேளைகளில் மக்களின் குடியிருப்புகளுக்குள் புகும் காட்டு யானைகள் பயன் தரு மரங்களையும் அழித்து வருகின்றன.

கடந்த ஆண்டு அந்த பகுதியில் யானை தாக்கிக் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தமையும், வீடு ஒன்றுக்குள் புகுந்த காட்டு யானை ஒன்று அறுவடை செய்து வைத்திருந்த நெல்லை உட் கொண்டதுடன் அந்த வீட்டைச் சேதமாக்கியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இரவு, மாலை வேளைகளில் காட்டு யானைகள் அட்டகாசம்.

இவ்வாறு இந்த பகுதிகளில் தொடர்ந்தும் காட்டு யானைகள் கிராமத்திற்குள் புகுந்து பெறுமதியான பயன் தரு மரங்களை அழித்து வருவதுடன் விவசாயச் செய்கைகளையும் அழித்து வருவதால் மக்கள் அச்சத்துடனேயே தமது பொழுதைக் கழித்து வருகின்றனர். (க-6)



மாங்குளம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற சின்னம் சூட்டும் வைபவத்தின் போது ஆசிரியை திருமதி எஸ். குமுதினி மாணவத் தலைவர் ஒருவருக்குச் சின்னம் சூட்டுகின்றார். (415)

## குடிதண்ணீரைத் தேடியலையும் மீளக்குடியமர்ந்த மக்கள்

கிளிநொச்சி, ஜூலை 4

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்கள் தமக்கான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தின் புளியம் பொக்கணைப் பகுதியில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் காணிகள் [illegible] ஒரு தொகுதி மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளன[illegible]

இந்த நிலையில் இங்கு மீளக் குடியமர்ந்த மக்களுக்கான குடிதண்ணீர் வசதிகள் எவையும் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. இதனால் இங்கு மீளக்குடியமர்ந்த மக்கள் தமக்கான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் இதர தேவைகளுக்கான நீரைப் பெற்றுக் கொள்வதிலும் இவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

காணியற்ற குடும்பங்களுக்கு இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட இந்த வீட்டுத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல்க[illegible] போது குடிதண்ணீர், மின்சாரம், போக்குவரத்து வீதி[illegible]ன அமைக்கப்படும் என்றே தெரிவிக்கப்பட்டது. [illegible] தற்போது எந்த வசதிகளும் இன்றியே இந்த பகுதி[illegible]கள் மீளக் குடியமர்வு செய்யப்பட்டுள்ளமை குறி[illegible]க்கது. (க -6)

## செஞ்சிலுவைக் கிளைக்குப் பூட்டு மக்களின் எதிர்பார்ப்புக்கு வேட்டு

### மல்லாவியில் இப்படியும் ஒரு அவலம்

துணுக்காய், ஜூலை 4

மல்லாவியில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளையொன்று திறந்து வைக்கப்பட்டுள்ள போதிலும் அதனால் மக்களுக்கு எந்த வித பயனும் இல்லையென இங்குள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மல்லாவி அனிஞ்சியன்குளம் பிரதான வீதியில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளையொன்று முல்லைத்தீவு தலைமைச் செயலகத்தினரால் சில மாதங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்டது.

அதற்கான பெயர்ப் பலகையும் பொருத்தப்பட்டுள்ள போதிலும் கிளை அமைக்கப்பட்டுள்ள கட்டடம் பூட்டிய நிலையிலேயே காணப்படுகின்றது.

அதற்கான பெயர்ப் பலகையும் பொருத்தப்பட்டுள்ள போதிலும் கிளை அமைக்கப்பட்டுள்ள கட்டடம் பூட்டிய நிலையிலேயே காணப்படுகின்றது.

கிளை அமைக்கப்பட்ட போது சில தினங்கள் மக்களுக்கான சேவைகள் இடம்பெற்று வந்தன. இதனால் மக்கள் மேன்மேலும் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு கிளை அலுவலகத்தை நாடி வந்துள்ள போதிலும் ஏமாற்றமே கிடைத்தது.

இந்தக் கிளையை மீளவும் இயங்கவைத்துத் தமக்கான சேவைகளை ஆற்றுமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-415)

## றம்புட்டான் பழங்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வமில்லாத மக்கள்



வவுனியா, ஜூலை 4

வவுனியா நகரில் றம்புட்டான் பழங்களின் விலை குறைந்து காணப்படுகின்ற போதிலும் மக்கள் இவற்றைக் கொள்வனவு செய்வதில் அதிக ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை. இங்கு றம்புட்டான், மங்குஸ்தான் பழங்களின் வியாபாரம் இடம்பெற்று வருகின்றது.

கடந்த வாரங்களாக றம்புட்டான் பழம் 100 ரூபாவுக்கு 10 பழங்கள் என்ற வகையில் விற்பனை செய்யப்பட்டது. ஆனால் தற்போது 25 பழங்கள் 100 ரூபா என மிகவும் மலிந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

தற்போது றம்புட்டான் சீசன் ஆரம்பமாகியுள்ளதால் தென்பகுதியிலிருந்து எடுத்து வரப்படும் றம்புட்டான் பழங்கள் வவுனியா நகரத்தில் குவிந்து காணப்படுகின்றன.

வவுனியா நகரப்பகுதி எங்கும் றம்புட்டான் மயமாகவே காட்சி அளிக்கின்றது. முன்னர் இவற்றைப் போட்டி போட்டுக் கொண்டு வாங்கியவர்கள் தற்போது பெருமளவில் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை.

இதேவேளை, றம்புட்டான், மங்குஸ்தானை குழந்தைகளுக்கு வழங்குவதில் எச்சரிக்கை தேவை. அவற்றின் விதைகளை விழுங்கி, மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கில் குடியமர்ந்தோருக்கு இலவச மின் விநியோகம் இழுத்தடிப்பு

## பாதிக்கப்பட்ட மக்கள் அரச அதிபருக்கு மனு

**எமக்கான உதவிகள் வழங்கப்பட்டு வந்தாலும், இரண்டு வருடங்கள் கடந்துள்ளபோதும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.**

யாழ்ப்பாணம், ஜூலை 4

வலி.வடக்குப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் மூலம் இதுவரை இலவச மின் விநியோகம் வழங்கப்படவில்லை. ஆயினும் அந்தப் பகுதியில் பணம் செலுத்துபவர்களுக்கு உடனடியாக மின்விநியோகம் வழங்கப்படுகிறது எனத் தெரிவித்து வலி.வடக்கு பிரதேச மக்களால் ஒப்பமிடப்பட்ட மனுக்கள் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்கள் ஊடாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் க.ஸ்ரீமோகன் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வலி.வடக்குப் பிரதேசத்தில் 1990ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து சென்ற நாங்கள், கடந்த 2010ஆம் ஆண்டு மீளக்குடியமர்த்தப்பட்டோம்.

எமக்கான உதவிகள் வழங்கப்பட்டு வந்தாலும், இரண்டு வருடங்கள் கடந்துள்ளபோதும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. சொந்த இடங்களில் மீளக்குடியமரும் மக்களுக்கு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்டுவரும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இதற்கமைவாக இலவச மின்விநியோகத்துக்கு விண்ணப்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவடையும் நிலையிலும் மின்சாரம் கிடைக்கவில்லை. அத்தியாவசிய தேவைகளுள் ஒன்றாக மின்சாரம் இலங்கையில் பிரகடனப்படுத்தப்பட்டும் அந்த சேவையை அனுபவிக்க முடியாமல் நாங்கள் இருக்கின்றோம்.

20 வருடங்களாக மக்கள் பாவனையில்லாது இருந்த பிரதேசத்தில் மின்சாரம் இல்லாது வாழ்வது எவ்வளவு கடினமானது என்பதை உணர்வீர்கள் என்று நம்புகின்றோம். மேலும் நீங்கள் ஒரு நிமிடமாவது மின்சாரமின்றி இருப்பீர்களா? அந்தளவுக்கு அவசியமானதொன்றாகவும் அத்தியாவசியமான மின்சாரம் இரண்டு வருடங்களாக கிடைக்கவில்லை. ஒரு நிமிடம் மின்சாரம் நிறுத்தப்படுகையில் உங்களின் உணர்வுகள் எவ்வாறு இருக்கின்றதோ அதைப்போன்றதே எங்களின் உணர்வுகள்.

இதேவேளை எங்களுக்கான இலவச மின்சாரம் கிடைக்காத அதேவேளை, மின்சார சபையின் ஒரு பிரிவினர் பணம் செலுத்தினால் மின் இணைப்பை வழங்குகின்றனர். ஆனால் வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தினரோ தமக்கான உபகரணங்கள் வருவது தாமதமடைவதாலேயே மின் இணைப்பு தாமதமடைவதாகத் தெரிவிக்கின்றனர்.

எங்களது நன்மை கருதி மேற்படி மின்சார சபையின் இரு பிரிவினரும் தங்களுக்கான உபகரணங்களைப் பரிமாறி மின் இணைப்பை வழங்கலாம் - என்றுள்ளது. (த-5)

## இரு சங்கங்களுக்கு புதிய இயக்குநர் சபை

யாழ்ப்பாணம், ஜூலை 4

சங்கானை, காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கிளைக் குழுத் தேர்தல்கள் நடத்தப்பட்டு புதிய இயக்குநர் சபைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இரண்டு சங்கங்களின் பொதுச் சபை உறுப்பினர்கள் தெரிவில் பெரும் போட்டி நிலவியது. இறுதியில் வாக்கெடுப்பு மூலமே உறுப்பினர்கள் தெரிவு இடம்பெற்றது.

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக கே.விக்னேஸ்வரன் தெரிவானார். காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக பொ.ஆறுமுகம் தெரிவானார்.

இவர்களுடன் ஏழுபேர் கொண்ட இயக்குநர் சபையும் பொதுச் சபையால் தெரிவு செய்யப்பட்டது. (த-17)

## திக்கம் வடிசாலையை மேம்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 4

திக்கம் வடிசாலையின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார்.

பனைஅபிவிருத்திச் சபையின் கீழ் இயங்கும் இந்த வடிசாலையில் உற்பத்தி செய்யப்படும் பனம் சாராயம் போதிய விற்பனை இல்லாமல் தேங்கியுள்ளது.

இதனை அடுத்துத் தற்போது தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு அந்த நிறுவனத்துடன் இணைந்து இந்த வடிசாலையின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச்சபையின்தலைவர்மேலும் கூறினார்.

வடிசாலையில் பனஞ்சாராயத்தின் உற்பத்தி அதிகரிக்கப்படுகின்றபோதும் அதற்கான சந்தை வாய்ப்புக் குறைவாக உள்ளமையால் அதனை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். குடா நாட்டுக்குத் தென்பகுதியில் இருந்து பெரும் தொகையான மதுபான வகைகள் கொண்டு வரப்படுகின்றமையே திக்கம் சாராயத்தின் சந்தை வாய்ப்புக் குறைவதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (த-17)




மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தியாலயத்துக்கு பிரான்ஸ் வாழ் வித்தியாலய பழைய மாணவர்களால் போட்டோ பிரதி இயந்திரம், லெமநேட்டிங் இயந்திரம் என்பன அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இந்த வித்தியாலய நலன் விரும்பி அ.இராமுப்பிள்ளை இந்த உபகரணங்களை வித்தியாலய அதிபர் வே.சுந்தரலிங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொருளாளர் திருமதி ஞா.குமாரசாமி ஆகியோரிடம் கையளித்தார். (த-9)

## உடுப்பிட்டி வீடொன்றில் திருட்டு

யாழ்ப்பாணம் ஜூலை 4

உடுப்பிட்டி பழைய விதானையார் வீதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் நண்பகல் புகுந்த திருடர்கள் அலுமாரியைச் சல்லடை போட்டு அதனுள் இருந்த 10 ஆயிரம் ரூபா பணத்தை திருடிச் சென்றனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:- நேற்றுமுன்தினம் நண்பகல் வீட்டில் பெண்ணொருவர் சமையல் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் பின் கதவுவழியாகப் புகுந்த திருடர்கள் அறையினுள் இருந்த பொருள்களைக் கிளறி எறிந்து திருட்டில் ஈடுபட்டனர்.

அந்த வேளையில் சத்தம் கேட்டு சமையல் அறையில் இருந்த பெண் ஓடிவர அவரைத் தாக்கி விட்டு கையில் கிடைத்த 10 ஆயிரம் ரூபா பணத்துடன் திருடன் தப்பி விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸில் முறையிட்டுள்ளது. (த-16-253)

## முற்றவெளியில் வடலிகள் பிடுங்கி அகற்றப்பட்டன

யாழ்ப்பாணம் ஜூலை 4

யாழ்ப்பாணம் முற்றவெளிப் பகுதியில் நின்ற பனை வடலிகள் கனரக வாகனத்தின் உதவியுடன் பிடுங்கி அகற்றப்பட்டன.யாழ்.முனீஸ்வரன் கோயிலுக்கு முன்பாக வீதி ஓரத்தில் நின்ற இந்தப் பனை வடலிகள் வீதி அகலிப்பு பணிக்காகப் பிடுங்கி அகற்றப்பட்டுள்ளன. இவ்வாறு வேருடன் பிடுங்கப்பட்ட இந்தப் பனை வடலிகள் மீண்டும் யாழ்.பொது நூலகத்துக்கு முன்பாக வீதியோரத்தில் பாதுகாப்பாக நடப்பட்டு வருகின்றன. (த-17)

## நாவலர் வீதியில் 'யாழ்.கோ' நிலையம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தின் யாழ்.கோ விற்பனை நிலையம் ஒன்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.நகரில் நாவலர் வீதியில் கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இந்த விற்பனை நிலையம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதனால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த விற்பனை நிலையத்தில் பசுப்பால் உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்யப்படவுள்ளன.

யாழ்.கோவின் விற்பனை நிலையங்களை மேலும் விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆணையாளர் அங்கு தெரிவித்தார். (த-17)

## 83 தாய்மாருக்கு யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டு இரட்டைக் குழந்தை

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் அரச வைத்தியசாலைகளில் 83 தாய்மார்கள் இரட்டை குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளனர். அதிகளவாக யாழ்.போதனா வைத்தியசாலையில் 77 தாய்மார்கள் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளனர் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மூன்று தாய்மார்கள் கடந்த வருடம் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளனர். நயினாதீவு, சங்கானை மற்றும் கோப்பாய் பிராந்திய வைத்தியசாலைகளில் தலா ஒவ்வொருவர் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளனர்.

சாதாரண பிரவசம் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் 4 ஆயிரத்து 655 தாய்மார் குழந்தை [illegible] பெற்றுள்ளனர். ஏனைய ஆதார மற்றும் பிராந்திய வைத்தியசாலைகளில் ஆயிரத்து 782 பேருமாக மொத்தம் 6 ஆயிரத்து 437 தாய்மார் சாதாரண பிரசவம் மூலம் குழந்தைகளைப் பெற்றுள்ளனர். யாழ்.போதனா வைத்தியசாலையில் 2 ஆயிரத்து 83 பேரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 38 பேரும் என மொத்தம் 2 ஆயிரத்து 121 தாய்மார் சத்திர சிகிச்சை மூலம் குழந்தைகளைப் பெற்றுள்ளனர்.

கிடுக்கி போன்ற உபகரணங்களைப் பயன்படுத்தி யாழ்.போதனா வைத்தியசாலையில் 148 தாய்மாரும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 3 பேருமாக மொத்தம் 151 தாய்மார் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளனர்.

செயற்கைத் தொழில்பாட்டு முறை மூலம் குழந்தைகளை வெளியேற்றல் மூலமாக யாழ். போதனா வைத்தியசாலையில் 36 பேரும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 4 பேரும், வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் 2 பேரும [illegible] குழந்தைகளைப் [illegible] றுள்ளது. (த-4)

## கிராம சேவையாளருக்கான அலுவலகம் அமைக்கக் காணி

வடமராட்சி,ஜூலை 4

பருத்தித்துறை கிழக்கு (ஜே.403) கிராம சேவையாளர் பிரிவுக்கென கிராம சேவையாளர் அலுவலகம் ஒன்றை அமைக்க ஒரு பரப்புக் காணியினை பொதுமகன் ஒருவர் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

முனைப்பகுதியில் வழங்கப்பட்டுள்ள இந்தக் காணியில் கிராம சேவையாளருக்கான அலுவலகக் கட்டடத்தை விரைவில் அமைக்குமாறு பருத்தித்துறை பிரதேச செயலரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

தற்போது பருத்தித்துறை கிழக்கு கிராமசேவையாளர் பிரிவு அலுவலகம் பருத்தித்துறை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தின் ஒரு பகுதியில் செயல்பட்டு வருகின்றது. (த-8)

## ஆர்.பி.ஜி. ஷெல் படையினரால் மீட்பு

வடமராட்சி, ஜூலை 4


நாகர் கோவில் வடக்கு முருகன் கோவில் சுற்றாடலில் பொது மக்கள் சிரமதானத்தில் ஈடுபட்டபோது காணப்பட்ட ஆர்.பி.ஜி ஷெல் படையினரால் மீட்டெடுத்துக்கொண்டு செல்லப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் கண்டுபிடிக்கப்பட்ட இந்த ஷெல்லை அப்புறப்படுத்துமாறு கோரி நாகர்கோவில் இராணுவத்தினரிடம் முறையிடப்பட்டிருந்தது.

உடனடியாக அங்கு விரைந்த இராணுவத்தினர் ஷெல் இருந்த இடத்தை அடையாளப்படுத்தியிருந்தனர். மறுநாள் சனிக்கிழமை குண்டுகள் செயலிழக்கச் செய்யும் படையினர் வரவழைக்கப்பட்டனர். இவர்கள் ஆர்.பி.ஜி. ஷெல் குண்டைப் பத்திரமாக மீட்டெடுத்துக் கொண்டு சென்றனர். (த-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைப் பிரச்சினையை தணிக்க இந்தியா - பாக். பேச்சு ஆரம்பம்



டில்லி, ஜூலை 4

இந்தியா-பாகிஸ்தான் இடையேயான எல்லைப் பாதுகாப்புப்படை தலைவர்கள் மட்டத்திலான பேச்சு நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. 4 தினங்கள் நடைபெறும் இந்தப்பேச்சில் இரு நாட்டு எல்லைப்பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

இந்தியா-பாகிஸ்தான் இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் தற்போது வரை நடைமுறையில் உள்ளது. சில நேரங்களில் ஒப்பந்தத்தை பாக். மீறுகிறது. இதனால் எல்லைப்பகுதியில் துப்பாக்கிச்சண்டை நடைபெறவுள்ளது. இந்த நிலையில், இரு நாட்டு எல்லைப் பாதுகாப்புப்படை தலைவர்கள் மட்டத்திலான பேச்சு நேற்று முன்தினம் டில்லியில் ஆரம்பமாகியது.

முதன்முறையாக இந்தப் பேச்சு நடைபெறுகிறது. இதற்காக பாகிஸ்தான் எல்லைப் பாதுகாப்புப்படை (பி.எஸ்.எப்) தலைவர் மேஜர் ஜெனரல் ரிஸ்வான் அக்தர் தலைமையில் 18 பேர் கொண்ட குழு, கடந்த ஞாயிற்றுக்கிழமை வாகா எல்லை வழியாக இந்தியா வந்தனர். அவர்களை, இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை (பி.எஸ்.எப்) இயக்குனர் ஜெனரல் யு.கே. பன்சால் வர வேற்றார்.

இரு தரப்பிலுமான பேச்சு இந்திய எல்லைப்பாதுகாப்பு தலைமையகத்தில் நடைபெற்று வருகிறது. அப்போது எல்லைப்பிரச்சினையில் ஏற்படும், போதை மருந்து கடத்தல், தீவிரவாதிகள் ஊடுருவல் உள்ளிட்ட சிக்கல்களுக்குத் தீர்வு எட்டப்படலாம் எனவும், ஜூலை 5 ஆம் திகதி வரை நடக்கும் இறுதிப் பேச்சில் இரு தரப்பிலும் முக்கிய உடன்பாடுகள் கைச்சாத்தாகலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே கடந்த 11,14 ஆம் திகதிகளில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு அருகே இந்திய நிலைகள் மீது பாகிஸ்தான் துப்பாக்கிச்சூடு நடத்தியது. இதில் 2 ஜவான்கள் இறந்தனர். இதனால் பூஞ்ச் மாவட்டம் வழியாக பாகிஸ்தானுக்கு பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. நேற்றுமுன்தினம் மீண்டும் பஸ் போக்குவரத்து ஆரம்பமாகியது. இதில் 90 பயணிகள் சென்றனர். (வ)

## சீன இராணுவத்தின் அட்டூழியம் இந்திய எல்லையில் அதிகரிப்பு

### கண்காணிப்பைத் அதிகப்படுத்துகிறது அரசு



இந்திய எல்லைப் பகுதியில் சீனாவின் அட்டூழியம் அதிகரித்து வருவதால் அதிகமான படைகளை நிலை நிறுத்தி பாதுகாப்பைக் கண்காணிக்குமாறு இராணுவத் தலைமைத் தளபதிக்கு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் அந்தோனி உத்தரவிட்டுள்ளார்.

வடகிழக்கு மாநில எல்லைப் பாதுகாப்பு, உள்கட்டமைப்பு குறித்த ஆய்வுக் கூட்டம் டில்லியில் நடைபெற்றது. இதில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே. அந்தோணி, இராணுவத் தலைமைத் தளபதி பிக்ராம்சிங், இராணுவ அமைச்சகச் செயலர் சசிகாந்த் சர்மா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் வடகிழக்கு எல்லைப் பகுதியில் பாதுகாப்பு உள்கட்டமைப்பு விடயங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. இதற்கு முன்பு இராணுவ தலைமைத் தளபதியாக இருந்த வி.கே.சிங், இராணுவத்துக்கு மேலும் ஆயுதங்கள் தேவை என்றும், இந்திய இராணுவத்தை நவீனப்படுத்துவதன் அவசியத் தையும் வலியுறுத்தியிருந்தார்.

அதன்படி, சீன இராணுவத்தின் நடமாட்டம்,இந்திய எல்லைக்கு அச்சுறுத்தலாக உள்ளதாக முறைப்பாடு எழுந்தது. இதனை தற்போதைய இராணுவ தலைமைத் தளபதியான பிக்ராம் சிங், முன்னர் கிழக்கு கமாண்டராக இருந்தபோதே கூறி வந்தார்.

இதைத்தொடர்ந்து இந்திய- சீன எல்லையான லடாக் பகுதியில் ஆளில்லா கண்காணிப்பு வாகனங்கள், ஹெலிகொப்டர்கள் வாயிலாக கண்காணிப்புப் பணியை தீவிரப்படுத்துமாறு, அதிக எண் ணிக்கையிலான படைகளை நிறுத்துமாறும் அமைச்சர் அந்தோனி உத்தரவிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## உம்மன்சாண்டியை கேலி செய்து முகத்திரையில் கார்ட்டூன்



திருவனந்தபுரம், ஜூலை 4

கேரள முதல்வர் உம்மன் சாண்டியை முகத்திரையில் (பேஸ்புக்கில்) கேலி செய்து கார்ட்டூன் வெளியிட்ட பொலிஸ்காரரிடம் உளவுத்துறைப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன் முகத்திரையில் கேரள முதல்வர் உம்மன் சாண்டியை கேலி செய்து 2 கார்ட்டூன்கள் வெளியிடப்பட்டன. இது குறித்து கேரள பொலிஸ் அதிகாரி ஜேக்கப் புன்னூஸுக்கு தகவல் கிடைத்தது.

இந்தச்சம்பவம் குறித்து விசாரணை நடத்த உளவுத் துறைப் பொலிஸுக்கு ஜேக்கப் புன்னூஸ் உத்தரவிட்டார்.

இதன்படி உளவுத் துறைப்பொலிஸார் விசாரணை நடத்தினர். விசாரணையில், உம்மன்சாண்டியை கேலி செய்து கார்ட்டூன் வெளியிட்டது கோட்டயம் மாவட்டம் எருமேலி பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்து வரும் ஒரு பொலிஸ்காரர் என்று தெரிய வந்தது.

அவரிடம் உளவுத் துறை பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்தச் சம்பவம் கேரளாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (வ)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அஸாமுக்கு ரூ.500 கோடி நிவாரண நிதி

### அறிவித்தார் பிரதமர் மன்மோகன்



கடந்த சில தினங்களாக வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள அஸாம் மாநிலத்துக்கு ரூ.500 கோடி நிவாரண நிதியாக பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்துள்ளார்.

அஸாமில் கடந்தசிலதினங்களாகப் பெய்து வரும் கடும் மழையினால், 27 மாவட்டங்களில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் இதுவரை 77 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தநிலையில் அசாமில் வெள்ளம் ஏற்பட்ட பிரதேசங்களை பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆகியோர் நேற்று பார்வையிட்டனர். டில்லியிலிருந்து ஜோர்ஜ் காத்துக்குச் சென்ற அவர்கள் அசாம் மாநில முதலமைச் சர் தருண் கோகாயுடன், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஹெலிகொப்டர் மூலம் பார்வை யிட்டனர்.

அதிகம் பாதிப்புக்கு உள்ளான மஜூலிதீவு, ஜோர்கட், லக்கிம்பூர், தேம்ஜி மாவட்டங்களை அவர்கள் பார்வையிட்டனர். பின்னர் பிரதமரும் சோனியா காந்தியும் கவுகாத்திக்குச் சென்றனர். அங்கு வெள்ளச் சேதம் குறித்து அமைச்சர்கள், அதிகாரிகளிடம் பிரதமர் ஆலோசனை நடத்தினார். இந்த நிலையில் அசாம் மாநிலத்துக்கு நிவாரண நிதியாக ரூ.500 கோடி வழங்கப்படும் என்று அவர் அறிவித்தார்.(வ)

## பிரதமராகப் பதவி வகிக்க சோனியாவே பொருத்தம்

### அப்துல் கலாம் கூறுகிறார்

இந்தியாவின்பிரதமராகவருவதற்கு இந்திய அரசியல் சாசன சட்டப்படி சோனியா காந்தி தகுதியானவர்தான் என்று இந்தி யாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் மீண்டும் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதமர் பதவிக்கு சட்டப்படி சோனியாகாந்தி தகுதியானவர்தான் என்பது குறித்து நான் ஏற்கெனவே எனது புத்தகத்தில் எழுதியுள்ளேன். சோனியாவை இந்தியக் குடிமகள் என்று உச்ச நீதிமன்றமே அறி வித்திருக்கிறது. சோனியாதான் பிரதமராக வேண்டும் என்று அதிக தொகுதிகளை வென்ற கட்சி கூறுமாயின், அவரைத்தான் பிரதமராக ஜனாதிபதி நியமிக்க முடியும். ஆனால், அவர் அவ்வாறு செய்யவில்லை என்றார். (வ)

## தி.மு.கவினர் இன்று சிறை நிரப்பு போராட்டம்

எதிர்க்கட்சியினர் மீது அரசின் பழி வாங்கும் நட வடிக்கையைக் கண்டித்து தமிழகம் முழுவதும் தி.மு.கவினர் இன்று சிறை நிரப்பும் போராட்டங்களை நடத்தவுள்ளனர் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

தென் சென்னையில் 8 இடங்களிலும், வட சென்னையில் 8 இடங்களிலும் சிறை நிரப்பும் போராட்டம் நடைபெறவுள்ளது. மிகப்பெரியளவில் தி.மு.க. நடத்தும் போராட்டம் என்பதால் தமிழ கம் முழுவதும் ஆயிரக்கணக்கானோர் இதில் பங்கேற்பார்கள் என்று எதர்பார்க்கப்படுகிறது. - என்றார். (வ)

## நடுவானில் பதம்பார்த்தது தேள் விமானத்துள் துடித்தார் பயணி

சென்னையில் இருந்து கடந்த சனிக்கிழமை இரவு 10.30 மணிக்கு கல்ப் ஏர்லைன்ஸ் விமானம் பஹ்ரைன் புறப்பட்டது. அதில் 218 பயணிகள் இருந்தனர். விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்த போது திடீரென வித்யாசாகர் என்பவர் அலறியபடி இருக்கையில் இருந்து எழுந்து, ஏதோ கடித்து விட்டது என்றார்.

உடனே அவரது கோட்டை கழற்றி, உதறியபோது அதிலிருந்து கருந்தேள் கீழே விழுந்து ஓடியது. அதை பார்த்ததும் பணிப்பெண்கள் அலறியடித்து ஓடினர். உடனே பயணிகள் காலணிக் காலால் கருந்தேளை மிதித்துக் கொன்றனர். வலியால் துடித்த வித்யாசாகர் சிகிச்சைக்காக விமானம் நள்ளிரவு 11.15 மணிக்கு சென்னை பன்னாட்டு விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

முதலுதவி சிகிச்சைக்குப் பின்னர் வித்யாசாகர் தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இதையடுத்து, நள்ளிரவு 12.15 மணிக்கு 217 பயணிகளுடன் அந்த விமானம் பஹ்ரைன் புறப்பட்டுச் சென்றது. சிகிச்சைக்கு பிறகு வித்யாசாகர் நேற்று முன் தினம் இரவு விமானத்தில் பஹ்ரைன் சென்றார். (வ)

## உலக கலாசார பாரம்பரிய இடமாக இந்தியாவின் மேற்கு மலைத்தொடர்



டில்லி, ஜூலை 4

உலக கலாசார பாரம்பரியங்களைப் பேணுவதற்கான ஐ.நாவின் யுனெஸ்கோ அமைப்பு சார்பில் உலகப் பாரம்பரிய இடமாக மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலை இந்தியாவின் மேற்குக்கரைப் பிரதேசத்தை ஊடறுத்துப் பரந்து விரிந்து அமைந்திருக்கிறது.

சுமார் 160,000 சதுர கிலோமீற்றர் பரப்பில் அமைந்துள்ள இந்த மலைத்தொடர் இந்தியாவின் தெற்கில் ஆரம்பித்து வடக்கே குஜராத் மாநிலம் வரை நீண்டு அமைந்திருக்கிறது.

சனத்தொகைப் பெருக்கம் காரணமாக இந்த மலைத்தொடர் அவற்றின் உயிரியல் பல் வகைத்தன்மையை இழக்கும் அபாயத்தில் உள்ளது.

பூமியின் மத்திய ரேகையில் அமையாத, நிரந்தர பசுமைக்காடுகள் அமைந்துள்ள இந்த மலைத்தொடர் காடுகள் உலகில் அழிந்து வரும் நிலையிலுள்ள குறைந்தது 325 வகையான தாவர மற்றும் பூவினங்கள், பறவையினங்கள், ஊர்வன வகைகள் மற்றும் மீன் இனங்களுக்கு இருப்பிடமாக அமைந்துள்ளதாக யுனெஸ்கோ கூறுகிறது. உயிரியல் பல்வகைத் தன்மைக்குப் பிரபலமான காடுகளில் உலகின் முக்கிய 8 இடங்களில் ஒன்றாக இந்த மலைத்தொடர் கருதப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ரஷ்யாவில் சென். பீற்றர்ஸ்பர்க் நகரில் நடைபெற்ற மாநாட்டில் யுனெஸ்கோ பிரதிநிதிகள் இந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள 39 இடங்களுக்கு உலக பாரம்பரிய தலங்கள் என்ற அந்தஸ்தை அளித்தனர்.(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்
## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பணம் கொடுக்கல், வாங்கல் விடயங்களில் சிலரிடம் கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். நண்பர்கள் சிலர் உங்களுக்காகச் செலவு செய்வார்கள். வெளியூரில் வசிக்கும் ஒருவர், உங்களைத் தொடர்பு கொண்டு முக்கிய விடயமாகப் பேசுவார்கள்.

**இடபம்:** நடக்குமோ, நடக்காதோ என்று நினைத்த காரியம் ஒன்று, நல்லவிதமாக நடந்து முடியும். சில விடயங்களில், மற்றவர்களை முந்திக்கொண்டு செயற்பட முற்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறுவீர்கள். தாய்வழி உறவுகள் மூலம் சில நன்மைகள் ஏற்படும்.

**மிதுனம்:** தர்ம, புண்ணிய காரியங்களில் மனம் ஆர்வம் கொள்ளும். தொழில் ரீதியாக சிலருக்கு உதவி செய்வீர்கள் அல்லது யோசனை சொல்வீர்கள். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த முக்கிய செய்தி வந்து சேரும். சிறிய வேலை ஒன்றுக்கு பலமுறை அலைய நேரிடலாம்.

**கடகம்:** நண்பர்கள் சிலர் உங்களைப் பாராட்டிப் பேசலாம். குழந்தைகளின் எதிர்காலம் தொடர்பான விடயங்களில், அக்கறை காட்டு வீர்கள். நீங்கள் குறைவாக மதிப்பிட்ட ஒருவர் மூலம் பெரியளவில் உதவி கிடைக்கும். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும்.

**சிங்கம்:** கனிவான பேச்சுகளால் சிலரிடம் காரியம் சாதிப்பீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளையும் பெறலாம். பெண்கள் சிலர் மூலம் முக்கியமான உதவிகிடைக்கலாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் கொள்வீர்கள்.

**கன்னி:** லட்சியங்களை நிறைவேற்ற துடிப்போடு செயற்படுவீர்கள். சில வேலைகளை அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்திலிருந்தே முடிப்பீர்கள். பிள்ளைகள் வழியில் பெருமைப் படும் வகையிலான சம்பவங்கள் நடக்கும். நண்பர் ஒருவரின் இரகசியத்தை அறிந்து கொள்வீர்கள்.

**நாளை**

ஆனி 21 வியாழக்கிழமை 05.07.2012
திதி: துதியை மு.இ 09.56 வரை
நட்சத்திரம்: உத்தராடம் பி.ப 03.15 வரை
சுபநேரம்: 07.28- 08.58 வரை
ராகு காலம்: 01.28- 02.58 வரை

**துலாம்:** பெருமை, கௌரவத்துக்காகச் செலவு செய்வீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை அடையாளம் கண்டு கொள்வீர்கள். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி விடுமோ என்று வீண் பயம் கொள்ளலாம்.

**விருச்சிகம்:** உங்களின் உதவியுடன் நண்பர்கள் சிலர் வேலைகளை முடித்துக்கொள்வர். உறவினர்கள் தொடர்பான காரியங்களுக்காக அலைய நேரிடலாம். சிலரின் வருகையை எதிர்பார்த்து நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருக்கும். பொறுப்பான வேலை ஒன்றை ஏற்றுக் கொள்வதால் அலைச்சலுக்கு ஆளாகலாம்.

**தனுசு:** விலை உயர்ந்த பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். வியாபாரிகள் வரவேண்டிய மிகுதிகள் வருவதால் மகிழ்ச்சி அடைவர். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். மனதில் ஊக்கம், உற்சாகம் குடிகொள்ளும்.

**மகரம்:** வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். ஒரு செலவை நினைத்துக் கவலைப்படும் நேரத்தில், மற்றொரு செலவு ஏற்படும். குடும்ப உறுப்பினர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து, கோபத்தை ஏற்படுத்தலாம். சிலரை விமர்சனம் செய்து பேசி, அதில் இன்பம் காண்பீர்கள்.

**கும்பம்:** முக்கிய விடயங்களில் உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர், அதைக் காப்பாற்றி பெருமை சேர்ப்பர். சில வேலைகளை, தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள். உடற்பயிற்சி, தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்:** சிலர் உங்களிடம் கடன் வாங்கலாம் அல்லது நீங்கள் சிலருக்குக் கடன் கொடுக்கலாம். பல நாள்களாக, பிற்போட்ட வேலை ஒன்றை அவசரமாக முடிக்க வேண்டிய கட்டாய நிலைமை உருவாகலாம். குடும்பத்தில் பொறுமை, நிதானம் அவசியம்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 4 | 2 | 8 | 1 | 6 | 7 | 3 |
| 8 | 3 | 2 | 5 | 6 | 7 | 4 | 9 | 1 |
| 1 | 6 | 7 | 4 | 3 | 9 | 2 | 8 | 5 |
| 2 | 1 | 3 | 8 | 9 | 6 | 7 | 5 | 4 |
| 7 | 8 | 5 | 3 | 2 | 4 | 9 | 1 | 6 |
| 4 | 9 | 6 | 1 | 7 | 5 | 8 | 3 | 2 |
| 6 | 4 | 1 | 9 | 5 | 8 | 3 | 2 | 7 |
| 3 | 7 | 8 | 6 | 1 | 2 | 5 | 4 | 9 |
| 5 | 2 | 9 | 7 | 4 | 3 | 1 | 6 | 8 |


## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | 6 | | | 5 |
| | 5 | 1 | 4 | | 8 | 7 | | 3 |
| 9 | | | 3 | 5 | | | 6 | |
| | 9 | | 2 | 7 | 3 | | | |
| | | | | | | | | |
| | | | 9 | 8 | 4 | | 5 | |
| | 6 | | | 4 | 2 | | | 7 |
| 4 | | 7 | 5 | | 9 | 1 | 8 | |
| 3 | | | 8 | | | | | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

அகில இலங்கை யாழ்.நல்லூர் நாவலர் வீதியில் அமைந்துள்ள சீரடி சாயி மந்திரின்

# நூதன மஹா கும்பாபிஷேகம் (08.07.2012)



**அன்பான பக்தர்களே!**
சீரடி சாயி பாபாவுக்கும் நவசக்தி கணபதி, நவலிங்கேஸ்வரப் பெருமான், ஸ்ரீகருவளர்த்த நாயகி ஆகிய மூர்த்திகளுக்கு (08.07.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 8.58 மணிமுதல் 10.28 மணிவரையுள்ள சுபவேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

**பூர்வாங்க கிரியைகள்**

05.07.2012- வியாழக்கிழமை - காலை 7மணிக்கு வாஸ்து சாந்தி, கணபதி ஹோமம், ஸ்தூபி ஸ்தாபனம், பிரதிஷ்டை என்பன

**எண்ணெய்க்காப்பு, பால் காப்பு**
06.07.2012 (வெள்ளிக்கிழமை) } காலை 7மணி முதல்
07.07.2012 (சனிக்கிழமை) } மாலை 6 மணி வரை

**மஹா கும்பாபிஷேகம்**
08.07.2012 - ஞாயிற்றுக்கிழமை காலை 8.58 மணிமுதல் 10.28 மணிவரை
நண்பகல் 12 மணிக்கு விசேட பூசை, அன்னதானம் நடைபெறும்.

**பிரதம குரு - சிவஸ்ரீ தாணு வாசுதேவக்குருக்கள் (சபரிமலை குருசுவாமி)**

**திரு வீதி உலா செல்லும் வழி**
08.07.2012 மாலை 6.30 மணிக்கு ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி மருதடி வீதி,றக்கா வீதி, இராசாவின் தோட்ட வீதி, நாவலர் வீதி ஊடாக மீண்டும் ஆலயத்தை வந்தடையும்

அனைவரும் வருக! பாபா அருள் பெறுக!

'சீரடி சாயி மந்திர்'
314, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(கைலாச பிள்ளையார் கோயில் சந்திக்கும் [illegible] இடையில்)
தொ.பே: 0777222368, 0213211605, 0774815336

பா. ராகவன்
(ஸ்தாபகர்) மற்றும்
ஆலய நிர்வாகத்தினர்.

(19987) (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரிய சமாதான விடயத்தில் கொபி அனான் கொண்டு வந்த

# புதிய திட்டமும் இழுபறி

ஹோம்ஸ், ஜூலை 4

சிரியாவில் நடைபெறும் வன்முறை, மோதல்களை முடிவுக்குக் கொண்டு வர ஐ.நா. சிறப்புத் தூதர் கொபி அனான் புதிய சமரசத் திட்டத்தைக் கொண்டு வந்தார். ஆளும் தரப்பு, எதிர்தரப்பு பிரதிநிதிகளைக் கொண்ட இடைக்கால அரசு ஏற்படுத்தி தேர்தல் நடத்துவது என்பதே இந்தத் திட்டமாகும்.



இது குறித்த ஆலோசனை கூட்டம் ஜெனிவாவில் நடைபெற்றது. அமெரிக்கா, மேற்கத்திய நாடுகள் சமரசத் திட்டத்தை ஏற்றன. ஆனால் அதில் அசாத் இடம் பெற எதிர்ப்புத் தெரிவித்தனர். அசாத் இடம்பெறக் கூடாது என அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் ஹிலாரி கிளின்டன் தெளிவாகக் கூறி விட்டார். ரஷ்யாவும், சீனாவும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன.

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் கூறுகையில்: இடைக்கால அரசில் யார், யார் இடம் பெற வேண்டும் என்பதைச் சிரியாவே தீர்மானிக்க வேண்டும். இதில் வெளிநாட்டவர்கள் தலையிடக்கூடாது என்றார்.

இதனால் இடைக்கால அரசை அமைப்பதில் இழுபறி நீடிக்கிறது.

> இடைக்கால அரசில் யார், யார் இடம்பெற வேண்டும் என்பதைச் சிரியாவே தீர்மானிக்க வேண்டும். இதில் வெளிநாட்டவர்கள் தலையிடக்கூடாது

பின்னர் இது பற்றி சிறப்புத் தூதர் கொபி அனான் கூறும் போது: புதிய திட்டத்திற்கு அசாத் ஒத்துழைப்பார் என எதிர்பார்க்கிறேன்.

சுமுகமான கருத்து நிலை உருவாகும் என நம்பிக்கை வெளியிட்டார்.

## ஹோர் மூஸ் கால்வாயை மூடத் தீர்மானம்



தெஹரான், ஜூலை 4

ஈரான் நாடாளுமன்றத்தில் புதிதாகக் கொண்டு வரப்பட்ட சட்டமூலம் ஒன்றின் ஊடாக அந்த நாட்டின் கட்டுப்பாட்டிலுள்ள ஹோர் மூஸ் கால்வாயை மூடுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

ஈரான் இரகசியமாக அணு ஆயுதங்களைத் தயாரித்து வருகிறது என்று குற்றம் சுமத்தியதுடன், அமெரிக்கா, ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் பொருளாதாரத் தடையையும் விதித்துள்ளன.

இந்த நிலையில் ஈரானின் தேசிய பாதுகாப்புச் சபை மற்றும் வெளியுறவுக் கொள்கை ஆணையகத் தலைவர் இப்ராஹிம் அகாஹ் முகம்மாதி, ஈரான் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தார்.

அதில் ஐரோப்பியக் கூட்டமைப்பு நாடுகள் ஈரானின் எண்ணெய் ஏற்றுமதி, பொருளாதாரத் தடையையும் விதித்துள்ளனர்.

அதற்குப் பதிலடியாக பாரசீக வளைகுடாவின் ஈரானின் கட்டுப்பாட்டில் உள்ள ஹோர்மூஸ் கால்வாயை மூட வேண்டும் என்று முகம்மதி வலியுறுத்தினார். இதற்கு 290 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 100 பேர் ஒப்புதல் அளித்தனர்.

ஹோர்மூஸ் கால்வாய் வழியாகவே ஆசிய, ஐரோப்பிய நாடுகள் தங்களது எண்ணெய் வர்த்தகத்தை மேற்கொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## ரஷ்ய விண்வெளி வீரர்கள் தளம் திரும்பினர்



அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் இணைந்து சர்வதேச விண்வெளி ஆய்வு கூடம் அமைத்து வருகின்றன. அதற்கான பணி நடந்து வருகிறது. இந்த நிலையில் ரஷ்யாவின் சோயுஷ் டி.எம்.ஏ. -03 எம் என்ற விண்கலத்தின் மூலம் ரஷ்யாவைச் சேர்ந்த ஒலேக் கொனென்கோ, டொனால்ட் பெட்டிட், நெதர்லாந்தைச் சேர்ந்த ஆண்ட்ரூ குயிபெர்ஸ் ஆகிய 3 விண்வெளி வீரர்கள் விண்வெளிக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

கடந்த டிசெம்பர் மாதம் 21ஆம் திகதி கஜகஸ்தானில் உள்ள ரஷ்யாவின் பைகானூர் விண்வெளித் தளத்தில் இருந்து இவர்கள் புறப்பட்டனர். 2 நாள் பயணத்துக்குப் பின்னர் சர்வதேச விண்வெளி ஆய்வு கூடத்தை அடைந்தனர். அங்கு இவர்கள் ஆய்வுகூடம் அமைக்கும் பணியை மேற்கொண்டனர். இப்போது அந்தப் பணியை நிறைவு செய்து விட்டு 193 நாள்களுக்குப் பின்னர் அங்கிருந்து புறப்பட்டு பூமிக்கான பயணத்தை மேற்கொண்டனர். இவர்களது சோயுஷ் விண்கலம் மொஸ்கோ நேரப்படி நேற்று முன்தினம் இரவு 12.14 மணிக்கு கஜகஸ்தானில் உள்ள பைகானூர் விண்வெளி தளத்தில் தரை இறங்கியது. அதைத் தொடர்ந்து அதில் பயணம் செய்த 3 விண்வெளி வீரர்களும் பத்திரமாகத் திரும்பினார்கள். இப்போது சர்வதேச விண்வெளி ஆய்வு கூடத்தில் நெதர்லாந்தைச் சேர்ந்த ஜோ அகாபா, கென்னடி படால்கா, செர்ஜி ரெவின் ஆகிய 3 பேர் தங்கியுள்ளனர். அவர்கள் எதிர்வரும் 14ஆம் திகதி பூமிக்கு திரும்புகின்றனர். அவர்களைத் தொடர்ந்து அமெரிக்க நாசா விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் மற்றும் யூரி மலர் சென்கோ (ரஷ்யா) அகினோ ஹோஷிட் (ஜப்பான்) ஆகிய 3 பேரும் சோயுஷ் விண்கலம் மூலம் புறப்பட்டுச் செல்கின்றனர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 14 ★ 08 ★ 1948 |  | 27 ★ 06 ★ 2010 |

**திருமதி பொன்ரதம் விவேகானந்தன்**

திதி: மதிமழுங்கும் பிரதமை (04.07.2012)

ஆண்டுகள் இரண்டு சென்றாலும் உன் நினைவு
எங்களை விட்டு மறையாது
நாம் இருக்கும் வரை அந்நினைவு தொடர்ந்துவரும்
உன் நினைவால் தினம் வாடும்

கணவர் தி.விவேகானந்தன்,
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், பெறாமக்கள்,
மருமக்கள்

சொர்ணவடலி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(19849) (2-6)

## 7 ஆம் ஆண்டு நினைவு தினம்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 18 ★ 08 ★ 1933 |  | 04 ★ 07 ★ 2005 |

**அமரர் ஜே.எஸ்.கிறிஸ்ததாஸ் J.P.**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



தர்க்கமுற்று நாமறியோம்! சஞ்சலங்களும் உற்றதில்லை
தக்கவழி நாம்சேர போதித்த அப்பாவே!
நிர்க்கதியாய் வருவோரை தேவையுணர்ந்து ஊழியத்தால்
நற்பயன்கள் சேர்ந்திடவே உதவிக்கரம் கொடுப்பவரே!
துர்க்குண வழியேகும் மாந்தர்களின் வாழ்வுதனை
தேவமைந்தன் ஆசிகளுடன் நற்சபையில் வைப்பவரே!
கர்த்தருள் நித்திரையாகி ஆண்டேழுகள் ஆனாலென்ன
கண்முன்னே ஆசீர்வாதம் தந்துகொண்டே இருக்கிறீர்களப்பா!

"தங்கமால்"
அல்வாய் தெற்கு, அல்வாய்.
தொ.பே.:- 226 3921

கி.நேசமணி (மனைவி),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


**T V மலிவு விற்பனை**

SONY Wega Flat (JAPAN) TV கள் 14"- 10000/=, 21" -13000/=, 29"- 15000/=, அம்பிளி பயர் 12000/=, 12"Box - 12000/=, றேடியோ கசெற் - 2000/=,
தொடர்பு: 077 044 0570 (அப்பளம்)
சோனி ரேற் சென்ரர் (கொமர்ஷல் வங்கி முன்பாக)
56, கே.கே.எஸ். வீதி சுன்னாகம். (20023)(5-6-7)

**விற்பனைக்கு**

புத்தம் புதிய பதியப்படாத 90kmஓடிய Singer safari மோட்டார் சைக்கிள், Doberman Pincher (ஆண்-2வயது), Rhodesian Ridgeback (பெண், 09 மாதம்)உடன் விற்பனைக்கு.
தொடர்பு: அரசடி, வட்டுக்கோட்டை.
077 035 7307 (19980)(5-6-7)

**இறைச்சிக்கோழி விற்பனை**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது. சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூ.470 மட்டுமே. தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை திறக்கப்படும்

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். (19702)(6-8-9)

**CHAVAKACHCHERI TOWN**
**Spacious - house Available for Long Term Leas**

Three bed-rooms, two office rooms, pantry and two toilets.
More suited for NGO's and Banks.
Contact:0773524810,0213219002
0212222029 (19985)(5-6-7)


## எழுதுமட்டுவாழ் - விழுப்பளை கண்ணகை என வழங்கும் அருள் மிகு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**அம்பிகை அடியார்களே!**

நிகழும் மங்கலகரமான நந்தன வருஷம் ஆனித் திங்கள் 21ஆம் நாள் (05.07.2012) வியாழக்கிழமை காலை 9.05 மணி முதல் 11.00 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் அம்பிகைக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளிற்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. அன்றைய தினம் அடியார்கள் ஆசார சீலர்களாக வருகை தந்து அம்பிகையைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம். பாலஸ்தாபன கிரியைகள் காலை 6.30 மணி முதல்ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும்.

பாலஸ்தாபன பிரதமகுரு
சிவஸ்ரீ வெ. தில்லையம்பலக் குருக்கள்.
(மிருசுவில்)

**குறிப்பு:**
பாலஸ்தாபன கும்பாபிஷேக கிரியைகளை அடியார்கள்Viluvalaiampalthevasthanam.com. என்ற இணையத்தளத்தில் நேரடியாகப் பார்வையிட முடியும்

தேவஸ்தான பரிபாலன சபையினரும் தர்மகர்த்தாவும். (20022)(5-6-7)

## மரண அறிவித்தல்

**நாகலிங்கம் இலட்சுமணன்**

(ஓய்வுபெற்ற சாரதி - இலங்கை போக்குவரத்து சபை)



பலாலியைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் இலட்சுமணன் கடந்த (01.07.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், ஈஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற துரைசிங்கம், இராஜபுஸ்பம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சத்தியபாமா, பிறேமாவதி, ஜெகதீஸ்வரன் (உருத்திரன்), சகுந்தலா ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்னேஸ்வரன், ஆனந்தமோகன், தாட்சாயினி, சஜிந்தன் ஆகியோரின் மாமனாரும், வியாசகன், விதுர்னன், வைஸ்னவன், சாம்பவி, சாரங்கா, சகானா, கரிகாலன், செந்தாழன், அஹாஸ்ஜி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2012) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (20021) (2-6-7)

தகவல்:
7 ஆம் கட்டை, கோயில் வீதி, மல்லாகம். சஜிந்தன் - சகுந்தலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்பு வரும் நேரம்

(18)

கண்டறியும் திறமை மற்றும் செயலாற்றல், விரைவான கண்ணோட்டம் , மற்றும் தெளிவான நோக்கம், ஒரு சக்தி வாய்ந்த வலக்கரம், மற்றும் ஒரு திறமையான கை - இவை அனைத்தும் எல்லாத் தொழில்களிலும் வெற்றியைத் தேடித் தரும் தலைவர்கள் ஆகும்.

**பொருத்தமான மற்றும் பொருத்தமற்ற வாய்ப்புகள்**

ஓர் உருண்ட வடிவமுள்ள மனிதன் சில சமயங்களில் ஒரு



சதுரமான ஓட்டைக்குள் நுழைவதும், சதுர வடிவமுள்ள மனிதன் வட்டமான ஓட்டைக்குள் திணிக்கப் படுவதும், முக்கோண வடிவமுடைய மனிதர்கள் செவ்வக ஓட்டைக்குள் திணிக்கப்படுவதும் சரியாகப் பொருந்திப் போவதில்லை என்று முதலில் சொன்னவர் சிட்னி ஸ்மித் அல்லவா?

அவர் கருதியது என்னவெனில், ஜான் ஜேக்கப் ஆஸ்டரின் தந்தை அவனைத் தனது வாரிசாக கசாப்புக்காரனாக்கி இருந்தால், ஜான் ஜேக்கப் சிறந்த வியாபாரியாகவும், பணக்கார நிறுவனத்தின் ஸ்தாபகராகவும் மாறி எதிர்காலத்தை அழித்திருப்பார் என்பதுதான். பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுக்காக இயற்கை வடிவமைத்துள்ள தொழிலை ஏற்றுக் கொள்வதிலிருந்து, வெளியே இழுத்து வருவது வரை மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவர்களது கடமை இல்லையா? சர் ஜோஷுவா ரேனால்டுஸின் தந்தை அவரது ஆரம்ப காலக் கலை முயற்சிகளுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. ஓவியர் டர்னரின் தந்தை அவர் ஒரு முடிதிருத்துவோராக வேண்டுமென விரும்பினார். கலிலியோவின் தாய், தந்தையர் அவர்களது சொந்த விருப்பங்களைப் பின்பற்றி இருந்தால், அவரது அறிவியல் கண்டுபிடிப்புகள் குடும்பத்திற்கு வெளியே தான் கண்டுபிடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

மிகச் சிறந்தவை உலகில் பொருத்தமற்றவையாக உள்ளன. ஒரு பிஷப் ஓர் இளம் மதகுருவிடம் சொன்னார். ''நீ போதிப்பதை நான் தடுக்கவில்லை. ஆனால், இயற்கை தடுக்கிறது.'' இளம் மதகுரு பிலிப்ஸ் ப்ரூக்ஸ் பதில் சொன்னார். '' இந்த வயதில் போதிப்பதில் வெறுப்பு எதுவும் எற்படுவதில்லை. ஆனால் அது உங்கள் அறிவுரையைக் கேட்காமல் இருக்கக்கூடும்.''

எந்தத் தொழிலிலும் வெற்றிபெற, ஒருவரது நோக்கம் அவரது சக்திகளுடன் பொருந்தி இருக்க வேண்டும். சரியான இடத்தில் இல்லாதவன் அரை மனிதன். அவனது இயல்பான குணம் தவறான வழியில் திசை திருப்பப்படுகிறது. ஸ்விஃப்ட் சொல்கிறார்.

''மிருகங்கள் அறிந்து கொள்கின்றன தங்களது திறமைகள் எங்குள்ளவென;

ஒரு கரடி பறந்து செல்ல முயற்சி செய்யாது,

ஒரு சோர்வடைந்து விழுந்த குதிரை

ஐந்து கட்டைக் கதவைத் தாண்ட முயல்வதற்கு முன் பலமுறை சிந்திக்கும்.

ஆழமான அகலமான சாக்கடையைக் காணும்போது,

ஒரு நாய் உள்ளுணர்வால் பக்கத்தில் திரும்பும்.

ஆனால், அறியாமையைப் பின்பற்றி இயற்கைக்கு முரணாகச் செல்லும் நாம் காணும் ஒரே பிராணி மனிதன் மட்டுமே.

அவள் '' விட்டுவிடு!'' என உரக்க அழும்போது வீண் பிடிவாதம் அங்கே ஒட்டுகிறது அவனிடம்; அவனது அறிவு கொஞ்சம் வளைந்து பொருந்தாதபோது அவனது எல்லா வடிவமைப்புகளும் வளைந்து விடுகின்றன.''

ஒருவர் தந்தையின் தொழிலைப் பின்பற்றுவது அல்லது தந்தை மற்றும் தாத்தாவின் வேலையைப் பின்பற்றுவது ஒரு புத்திசாலித்தனமான செயல் என்று கூற முடியாது. இந்த வழிமுறை சில சமுதாய அமைப்புகளில் பல நூற்றாண்டுகளாக பரம்பரைப் பழக்கமாக இருந்திருக்கலாம். உங்கள் மாமா அல்லது சகோதரரின் வியாபாரத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டு நடத்துவது புத்திசாலித்தனமானதாக இல்லாமல் இருக்கக் கூடும். யாரோ ஒருவர் பணம் சம்பாதித்துவிட்டார் என்ற காரணத்திற்காக, அவர் செய்யும் தொழிலைத் தேர்ந்தெடுக்காதீர்கள். அதுவே சரியானதென்ற காரணத்தால் அதைத் தேர்ந்தெடுக்காதீர்கள். அது நாகரிகமானதென்ற காரணத்தால் அதைத் தேர்ந்தெடுக்காதீர்கள். அது எளிதானதென நீங்கள் நினைக்கும் காரணத்தால் அதைத் தேர்ந்தெடுக்காதீர்கள். உங்கள் ஆற்றலுக்குப் பொருத்தமான தொழிலைத் தேர்ந்தெடுங்கள். உங்கள் பலவீனத்துடன் பொருந்தும் தொழிலை அல்ல.

**உங்கள் தொழில்**

உங்களது திறமைதான் உங்கள் தொழில். உங்கள் நியாயமான நோக்கம் உங்கள் பண்பில் வெளிப்படுகிறது. புலவர் கூறுகிறார்: '' எந்த மனிதனும் தனது பண்புநலனை எதிர்த்து ஓயாமலும் வெற்றிகரமாகவும் போராடுவதில்லை; வாழ்வில் வெற்றிபெற உதவும் கொள்கைகளில் முதலாவதான ஒன்று என்னவெனில், அது நமது உடல் அமைப்பும் இயல்பான மனச் சார்பும் சரியாகப் பொருந்தும் விதத்தில் நமது தொழிலை ஒழுங்குபடுத்திக் கொள்வதே ஆகும். அது அவை இரண்டும் ஒன்றை எதிர்த்து மற்றொன்று போராடும் நிலையில் முயற்சி செய்வதைக் காட்டுமெனில் அதை விட்டு விடுவதே சிறந்தது ஆகும்.

-ஒரிசன் ஸ்வெட் மார்டன்- (தொடரும்)



# ஆசிய நாடுகளில் உடற்பருமன் நோய் இன்று மிகப்பெரிய சவாலாக உள்ளது

## பொது வைத்திய நிபுணர் தெரிவிப்பு

ஆசிய நாடுகளில் இன்று மிகப் பெரிய சவாலாக உள்ளது உடல் பருமன் நோயாகும். உடலில் உயரத்தை விட அதிகளவு உடல் பருமனால் பல்வேறு நோய்கள் உருவாவதாக ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது என்று பொது வைத்திய நிபுணர் எஸ்.ஸ்ரீகரன் தெரிவித்தார்.

மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட மருத்துவ சிகிச்சை முகாமில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஸ்ரீகரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எமது முன்னோர்கள் இவ்வாறான நோய்களுக்கு இலக்கானதில்லை. காரணம் அவர்களின் கடின உழைப்பும் உடற்பயிற்சியும் உணவு வகைகளுமே ஆகும். பல வீடுகளில் பாண், பிட்டு, சோறு போன்றவையே மூன்று வேளை உணவாகக் கொள்ளப்படுகிறது. சத்துள்ள மரக்கறி வகைகள், மற்றும் பழவகைகளை பெரும்பாலான வீடுகளில் உட்கொள்வதில்லை. மா, அரிசி வகைகளுக்கு மாற்றீடாக எதுவும் சாப்பிடுவதில்லை.

காலை, மாலை உணவுகளுடன் பயறு, உழுந்து, கௌப்பி, கடலை போன்ற உணவு வகைகளைப் பயன்படுத்துவதால் மாச்சத்துக்களால் ஏற்படும் நோய்களைப் பெருமளவில் குறைக்க முடியும். மா உணவுப் பொருள்களை உண்பதால் முதலில் நீரிழிவு நோய் தாக்கும். இதன் தொடராக இரத்த அமுக்கம், மாரடைப்பு, மூட்டுவாதம், குடல்புற்று போன்றவை எமது உடலைத் தாக்கும். மெல்லிய உடம்பில் வயிறு பெருப்பதே நோயின் ஆரம்ப அறிகுறியாகும்.

**நடப்பது சிறந்த பயிற்சி**

ஒரு நாளைக்கு குறைந்தது 30 நிமிடங்கள் நடப்பது சிறந்த உடற் பயிற்சியுடன் நோய் நம்மை அணுக முடியாத அளவுக்கு உடலைப் பாதுகாக்க முடியும். மாணவர்களைப் பொறுத்தவரையில் சிறுவயது முதல் பாடசாலைக்கு நடந்து செல்ல அனுமதிப்பதில்லை. வீட்டு வாசலில் வைத்து வாகனத்தில் ஏற்றி விடுகிறார்கள். பாடசாலையிலிருந்து வந்ததும் ரியூசனுக்கு அனுப்புகிறார்கள். இரவு வீட்டில் படிப்பு. இதுதான் இன்றைய மாணவர்களுக்கு நோய் வரக் காரணமாகிறது.

சிறுவர்களின் வளர்ச்சிக்கும் மூளை வளர்ச்சிக்கும் தினமும் முட்டை, பால், மீன் அவசியமாகும். சைவ உணவு அருந்துவோர் தமது பிள்ளைகளுக்கு பால், தயிர், சோயா போன்றவற்றை அவசியம் கொடுக்க வேண்டும்.

உணவு வகைகளில் மக்களின் அசண்டையீனமும் நோய்கள் வரக் காரணமாகிறது. உணவு வகைகளில் அனைத்து குடும்பங்களிலும் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். இந்த வகையான நோய்களினால் பீடிக்கப்படும் பலர் வைத்திய சாலைகளிலும் தனியார் வைத்திய சாலைகளிலும் சிகிச்சை பெற்று வருவதைக் காணமுடிகிறது.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் புதிதாக அமைக்கப்பட்ட விடுதிகளில் இரண்டில் இவ்வாறான நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது. இங்கு விஷேட பொது வைத்திய நிபுணர், நிபுணத்துவம் பெற்ற ஸ்கானிங் வைத்திய நிபுணர் மற்றும் வைத்திய அதிகாரிகள் பணியாற்றுகின்றனர். நவீன வசதிகளுடன் விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளதால் இவ்வாறான நோய்களின் அறிகுறிகள் காணப்படுவோர் அவசியம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றால் ஆரம்பத்திலேயே குணமாக்கிவிடலாம்.

35 வயதுக்கு மேற்பட்டோருக்கான சுகவாழ்வு சிகிச்சைப் பிரிவு சாவகச்சேரி வைத்தியசாலையில் இயங்கிவருகிறது. அதில் சகல விதமான பரிசோதனைகளும் இலவசமாக மேற்கொள்ளப்படுகிறது. இதில் பிரதேச மக்கள் அனைவரும் கலந்துகொண்டு தமது உடல் நிலைபற்றி அறிந்து கொள்ளலாம். எனக்கு ஒரு வருத்தமும் இல்லை எனக் கூறும் பலர் இந்தப் பரிசோதனைகளினால் தொற்றாநோய்கள் ஏற்பட்டிருப்பதை கண்டறிந்து உரிய சிகிச்சை பெற்று வருகிறார்கள் - என்றார். (எ-9)



பாசையூர் புலவர் மதுரகவி நீ. மிக்கோர்சிங்கம் எழுதிய புனித கிறிஸ்தோப்பர் நாட்டுக் கூத்து நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாசையூர் புனித அந்தோனியார் பங்கு மண்டபத்தில் கவிஞர் செ.அ.அழகராஜா தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபரும் ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளருமான திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைக்க நூலின் முதற் பிரதியை அருளானந்தம் செபஸ்ரியாம்பிள்ளை பெற்றுக் கொண்டார். (எ-23)

# தொண்டமானாறு வெளிக்கள பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 4

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தினால் கடந்த பங்குனி மாதம் நடத்தப்பட்ட கணித, விஞ்ஞான, வர்த்தகப் பாட க.பொ.த உயர்தரப் பரீட்சையில் புள்ளி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 30 மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**வர்த்தகம்**

பி. கஜானி (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எஸ். கங்காஜினி (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) , எஸ். மகிழினி (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), எஸ். பிரம்மிகா (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கே.மதுரா (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எஸ்.சிந்து (கொக்குவில் இந்துக் கல்லூரி), கே. தனுசியா (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எஸ். பிரகாஸ் (யாழ். இந்துக் கல்லூரி), எம்.கோணேஸ்வரன் (யாழ். ஹாட்லிக் கல்லூரி), வி. தீபிகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஆர். [illegible] (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஆர். டினேஸ் (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.பிரிதா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ஆர். அபிலாசினி (உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி), டி.ஜெனின்சியா (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஜி. சுகன்யா (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எஸ்.தரணியா (உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி), வி. நிரோஜன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ். சஞ்சிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ். தாரண்கா (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எ.றூத் ஸ்ரெபனி (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), எம். தயாளினி (யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் ), எ. தர்சகா (இளவாலை கன்னியர் மடம்), ரி.கேமலக்சியினி (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) , இ. பாணுஜா (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), ஆர். ஜனுசா (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), என். மதுரா (யாழ். மெதடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலை ), எஸ். விமோசனன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), என். தினேஸ் (யாழ். ஹாட்லிக் கல்லூரி), பி.றனுஜன் (யாழ்.இந்துக் கல்லூரி) (எ-14)

# மாற்றுவலுவுடையோர் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு, ஜூலை 4

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற மாற்றுவலுவுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் பார்வைக் குறைபாடுடைய மாணவர்களுக்கான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

**போத்தலில் நீர் நிரப்புதல்**

க.டேலைக்ஷன்-சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, ஜெ.ஜெயமதன்- தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம், த.சங்கீர்த்தன்-ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம்.

**நின்று நீளம் பாய்தல்**

க.டேலைக்ஷன், சு.சுஜீவன் (இருவரும் சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), ம.டனுஷன்-மானிப்பாய் சென் ஆன்ஸ் வித்தியாலயம்.

**திருகணை எறிதல்**

இ.மிதுன்-நவாலி சென். பீற்றர்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, ஜெ.ஜெயமதன்-தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்.

**பெண் 75 மீற்றர்**

வி.விதுஷா, அ.அஸ்வினி (இருவரும் சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை).

**பந்து எறிதல்**

இ.மயூரிகா, ச.பர்மிசா- (இருவரும் அராலி இந்துக் கல்லூரி).

**நீர் நிரப்புதல்**

வி.விதுஷா, அ.அஸ்வினி (இருவரும் சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), ச.பர்மிசா-அராலி இந்துக் கல்லூரி.

**நின்று நீளம் பாய்தல்**

வி.விதுஷா, அ.அஸ்வினி (இருவரும் சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), இ.மயூரிகா-அராலி இந்துக் கல்லூரி.

**திருகணை எறிதல்**

றொ.கிரிஸ்ரீனா-நவாலி சென். பீற்றர்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, ச.பர்மிசா-அராலி இந்துக் கல்லூரி. (எ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ராணுவ ஆட்சி

## பாகிஸ்தானில் வரலாம் என்கிறார் முஷாரப்

லண்டன், ஜூலை 4

பாகிஸ்தானில் மீண்டும் இராணுவ ஆட்சி ஏற்படும் நிலை உள்ளது என அந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் தெரிவித்துள்ளார்.



நான் எனது சொந்த விருப்பப்படி தாய் நாட்டுக்கு நிச்சயம் திரும்புவேன். என்னை இன்டர்போல் மூலம் கைது செய்ய வேண்டும் என்று பாகிஸ்தானில் பலரும் கேட்கின்றனர்.

பாகிஸ்தானில் நிர்வாகம், நீதித்துறை மற்றும் இராணுவத்துக்கு இடையே உட்பூசல் ஏற்பட்டு அந்த நாடு அரசியல் நெருக்கடியில் சிக்கியுள்ளது. இந்த நிலையில், பிரிட்டனில் வசித்து வரும் பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப், அமெரிக்காவின் கொலராடோ மாகாணத்தில் உள்ள ஆஸ்பென் நகரில் உரை நிகழ்த்தினார்.

அங்கு அவர் கூறியதாவது:-


பாகிஸ்தான் பழைய நிலைக்கு (இராணுவ ஆட்சி) திரும்பிக் கொண்டிருக்கிறது. நாட்டைக் காப்பாற்றுவதற்கு மக்கள், இராணுவத்தையே மீண்டும் நாடுகின்றனர். பாகிஸ்தானின் அரசியல் சட்டம் மிகவும் புனிதமானது. எனினும் அதற்கு மாறாக (இராணுவ ஆட்சி) எதையாவது செய்தால் மட்டுமே நாட்டைக் காப்பாற்ற முடியும். நாம் அதைச் செய்யப் போகிறோமா? அல்லது அரசியல் சட்டத்தைத் தாங்கிப் பிடித்து, நாட்டைக் கவிழ விடப் போகிறோமா?

நான் எனது சொந்த விருப்பப்படி தாய்நாட்டுக்கு நிச்சயம் திரும்புவேன். என்னை இன்டர்போல் மூலம் கைது செய்ய வேண்டும் என்று பாகிஸ்தானில் பலரும் கேட்கின்றனர். எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. இந்த ஆண்டில் தேர்தல் நடக்கும் என்று நான் கருதுவதால் நிச்சயம் நாடு திரும்புவேன். கைதாவதற்கு நான் தயாராக இருக்கிறேன். உயிருக்கு ஆபத்து என்றாலும் அதைப் பொருட்படுத்தாமல் நாடு திரும்புவேன் என்று முஷாரப் பேசினார். பின்னர் அமெரிக்க செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், 2004ஆம் ஆண்டில் நான் ஈரானுக்குப் பயணம் மேற்கொண்டேன். அப்போது அந்த நாட்டின் ஜனாதிபதி அஹமதி நிஜாத் மற்றும் மதத் தலைவர் அயதுல்லா கொமேனியைச் சந்தித்தேன்.

அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடவேண்டாம் என்றும் உலக நாடுகளுடன் மோதல் போக்கைக் கைவிட்டு, சமரச அணுகுமுறையைப் பின்பற்றுமாறும் அவர்களிடம் வலியுறுத்தினேன்.

ஆனால் ஈரான் ஜனாதிபதி எனது ஆலோசனையைக் கேட்கவில்லை. அவர்கள் அணு ஆயுதம் தயாரிப்பதில் உறுதியாக உள்ளனர். அவர்கள் இதைச் செய்வதற்கு அவசியமே இல்லை'' என்று தெரிவித்தார் முஷாரப்.

# மாலியில் சமாதிகள் தீவிரவாதிகளால் தகர்ப்பு



மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் உள்ள புராதன டிம்பக்டூ நகரிலுள்ள சமாதிகள் அனைத்தையும் அழிக்கும் நடவடிக்கையை, தாங்கள் முடிக்கும் நிலையில் உள்ளதாக, அங்குள்ள ஒரு இஸ்லாமிய தீவிரவாதக் குழுவான அன்சர் தீன் தெரிவித்துள்ளது.

துப்பாக்கிகள் மற்றும் கோடரிகளைக் கொண்டு இந்தத் தாக்குதல்களை நடத்திவரும் அந்தக் குழுவினர், தற்போது அங்குள்ள மிகப் புனிதமான ஒரு பள்ளிவாசலின் கதவையும் தகர்த்துள்ளனர்.

பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த சித்தி யாஹியா பள்ளிவாசலின் கதவை அன்சர் தீன் தீவிரவாதிகள் இடித்துத் தள்ளியுள்ளனர்.

அந்தப் பள்ளிவாசலின் கதவின் மூலமாகத்தான் புனிதர்களின் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடங்களுக்குச் செல்ல முடியும் என்பதும் அந்தக் கதவு இதுவரை திறக்கப்பட்டதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஷரியா சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் வராத 90 சதவீதமான சமாதிகளைத் தாங்கள் அழித்தொழித்துள்ளதாக, அல்குவைதாவுடன் தொடர்புடைய அமைப்பான அன்சர் தீனின் பேச்சாளர் பி.பி.சியிடம் தெரிவித்துள்ளார்.

நிலப்பரப்பிலிருந்து 15 மீற்றருக்கும் அதிக உயரத்தைக் கொண்ட அனைத்து சமாதிகளும் தகர்க்கப்படும் எனவும் அந்தப் பேச்சாளர் கூறியுள்ளார்.

# குற்றவியல் நீதிமன்ற பிரதிநிதிகள் விடுதலை

லிபியாவின் ஸிலிட்டான் பகுதியில் அரச ஆதரவு ஆயுததாரிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் பிரதிநிதிகள் விடுக்கப்பட்டுள்ளனர். உளவு பார்த்த குற்றச்சாட்டில் கடந்த நான்கு வாரங்களாக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சட்டத்தரணி மிலிண்டா ரெய்லர் உள்ளிட்ட நால்வரும் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

விடுதலை செய்யப்பட்டவர்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அமைந்துள்ள நெதர்லாந்தை சென்றடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தலைவர் லிபியாவுக்கு பயணம் மேற்கொண்டதைத் தொடர்ந்து இவர்கள் விடுதலை செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கடாபியின் மகனான சைய்ப் அல் இஸ்லாமிற்காக உளவு பார்த்த குற்றச் சாட்டிலேயே சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் பிரதிநிதிகள் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சைய்ப் அல் இஸ்லாமைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கோரியுள்ளது. எனினும் தமது நாட்டு நீதிமன்றத்திலேயே சைய்ப் அல் இஸ்லாமிற்கு எதிரான வழக்கு விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென லிபியா வலியுறுத்தியுள்ளது.

விடுதலை செய்யப்பட்ட சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் பிரதிநிதிகள் இத்தாலியின் இராணுவ விமானம் மூலம் ஸிலிட்டான் பகுதியில் இருந்து நெதர்லாந்து பயணமாகியுள்ளனர்.



சுகயீனத்துக்கு மத்தியிலும் வெனிசுவேலாவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி ஒன்றுக்கு வருகை தந்திருந்தார் அந்த நாட்டு ஜனாதிபதி சாவேஸ்.

# லிபியாவில் ஆர்ப்பாட்டம்

லிபியாவின் கிழக்குப் பிராந்தியத்தில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சுயாட்சியை ஏற்படுத்துமாறு வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது என சர்வதேசத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

பெங்காசியில் உள்ள தேர்தல் அலுவலகத்துக்கு முன்னால் ஒன்று கூடிய மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

லிபியாவில் புதிய நாடாளுமன்றத்துக்கான தேர்தல்கள் நடத்தப்படவுள்ள நிலையில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளமை அரசியல் நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளது.

முன்னாள் தலைவர் முகம்மர் கடாபி கொல்லப்பட்டதன் பின்னர் முதல் தடவையாகப் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது.

லிபிய நாடாளுமன்றத்தில் 60 ஆசனங்கள் கிழக்குப் பகுதிக்கும் 102 ஆசனங்கள் மேற்குப் பகுதிக்கும், 38 ஆசனங்கள் ஏனைய பகுதிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

# அதிக லாபம் ஈட்டும் சீன வங்கிகள்

உலக அளவில் அதிக இலாபம் ஈட்டும் வங்கிகளின் பட்டியலில் மூன்று சீன வங்கிகள் இடம்பெற்றுள்ளன. வங்கிகள் குறித்த கணிப்பீடுகளை ஆண்டுதோறும் நடத்தும் பிரபல பேங்கர் பத்திரிகை வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் இது குறித்து கூறியிருப்பதாவது: சீன வங்கிகள் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன் உலக அளவில் நான்கு சதவீத இலாபம் மட்டுமே ஈட்டி வந்தன. கடந்த ஆண்டில் ஐரோப்பிய வங்கிகள் உலக அளவில் ஆறு சதவீத இலாபத்தைப் பெற்றுள்ளன. ஆனால், தற்போது ஐரோப்பிய நாடுகளில் காணப்படும் கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக சீன வங்கிகளில் இலாபம் அதிகரித்துள்ளது. மிகக்குறைவான இலாபங்களை ஈட்டும் 25 வங்கிகளில் 24 வங்கிகள் ஐரோப்பாவில் உள்ளன. உலக அளவில் சீன வங்கிகள் 29 சதவீத இலாபத்தை ஈட்டியுள்ளன. இதில் சீன தொழில் வங்கி முதலிடத்தை வகிக்கிறது. இவ்வாறு அந்தப் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

# இரவு, பகல் எவ்வேளையிலும் திருமணம் செய்யலாம்

## பிரிட்டன் விதிமுறையில் மாற்றம்

பிரிட்டனில் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற விதிமுறை மாற்றப்பட்டு 24 மணி நேரத்தில் எப்போது வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் 1837ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட விதிமுறைப்படி காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை தான் திருமணங்கள் செய்யப்பட்டு வருகின்றன. பல்வேறு தரப்பில் எழுந்த கோரிக்கையின் அடிப்படையில் இந்த 175 ஆண்டு கால சம்பிரதாயம் தற்போது மாற்றப்பட்டுள்ளது. ''இதன் படி 24 மணி நேரத்தில் இரவு, பகல் எனப்பாராமல் எப்போது வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது'' என, பிரிட்டன் மற்றும் வேல்ஸ் பகுதித் தலைமைப் பதிவாளர் சாரா ரேப்சன் தெரிவித்துள்ளார்.

'முக்கியமான தேவாலயங்கள் அல்லது வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் திருமணம் செய்து கொள்ள விரும்புபவர்கள் அந்த இடங்கள் திறந்திருக்கும் நேரத்தில் மட்டும்தான் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

மற்ற இடங்களில் திருமணம் செய்து கொள்ள விரும்புபவர்கள் 15 நாள்களுக்கு முன்னதாக இது குறித்து எழுத்துபூர்வமான தகவலைத் தெரிவிக்க வேண்டும்'' என, சாரா ரேப்சன் தெரிவித்துள்ளார்.

# சீன விமானத்தைக் கடத்தும் முயற்சி முறியடிப்பு

பீஜிங், ஜூலை 4

சீன விமானத்தைக் கடத்த முயன்றபோது ஏற்பட்ட மோதலில் காயமடைந்த தீவிரவாதிகள் இரண்டு பேர், சிகிச்சை பயனின்றி உயிரிழந்தனர். சீனாவில், உய்குர் என்ற பகுதியில், முஸ்லிம்கள் அதிகம் வசிக்கின்றனர். இங்குள்ள மக்கள் சிலர், தனி நாடு கோரி வருகின்றனர். தனி நாடு கோருபவர்கள், அண்டை நாடுகளில் பதுங்கிக் கொண்டு, சீனாவில் [illegible] போன்ற நாச வேலைகளைச் செய்து வருகின்றனர்.

கடந்த மாதம் 29ஆம் திகதி, சின்ஜியாங் மாகாணத்தில், ஹோட்டன் என்ற இடத்திலிருந்து, உர்ம்குய் பகுதிக்கு, 'டியான்ஜின்' ஏர் லைன்ஸ் விமானம் புறப்பட்டது. புறப்பட்ட 10 நிமிடங்கள் கழித்து, விமானத்தில் இருந்த ஆறு பேர், விமானியை மிரட்டி, விமானத்தை வேறு இடத்துக்கு திருப்பிச் செலுத்துமாறு கூறியுள்ளனர். விமானத்தை, தாங்கள் [illegible] இடத்துக்குச் செலுத்தாவிட்டால், வெடி வைத்து தகர்க்கப் போவதாக மிரட்டினர்.

அதைத் தொடர்ந்து, விமானத்திலிருந்த ஆறு பொலிஸார் மற்றும் விமான ஊழியர் உள்ளிட்டோர், கடத்தல்காரர்களுடன் கடுமையாகச் சண்டையிட்டனர்.

இதில், இரண்டு கடத்தல்காரர்கள் பலத்த காயமடைந்தனர். விமானம், புறப்பட்ட ஹோட்டன் நகருக்கே திரும்பியது. விமானம் தரையிறங்கியதும், கடத்தல்காரர்கள் ஆறு பேரும் கைது செய்யப்பட்டனர்.

பலத்த காயமடைந்த இரண்டு கடத்தல்காரர்கள், சிகிச்சை பயனின்றி, மருத்துவமனையில் நேற்று உயிரிழந்தனர். இந்த விமானத்தில், 92 பயணிகளும் ஒன்பது விமான ஊழியர்களும் இருந்தனர்.

விமானத்தில் பயணித்த பொலிஸ் அதிகாரிகள் ஆறு பேர், ஆயுதங்கள் வைத்திருந்ததால், அவற்றின் உதவியுடன், கடத்தல்காரர்களை மடக்கியதாக, சீனப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலுசந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# ஜீ.எஸ்.பி. அரசியல்

அமெரிக்கா அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு வழங்கிவரும் ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை இலங்கைக்கு மீண்டும் நீடிக்கத் தீர்மானித்துள்ளது. இந்த முறையோடு இந்த வரிச் சலுகை அமெரிக்காவினால் நீக்கப்படக்கூடும் எனப் பலரும் எதிர்பார்த்திருந்த நிலையில் இந்த அறிவிப்பு ஆச்சரியத்தை ஏற்படுத்தி யுள்ளது.

இந்த வருடத்தின் தொடக்கப் பகுதியில் அமெரிக்காவினால் முன்மொழியப்பட்டு, நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான ஜெனிவா தீர்மானத்தைத் தொடர்ந்து இந்த நாடு முற்று முழுதாக அமெரிக்காவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்திருந்தது. அத்தோடு, மேற்கு நாடுகளுக்கு எதிரான நாடுகளோடு கைகோர்த்துச் செல்லவும் முற்பட்டிருந்தது. அதற்கான இராஜதந்திரப் பணிகளை இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சின் கீழ் இயங்குபவர்களும் ஜனாதிபதியும் தீவிரமாக மேற்கொண்டு வந்தனர்.

அத்தோடு நின்று விடாமல் அமெரிக்கா எப்போதும் வலியுறுத்திக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினை தீர்வுக்கான மூலோபாயங்களையும் இலங்கை நடைமுறைப்படுத்தவதும் தாமதமாகியே வருகின்றது. இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின்போது, நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள், போருக்குப் பின்னரான சகஜ வாழ்வு மற்றும் இனப்பிரச்சினை தீர்வு போன்ற விடயங்களில் சரியான தீர்வை எட்டுவதற்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தும்படியும் அது வலியுறுத்தியே வருகின்றது. ஆனால் இலங்கையில் ஆளும் தரப்பினர் இதனை காதில் போட்டுக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே, அமெரிக்கா இலங்கையிடமிருந்து எதிர்பார்க்கும் எந்த விடயங்களும் நடைமுறைக்கு வரவில்லை. இலங்கை தொடர்ந்தும் ஏமாற்றிக்கொண்டே இருக்கிறது.

இந்த நிலையிலேயே அமெரிக்கா ஏமாற்றத்தை ஜீரணிக்காது ஒவ்வொரு வருடமும் வழங்கும் ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை இந்த வருடத்துடன் நிறுத்தும் என பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது நடக்கவில்லை. இதனை நோக்கும் ஒருவர் அமெரிக்காவுக்கு வெட்கம் இல்லையா என எண்ணக் கூடும். ஆனால் உண்மை அதுவல்ல.

வெளிப்படையாக மனித உரிமைகள் மற்றும் போர்க் குற்றங்கள், இனப்பிரச்சினைத் தீர்வு போன்ற விடயங்களை வைத்து, அமெரிக்கா இலங்கையை மிரட்டுவது தமக்குச் சார்பான ஒரு ஆட்சியை இந்தத் தீவில் ஏற்படுத்திக் கொள்ளவே. அதற்கு மஹிந்த தலைமையிலான அரசு ஒருபோதும் நேரடியான அனுசரணையை வழங்காது என்பது அமெரிக்காவுக்கு நன்றாகவே தெரியும். எனவேதான் அது மாற்று ஆட்சி ஒன்றை இலங்கையில் எதிர்பார்க்கின்றது. அதற்கு தகுதியுடைய ஒருவர் சரத்பொன்சேகா தான் என்றும் கணக்குப் போட்டுள்ளது . உடனடியாக எதிர்பார்க்கும் ஆட்சி மாற்றத்தை நிகழ்த்த முடியாவிட்டாலும் காலப் போக்கில் அது கைகூடும் என எதிர்பார்க்கின்றது. ஆகவேதான், கிடைத்திருக் கும் மனித உரிமைகள் துரும்பைப் பயன்படுத்தி, சரத் பொன்சேகாவை சிறை மீட்டிருக்கிறது அமெரிக்கா.

அமெரிக்காவின் எண்ணத்தை இலங்கை புரிந்துகொண்டு நிறைவேற்றியமைக்காகவே இந்த ஜி.எஸ்.பி. வரிச்சலுகை வழங்கப்பட்டிருக்கின்றது. நலிந்து செல்லும் பொருளாதார நிலைமைகளைச் சீர்செய்ய இது தக்க சந்தர்ப்பமாக அமைகின்ற போதிலும் நீண்டகால நோக்கில் அமெரிக்காவின் எண்ணம் சாத்தியப்படப் போகின்றமையையே இதுபோன்ற இரட்டைமுக நடவடிக்கைகள் சுட்டி நிற்கின்றன.

# தறித்த பூவரசும், தவிக்கும் புலுணிகளும்

■ செந்தூரி

*“ஆங்கிலேயர்களின் அற்பத்தனம், கடல் கடந்து ஆயிரமாயிரம் மைல்களின் தொலைவில் அமைதியான வாழ்வினை கொண்டிருந்த ‘அபார்ஜீனிஸ்’ மக்களின் பாரம்பரிய மண்ணை, கொலை வெறிக் குற்றவாளிகளை நிரப்பும் குப்பைக் கிடங்காக மாற்றிப் போனது.*

ஆஸ்திரேலியாவின் கிரிக்கெட் கழக மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது போட்டியொன்று! மைதானத்தின் ஓரங்களிலுள்ள தடுப்புச் சுவர்களைக் கடந்து, பாதுகாவலர்களின் கண்களில் பொடி போட்டுவிட்டு வேகமாக மைதானத்தின் குறுக்காக ஓடுகின்றான் அந்த நிர்வாண மனிதன். துரத்தி வரும் காவல்துறையினரின் கைகளுக்கு அகப்பட்டுவிடாமல் மைதானத்தைக் கடந்துவிடும் வேகத்தில் குறுக்கறுத்து விரைந்து கொண்டிருந்தவனை, தன் தோள்களினால் மோதி வீழ்த்துகின்றான் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரனொருவன். அன்றூ சைமண்ட்ஸ்- அவ்வப்போது, மாறிக் கொண்டேயிருக்கும் முடியலங்காரம்,நெடிதுயர்ந்த வளமான உடலமைப்பு, சகவீரர்களே சகஜமாகப் பழக அஞ்சும் முரட்டு சுபாவம், சகல துறை ஆட்டத்தினால் எதிரணிகளை கலங்கடிக்கும் திறமை என பன்முகப்படுத்தப்பட்ட இந்த வீரன், இன்றைய நாளில் ஆஸ்திரேலியாவின் தேசிய அணியில் இல்லை. ஒழுக்காற்று தண்டனைகளும், வயதும், திறன்குறைவும், உடல் உபாதைகளும் காரணமெனக் கூறப்பட்டு விலக்கப்பட்ட சைமண்ட்ஸ் தான் ஆஸ்திரேலியாவின் பூர்வீகக் குடிமகன். அணியில் வேண்டப்பட்ட வீரனாக விளங்கிய நாள்களில் இவனது களத்துக்கு வெளியேயான பொழுது போக்குகளே வித்தியாசமானவை. சொந்தவூரின் ஆற்றோரங்களில் தூண்டிலிட்டு மீன் பிடித்து, வாட்டி உண்பது, முதலைகள் நிறைந்த ஆற்றினூடாக தனியாளாக படகு வலித்து சவாரி செய்வது, ஏறக் கடினமான பாறைக் குன்றுகளில் கயிற்றின் உதவியுடன் உயரம் தொடுவது என வில்லங்கங்களின் கலவையான இவன் சார்ந்திருந்த தூய மரபு வழி இனம், இன்றைய அந்த நாட்டின் சிறுபான்மையினர். குடித்தொகையில் வெறும் இரண்டு லட்சம் தனியன்கள்!

25000 ஆண்டு கால நிலத்தொடர்புகளை ஆஸ்திரேலியத் தீவுகளில் கொண்டிருந்த இனம், அபார்ஜீனிஸ். வேறெவராலும் கண்காணாத தீவாக இருந்த காலத்தில் பிரிட்டனின் - நாட்டுக்கு தீட்டான கொடுங் குற்றவாளிகளைக் குடும்பத்தோடு தேச சஞ்சாரம் செய்யும் கூரையற்ற சிறைச்சாலையாக விஸ்தரிக்கப்பட்டது.

ஆங்கிலேயர்களின் அற்பத்தனம், கடல் கடந்து ஆயிரமாயிரம் மைல்களின் தொலைவில் அமைதியான வாழ்வினை கொண்டிருந்த அபார்ஜீனிஸ் மக்களின் பாரம்பரிய மண்ணை, கொலை வெறிக் குற்றவாளிகளை நிரப்பும் குப்பைக் கிடங்காக மாற்றிப் போனது.

தமக்கான உணவை குழுக்களாக இணைந்து தேடுவதும், கூட்டம் கூட்டமாக பகிர்ந்து உண்ணுவதும், நீராதாரங்களினருகில் கூடாரம் அமைத்துத் தங்குவதுமாக அழகான வானமே கூரை, பூமியே வசந்தமென்று வாழ்ந்து நகர்ந்த பூர்வீகிகளை, கூண்டோடு அழிக்க -நாகரிக உச்சத்தில் தம்மைத் தாமே முடிசூடிய பிரிட்டிஷ் பெருமக்கள் கையாண்ட கபடம் காலத்தினால் அழித்தகல முடியாத கருஞ்சுவடு! கூட்டமாக நீரருந்தும் நிலைகளில் நீருடன் கலக்கப்பட்ட விஷமும், இலவசமாக விநியோகிக்கப்பட்ட மதுபானங்களுக்குள் இடைச் சொருகப்பட்ட மென் நஞ்சுகளும், அப்பார்ஜீனிஸ் ஆண்- பெண் மக்களை கொத்துக் கொத்தாக மர்ம நோயில் வீழ்த்திப் பழி வாங்கின. மிஞ்சியிருந்த பழங்குடியின் பாலகர்களையும், சிறுவர்களையும் தாய்மார்களிடமிருந்து பிரித்தெடுக்கும் மிருகத்தனமான திட்டத்திற்கு “அடுத்த தலைமுறைகளை நாகரிகப்படுத்தும் நடைமுறைகள்” எனப் பொய் புனைந்த ஆங்கிலேய வழியரசு, இதற்கென 1869 இல் தனிச்சட்டம் ஒன்றினையும் இயற்றி, தன் தவறுகளை நியாயப்படுத்தி ஏப்பம் விட்டுக்கொண்டது. “தலைமுறைக் கடத்தல்” (Stolen generation) என்கிற தீராப்பழியின் நிகழ்கால உதாரணமாக தன்னை உலக மனித உரிமைகள் வரலாற்றில் அடையாளப்படுத்திய ஆஸ்திரேலிய அரசு வலிதற்ற நிலையிலிருந்த மேற்படி சட்டத்தை 1969வரை நடைமுறையில் வைத்திருந்ததென்பதும், 2008 இல் ஆஸ்திரேலிய பிரதமர் “கெவின் ரூட்” தலைமுறைக்கடத்தல் பற்றிய விவாதங்களின் பின் தனது பகிரங்க மன்னிப்பை கோரியிருந்தார் என்பதும் வரலாறு.

மூலைப்பால் மறக்க முன்னரே, தன்னினத்தின் மரபுகளிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட அபார்ஜீனிஸ் இனப்பிஞ்சுகள், மேல்வர்க்கத்தினரிடம் அடிமைகளாகவும், வாழ்நாள் ஊழியர்களாகவும் மாற்றப்பட்டு தம் தனித்துவத்தை இழந்து போயினர். தன் கைகளிலிருந்து வலிந்தெடுக்கப்படுகின்ற குழந்தைகளையும், திட்டமிட்டு பறிக்கப்பட்ட தன்னினத்தின் மரபுரிமைகளையும், ஆற்றொணா வலியுடன் உயிர் விடும் போதிலும் உரத்த குரலில் கதறியழுத அந்தப் பழங்குடி மக்களின் ஒவ்வொரு துளிக் கண்ணீரும், நின்றறுக்கும் கூர்முனை வாள், இல்லையா?

ஆசிய மைதானங்களில், மித-மெது பந்து வீச்சாளர்களைக் கண்டாலே, ‘தண்ணீர் வாளிக்குள் தனியே இறக்கி விடப்பட்ட குழந்தையின் குதூகலத்துடன் மைதானத்தின் நான்கு புறமும் பந்துகளை பறக்கவிடும் ருத்திரதாண்டவம் ஆடிவிட்டு ஓய்வதால், அன்றூ சைமண்ட்ஸ் மீது ஆசிய அணிகளின் சார்பில் இனம்புரியாததொரு வெறுப்பு எப்போதுமிருந்தது. அபார்ஜீனிஸ் இனக்கடத்தலினால் பாதிக்கப்பட்ட மண்ணின் மைந்தனாக, அவனை உணர்ந்த நாள் முதல் காயம் பட்டு வீழ்ந்த மான்குட்டியின் துடிப்புடன் மனம் பதைக்க வைப்பவனாக மாறிப்போனான் அந்த முரட்டுப்பயல்.

ஆஸ்திரேலியாவின் தேசிய அணிக்காக ஆட்டநாயகன் விருது வென்று, அணியின் வெற்றிக்கான தனித்த கீர்த்தியை தன்கைகளில் சுமந்தபடி, புற்தரைகளில் நின்றிருந்த ஒவ்வொரு முன்னிரவுப் பொழுதுகளிலும், “இன்னா செய்தாரை ஒறுத்து அவர் நாண நன்னயம் செய்த” வள்ளுவர் குவியமாக வார்க்கப்பட்டிருந்திருக்கின்றது அவனது பெருந்தன்மையும், மனவுறுதியும்!

உலகரங்குகள் வரை அவசர கவனயீர்ப்பு தேவைக்குரிய ஈழத்தமிழரின் மீதான அடுத்த கட்ட நிலக் கபளீகரம் பற்றிய சர்ச்சைகளும், எதிர்ப்பு ஈனஸ்வரங்களும் பிறிதொரு தலைமுறைக் கடத்தலை பதிவு செய்யும் முயற்சிகளாகவே பார்க்கப்படுகின்றன. இனவாதம், மொழிவாதம், மதவாதம் ஆகிய திரிசூலங்களினால் ஏற்கனவே இறுக்கிக் குத்தப்பட்டிருக்கும் தமிழினத்தின் குருதி தோய்ந்த, செவ்வுடலங்களை அதக்கிய மண்மீது ஆக இறுதியாக எய்தப்பட்டிருப்பது பிரதேச வாதம்.

தெல்லிப்பழையில், திருமுறிகண்டியில் இன்னும் எங்கெங்கு நில ஆக்கிரமிப்புக் கெதிராக மக்கள் திரண்டார்களோ அங்கெல்லாம், தாயின் தாவணி ஓரத்தை கைப்பற்றியபடியும், தந்தையின் விரல்களை இறுகப்பற்றிய படியும் நின்று கொண்டிருக்கும் ஒவ்வொரு நாளைய விருட்சங்களின் பிறப்புரிமையிலும், போராட்ட சிந்தனை இன்னமும் ஊன்றி பதிக்கப்படுவதை அடக்குமுறையாளர்கள் நடைமுறையில் உணரப் போவதேயில்லை. அவனையறியாமலே அவனினத்தின் முந்தைநாள் சோகத்தை, நேற்றைய அவலத்தை, இன்றைய சீரழிவுகளை பேரினவாதம் மெல்லிய புத்திக்குள் வலிந்து திணித்துப் போகின்றது.

போயொழிந்த வருடங்களின் பிறவுலக தேசங்களின், வரலாறுகளைப் போலல்லாது மூதாதையர்களினால் நாட்டப்பட்ட போராட்ட மரத்தின், கனிகளை தனித்தேசமாக சுவைக்கும் பாக்கியம் எத்தனையாம் தலைமுறையினால் சுகிக்கக் கிட்டுமோ? எனும் மர்மம் தமிழினத்துக்கு மட்டும், ‘இலகுவில் கணிக்க முடியாத அவலமாகிப் போய்க் கொண்டிருப்பதை நன்குணர்த்துகின்றன அண்மைய நாள்கள். தொழில்நுட்ப காலத்து யூதர்களாய், இருபத்தோராம் நூற்றாண்டின் அபார்ஜீனிஸ்களாய், தன்னிடம் மீதமிருக்கும் வாழ்வுரிமையையும் இழந்து விட வேண்டும் என்கின்ற வலிமையான நெருக்குவாரங்களுக்குள் நாம் வசமாக சிக்கவைக்கப்பட்டிருப்பதே பேருண்மை! இராணுவ குடியேற்றங்களைத் தடுக்கமுடியாதபடி, உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் முடக்கப்பட்டுள்ள வாழ்நிலங்களை மீட்கமுடியாதபடி, கண்முன்னே காவு கொள்ளப்படுகின்ற பூர்வீக பூமிகளை சொந்தம் கொண்டாட முடியாத படி வடகிழக்கு மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் “செக்-மேட்” பொறி ஒன்றினால் வளைக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரச அதிகாரிகளை முன்னிலைப்படுத்தி, தமிழர்களான நீதித்துறை உயர் பணிப்பாளர்களைப் பஞ்சாயத்துக்காரர்களாக்கி, தமிழன் என்று சொல்லிக் கொள்பவர்களையே மீளக்குடியேற்ற அமைச்சுப் பொறுப்புக்களிலும், புனர்நிர்மாண செயற்திட்ட கண்காணிப்பாளர்களாகவும் காவலுக்கு இருத்தி பலத்த முன்னெச்சரிக்கையுடன் எம் அடிமடியிலும் அகலக்கால் வைக்கும் வரை சுதாகரிக்க மறந்தது பாரதூரமான தவறில்லையா? “மீண்டுமொரு முறை தோற்றுவிடப் போகின்றாயே தமிழா!” எனும் அசரீரி இவ்வளவு தாமதமாகித்தான் எம் செவிச் சவ்வுகளை ஓங்கியறைந்ததும், மென் போக்குகள் சூழ் போராட்ட வடிவங்களைக் கூட வெளிப்படுத்தத் தயங்கும் நழுவற்பாங்குடன்வாளாவிருப்பது, முழுவினத்தினதும் எதிர்ப்பு சக்தியைப் பிடித்து விழுங்கும் எச்.ஐ.வி வைரசுக்கு ஒப்பானதே!

150 வருடங்களுக்குப் பின்னர் ஆஸ்திரேலிய பிரதமர் மன்னிப்புக் கேட்டதால், மறைத்து விட முடியாத அபார்ஜீனிஸ் களின் வானளாவிய துயர ஓலங்களைப் போல், சந்திரிகா, சரத். என்.சில்வா வரிசையில் பதவியிறக்கத்தின் பின்னும், இளைப்பாறிய பின்னும்தான் இலங்கைத் தீவின் பரிபாலனத் துறையினருக்கு ஞானம் பிறப்பதனால், தமிழனுக்கு இழைத்த தவறுகள் பிரயாயச்சித்தம் தேடப்படுவனவல்லவே! “தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகும்” எனும் சட்டவாக்கியம் பெரிய கட்டுப்புத்தகங்களின் பக்கங்களிலிருந்து எழுந்து வந்து யாழ். பஸ்நிலைய முன்றலில் முறிந்து கிடக்கின்றது.

“உங்களுக்கு தெரியாத சட்டமில்லை! அதில் எந்தச் சட்டம் சிறந்ததோ, அதிலிருந்து, அல்லலுற்று ஆற்றாது அழுந்தமிழனுக்கு நீதி வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். யுவர்ஹானர்!!”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று வித நண்பர்கள்

ஓர் ஊரில் மன்னர் ஒருவர் இருந்தார்.அவர் புத்திக் கூர்மையுள்ளவர். பொதுவாக மன்னர்களுக்குச் சந்தேகம் வந்தால் சபையில் இருக்கும் சான்றோர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது தானே வழக்கம். ஆனால் இங்கு அப்படி இல்லை.

மற்றவர்களுக்குச் சந்தேகம் வந்தால் மன்னரிடம் வந்து கேட்டுத் தெரிந்து கொள்வார்கள்.

அவ்வாறு கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக ஒரு நாள் பெரியவர் ஒருவர் வந்தார்.அவர் தன் கையில் மூன்று பொம்மைகளை வைத்திருந்தார்.

மூன்று பொம்மைகளும் பார்ப்பதற்கு ஒரே மாதிரி இருந்தன. அவற்றுக்கு இடையில் கொஞ்சம் கூட வித்தியாசம் தெரியவில்லை.

''என்ன மூன்று பொம்மைகளோடு வந்திருக்கிறீர்கள்?''என்று அரசர் கேட்டார். ''எனக்கு வேண்டிய ஒருவனிடம் மூன்று பொம்மைகள் செய்து கொடுக்கும்படி கேட்டிருந்தேன்.அவன் மிகவும் புத்திசாலி. அவன்தான் இவற்றைச் செய்து கொடுத்தான். ஆனால் இதில் ஒரு சிக்கல் என்றார் பெரியவர்.

''என்ன பிரச்சினை?'' என்று கேட்டார் மன்னர்.

பெரியவர், ''நான் அவனிடம் மூன்று விதமான பொம்மைகள் செய்து தரும்படி கேட்டேன்.ஆனால் அவனோ மூன்று பொம்மைகளையும் ஒரே மாதிரி செய்து கொடுத்துவிட்டான் என்றார்.

''இதைப் பற்றி நீங்கள் அவனிடம் கேட்டிருக்கலாமே என்றார் மன்னர்.

'' கேட்டேன், அவன் என்ன சொல்கிறான் என்றால், 'இந்த மூன்றும் ஒரே மாதிரி பொம்மைகள் இல்லை; இவை மூன்றும் மூன்று வெவ்வேறு விதமான பொம்மைகள். ஒன்றுக்கு ஒன்று வித்தியாசம் இருக்கிறது. இந்த மூன்று பொம்மைகளும் மூன்று விதமான நண்பர்களுக்கு உதாரணங்கள்'' என்று சொல்கிறான். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அதனால்தான் உங்களிடம் வந்தேன் என்று பெரியவர் கூறினார்.

மன்னர் , ''சரி... அந்தப் பொம்மைகளை இப்படி என்னிடம் கொடுங்கள்''என்று கூறி பெரியவரிடமிருந்து பொம்மைகளை வாங்கிக் கொண்டார்.பின்னர் அரசர் அந்தப் பொம்மைகளை எடுத்துக் கொண்டு உள்ளே போனார்.

சிறிது நேரம் கழித்து அவர் வெளியில் வந்து,''உங்கள் நண்பன் சொன்னது சரிதான் ...இந்த மூன்று பொம்மைகளும் மூன்று விதமான நண்பர்கள்தான். இதோ இருக்கிறதேமுதல் பொம்மை. இது உத்தமமான நண்பனுக்கு உதாரணம். இந்த இரண்டாவது பொம்மை - மத்திமமான (நடுத்தரமான) நண்பனுக்கு உதாரணம். ''இந்த மூன்றாவது பொம்மை- மோசமான (அதமன் ) நண்பனுக்கு உதாரணம். இதைச் செய்தவன் உண்மையிலே பெரிய அறிவாளிதான்''என்று மன்னர் கூற அவர் குழம்பிப் போய் நின்றார்.

அப்போது மன்னர் அந்த மூன்று பொம்மைகளையும் எடுத்து முன்னால் வைத்து , ஒரு மெல்லிய கம்பியால் விளக்கம் கொடுத்தார்.

அந்தக் கம்பியை அவர் முதல் பொம்மையின் காதில் விட்டார்.கம்பி பொம்மையின் காதில் சிறிது தூரம் உள்ளே போய் அப்படியே நின்று விட்டது.

பின்னர் அரசர்,இரண்டாவது பொம்மையின் காதில் கம்பியை விட்டார். கம்பி இரண்டாவது பொம்மையின் வாய் வழியாக வெளியே வந்தது. பின்னர் அரசர் ,மூன்றாவது பொம்மையின் காதில் கம்பியைச் செலுத்தினார். அது நேராக அந்தப் பொம்மையின் இன்னொரு காது வழியாக வெளியில் வந்தது.

இப்படி செய்து முடித்ததும் அரசர் சொல்ல ஆரம்பித்தார்.

''முதல் வகை பொம்மை இருக்கிறதே ... இது முதல் வகையான நண்பர்களுக்கு உதாரணம். நம் துன்பத்தை நாம் அவர்களிடம் சொன்னால் பேசாமல் கேட்டுக் கொள்வார்கள். வெளியில் அதை யாரிடமும் அவர்கள் சொல்ல மாட்டார்கள். வெளியில் தெரியாமல் நமக்கு அவர்கள் உதவி செய்வார்கள்... செய்து விட்டு,அதை நான்தான் செய்தேன் என்று சொல்லிக் கொண்டிருக்கமாட்டார்கள்-அது தான் கம்பி இந்தப் பொம்மையின் ஒரு காது வழியாகச் சென்று உள்ளேயே நின்றுவிட்டது.

இரண்டாவது பொம்மையின் கம்பி ஒரு காது வழியாகச் சென்று வாய் வழியாக வெளியே வருகிறது. இது போன்ற நண்பர்களிடம் நாம் நமது துன்பத்தைக் கூறினால் அதை அவர்கள் நாலு பேரிடம் சொல்லி நமக்காக உதவி கேட் பார்கள். நமக்கு என்றுகேட்டு வாங்கி நமக்கு கொடுப்பார்கள். இவர்கள் மத்திமமான நண்பர்கள்.''

''மூன்றாவது பொம்மையில் ஒரு காது வழியாகச் செலுத்திய கம்பி இன்னொரு காது வழியாக வெளியில் வந்துவிட்டது. இது போன்ற நண்பர்களிடம் நாம் நமது துன்பத்தைச் சொன்னால்,காது கொடுத்து கேட்பது போன்று நடிப்பார்கள். ஆனால் நாம் சொல்வதை அவர்கள் அப்படியே இன்னொரு காது வழியே விட்டு விடுவார்கள்... அதைப் பற்றி கவலையே படமாட்டார்கள். இதுதான் இந்தப் பொம்மைகளுக்கிடையில் இருக்கும் வித்தியாசம்'' என்று மன்னர் கூறினர்.



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# பெண்கள் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும்

## பரு.கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

பருத்தித்துறை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கமும், மகளிர் கிராம அபிவிருத்திச்சங்கமும் பருத்தித்துறை பங்குத் தந்தையின் குருமனையில் சுயாதீனமாக இயங்கி வந்த வேளை 2008 ஆம் ஆண்டில் பருத்தித்துறை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு புதிய கட்டடம் கிடைத்ததைத் தொடர்ந்து அந்தக் கட்டடத்திலேயே மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் இயங்கிப் பணிகளை மேற்கொண்டு வந்தது.



ஒளிவிழாவின் போது ஜி.சி.ஈ உயர்தர வகுப்பில் சித்தியடைந்த மாணவி ஒருவரை பரு.கிழக்கு கிராம சேவையாளர் க.யோகேந்திரநாதன் கௌரவிக்கின்றார்.

■ கர்ணன்

இந்த நிலையில் பருத்தித்துறை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகளை அவதானித்த நெக்டெப் நிறுவனம் பருத்தித்துறை பிரதேச செயலரின் சிபார்சின் பேரில் இந்தச் சங்கத்துக்கென நிரந்தரக் கட்டடம் அமைக்க 24 லட்சம் ரூபா நிதியை வழங்கியிருந்தது. இந்த நிதியைக் கொண்டு மகளிருக்கென புதிய கட்டடம் ஒன்று 2010 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. புதிதாகக் கட்டப்பட்ட கட்டடம் போதாது என்பதைக் கருத்தில் கொண்டு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் அங்கத்தவர்களிடையே தலா ஆயிரம் ரூபா வீதம் நிதி சேகரித்து அந்த நிதி மூலம் மேலும் ஓர் அறை கொண்ட கட்டடத்தை புதிய கட்டடத்துடன் சேர்த்துக் கட்டியது.

பருத்தித்துறை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்திலேயே அதனுடன் இணைந்து பணியாற்றி வந்த மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் தமக்குக் கிடைத்த புதிய கட்டடத்தில் அதன் செயற்பாடுகளை கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் ஆரம்பித்து செயற்படுத்தி வருகின்றது.

இந்தச் சங்கம் கல்வி நடவடிக்கையாக மேம்பாட்டு நடவடிக்கையாக கடந்த காலங்களில் ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு 5 வரையான சிறார்களுக்கு ஆங்கில வகுப்புகளை இலவசமாக நடத்தி வந்தது. 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, ஜி.சி.ஈ.சாதாரண, உயர்தர பரீட்சைகளில் சித்தியடையும் மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களை ஆண்டு தோறும் கௌரவித்து வருகின்றது. அத்துடன் பருத்தித்துறை கிழக்கு கிராமத்திலிருந்து பல்கலைக் கழகங்களில் படித்துப் பட்டம் பெற்று வெளியேறும் பட்டதாரி களையும் கௌரவித்து வருகின்றது. மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டகாலத்திலிருந்து இன்று வரை 10 பட்டதாரிகள் கௌரவிக்கப் பட்டுள்ளனர்.

இது தவிர இந்தக் கிராமத்தின் கரையோரப் பகுதியைச் சேர்ந்த ஆரம்ப வகுப்பு மாணவர்களில் பலர் பாடசாலைகளுக்குச் செல்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. இவர்களின் பெற்றோர் சிறார்களைப் பாடசாலைகளுக்குச் செல்லுமாறு கூறி விட்டுத் தங்கள் தங்கள் சுயதொழில்களைச் செய்து வருவார்கள். பெற்றோர் சுயதொழிலில் கவனம் செலுத்த சிறார்களோ பாடசாலைக்குச் செல்லாது வீட்டிலேயே நின்று விடுகின்றனர். நாளாந்தம் சுமார் 30 சிறார்கள் பாடசாலைகளுக்குச் செல்லாத நிலை இந்தக் கரையோரக் கிராமப் பகுதியில் இருந்து வருகின்றது. இந்தச் சிறார்களை பாடசாலைக்குச் செல்ல வைக்க மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கப் பெண்கள் வீடு வீடாகச் சென்று சிறார்களுக்குப் புத்திமதிகள் கூறி அவர்களைப் பாடசாலைகளுக்குச் செல்ல வைக்கும் நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் சிறுவர் பாதுகாப்புக்குழு உறுப்பினர்களின் உதவியுடன் ஈடுபட்டு வருகின்றனர். இந்த முயற்சி வெற்றியளித்து வருகின்ற போதிலும் இந்தப்பகுதியில் சுமார் 3 சிறார்கள் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை எனப் புள்ளி [illegible] இந்தச் சங்கமானது [illegible]வர்களின் ஆரம்ப, இடைநிலை, உயர் கல்விக்கு வேண்டிய உதவிகளை இந்தக் கிராம மாணவர்களுக்கு வழங்கத் தயாராக இருக்கின்றது.

> இந்து, கத்தோலிக்கர் என்ற பேதம் பாராது இரு சமயத்தவர்களும் ஒன்றிணைந்தே சிரமதானப் பணிகளை மேற்கொள்வது வழக்கமாகும். இந்தப் பணியானது ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ள இந்து, கத்தோலிக்க பெண்களிடையே மட்டுமன்றி சமூகங்களுக்குமிடையே பரஸ்பர நல்லுறவு, புரிந்துணர்வு, ஐக்கியம், ஒற்றுமை என்பவற்றைப் பிரதி பலித்து நிற்கின்றது.

இந்தக் கிராமத்தின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு நடவடிக்கையாக பல்வேறு சிரமதானங்களை மகளிர் ஒன்றிணைந்து மேற்கொண்டு வருகின்றனர். இந்தக் கிராமத்தில் உள்ள இந்து ஆலயங்கள், கத்தோலிக்க தேவாலயங்களில் நடைபெறும் விசேட உற்சவத்தை ஒட்டியும், மற்றும் பல்வேறு நிகழ்வுகளை ஒட்டியும் அவை அவ்வப்போது மகளிர் குழுக்களாக இணைந்து சிரமதானப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்து, கத்தோலிக்கர் என்ற பேதம் பாராது இரு சமயத்தவர்களும் ஒன்றிணைந்தே சிரமதானப் பணிகளை மேற்கொள்வது வழக்கமாகும். இந்தப் பணியானது ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ள இந்து, கத்தோலிக்க பெண்களிடையே மட்டுமன்றி சமூகங்களுக்குமிடையே பரஸ்பர நல்லுறவு, புரிந்துணர்வு ஐக்கியம், ஒற்றுமை என்பவற்றைப் பிரதி பலித்து நிற்கின்றது. இவற்றின் வெளிப்பாடாக வருடந்தோறும் இந்து சமய விழாவான நவராத்திரி விழா, கத்தோலிக்க சமய விழாவான ஒளி விழா ஆகிய விழாக்கள் இந்த மகளிர் அபிவிருத்திச் சங்கத்தினால் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நிகழ்வுகளில் வைத்தே மாணவர்கள் கௌரவிக்கப்பட்டு வருகின்றார்கள். இதே போல இந்தக் கிராமத்தில் வாழும் முதியோர்களுக்கும், மாற்றுவலுவுள்ளோர்களுக்கும் அவ்வப்போது உடுபுடைவைகளையும் அந்தச் சங்கம் வழங்கி வருகின்றது.

மகளிர் அபிவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகளை அவதானித்த நெக்டெப் நிறுவனம், இந்தக் கிராமப் பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு கட்டம் கட்டமாக 5 இற்கும் மேற்பட்ட தடவைகள் மொத்தமாக 16 லட்சம் ரூபா நிதி உதவி வழங்கியுள்ளது. இந்த நிதியை மூலதனமாக வைத்து இந்தக் கிராமப் பெண்களுக்குப் பல்வேறு சுயதொழில்களுக்கு சுழற்சி முறையில் கடன் வழங்கி அந்தக் கடன்கள் மூலம் பெண்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருகின்றார்கள்.

இந்தச் சங்கத்தில் சுமார் 160 பெண்கள் அங்கம் வகித்து வருகின்றார்கள். இவர்கள் அனைவரும் 7 பேர் கொண்ட குழுக்களாக 22 குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். குழுக்கள் ரீதியாகவே பெண்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் இந்தக் கிராமத்தில் பல்வேறு விதத்தில் பாதிக்கப்பட்ட 165 விதவைகள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் ஒரு பகுதியினர் இந்தச் சங்கத்தில் அங்கம் வகித்து வருகின்றனர். வாழ்வாதார உதவிகளில் விதவைப் பெண்களும், வறுமையான குடும்பப் பெண்களுக்கும் முக்கிய இடம் வழங்கப்படுகின்றது.

நெக்டெப் நிறுவனம் வழங்கிய நிதியை மூலதனமாக வைத்து ஆரம்பத்தில் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 20 பெண்களுக்கு சுயதொழில் முயற்சிக்காக சுழற்சி முறைக் கடன்கள் வழங்கப்பட்டு, அவர்களை சுயதொழில் மேற்கொள்ள ஊக்குவிக்கப்பட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டை ஊடறுத்து வீதி விலங்குகள் அழியும் அபாயம்

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதியம் தெரிவிப்பு

**பிரதேச மக்களுக்குத் தேவைப்படாத வீதியொன்றை சுமார் 170 லட்சம் ரூபா செலவில் அரசு அமைத்துவருவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.**

கண்டி,ஜூலை4

கித்துல்கல பிரதேசத்தில் காடுகளுக்கு குறுக்காக அமைக்கப்படும் பாலம் மற்றும் வீதியினால் அப்பகுதியின் உயிரியல் பல்வகைத் தன்மை அழிந்துபோகும் அபாயம் இருப்பதாகச் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அதிகளவான காடுகள் அழிக்கப்படுவதால் நீர் ஊற்றுக்கள் அழியக்கூடும். அதனால் குறித்த பிரதேசத்துக்கே உரித்தான தாவரங்கள், பறவையினங்கள் மற்றும் விலங்கினங்கள் ஒழிந்துவிடும் அபாயம் ஏற்படும் என்று சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதியம் தெரிவித்துள்ளது.

குறித்த பகுதியில் போக்குவரத்துக்குத் தேவையான சிறந்த வீதிகள் ஏற்கனவே இருக்கின்றபோது, பிரதேச மக்களுக்கு தேவைப்படாத வீதியொன்றைச் சுமார் 170 லட்சம் ரூபா செலவில் அரசு அமைத்துவருவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.


பிரதேசத்தில் செல்வாக்குமிக்க அரசியல்வாதிகளின் சொந்தத் தேவைகளுக்காகவே காடுகளுக்கு நடுவே இந்த வீதி அமைக்கப்படுவதாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதியத்தின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

இந்த வீதி அமைக்கப்படுவதன் மூலம் மரங்கள் வெட்டப்பட்டு கடத்தப்படக்கூடிய ஆபத்து உள்ளதாகச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதியத்தின் பணிப்பாளர் எஸ்.விஸ்வலிங்கம் தெரிவித்தார்.

கித்துல்கல, மாகந்தாவ காட்டுப்பகுதி உலகில் காண்பதற்கரிய முக்கிய உயிரினங்கள் மற்றும் தாவர இனங்களுக்கு இருப்பிடமாக இருக்கிறது. உலகில் வேறெங்கும் காணப்படாத மீன் இனமொன்று இந்தக் காடுகளிலுள்ள நீர்நிலைகளிலிருந்து அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டதாக அவர் கூறினார். குறித்த பகுதி அழிந்து போவதைத் தடுப்பதற்காக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்த இலங்கை அரசின் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் இயக்குநர் ஹிட்டிசேகர, பிரதேச மக்களின் தேவைக்காகவே வீதி அமைக்கப்படுவதாகக் கூறினார். அரசியல்வாதிகளின் தேவை அந்த வீதி அமைப்பில் இருப்பதாகக் கூறப்படுவதையும் அவர் மறுத்துள்ளார். (ச)

## பிரெஞ்சுக் கடற்படை கப்பல் திருமலையில்



திருகோணமலை,ஜூலை4

பிரெஞ்சுக் கடற்படைக் கப்பலான டுபே டி லோம் நல்லெண்ணப் பயணத்தை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் திங்கள் கிழமை திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடைந்தது. திருகோணமலை துறைமுகத்துக்கு இத்தகைய பயணமொன்றை மேற்கொண்டு பிரெஞ்சு கடற்படை கப்பலொன்று வந்தமை இதுவே முதல் தடவை என்று இலங்கைக் கடற்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கப்பலின் கட்டளைத் தளபதி கமாண்டர் கிறகோல்வ் ஜேர்மைன், இலங்கைக்கான பிரெஞ்சுத் தூதர் கிறிஸ்டைன் ரொசோன் சகிதம் கிழக்குமாகாணக் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ஜயந்த கொலம்பகேவைச் சந்தித்து கலந்துரையாடினார்.

102 அடி நீளமான டுபே டி லோம் கப்பலில் 11 அதிகாரிகள் உட்பட 102 கடற்படையினர் உள்ளனர். இந்தக் கப்பல் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை வரை இலங்கையில் தரித்துநிற்கும் என்று கூறப்படுகின்றது.



மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடியில் பேரீச்சம் பழங்கள் பறிக்கும் நிகழ்வை உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க நேற்றுமுன்தினம் திங்கள்கிழமை ஆரம்பித்து வைத்துள்ளார். காத்தான்குடி பிரதான வீதியில் நடப்பட்டுள்ள பேரீச்சம் மரப்பழங்கள் காய்த்துக் கனியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது

## நுவரெலியாவில் கடும் காற்று; அவதானமாக இருக்க அறிவுறுத்து

**கண்டி மாவட்டத்திலும் தொடர்ச்சியான மழை வீழ்ச்சி காணப்படுவதால் மகாவலி கங்கையின் நீர் மட்டமும் உயர்ந்து வருகின்றது.**

நுவரெலியா,ஜூலை4

நுவரெலியா பகுதியில் கடும் காற்று வீசுவதனால் மரங்களும் கிளைகளும் முறிவடையக்கூடும். ஆகையினால் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நுவரெலியாவனத் திணைக்கள அலுவலகத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மரம் ஒன்று முறிந்து வீதியில் பயணித்துக் கொண்டிருந்த வான் மீது வீழ்ந்ததில் பரபரப்பு ஏற்பட்டது. நுவரெலியாவில் பெய்யும் அடைமழையுடன் கடும் காற்றும் வீசுவதால் மரத்தின் கிளை முறிந்து வீழ்ந்துள்ளது. இதனால் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. மரக்கிளை முறிவடைந்ததால் மின்சார விநியோகக் கம்பிகளும் சேதமடைந்தன. அதனால் அப்பகுதிக்கான மின் விநியோகமும் தடைப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த சில மாதங்களாக வரட்சியான காலநிலை நிலவிய நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களில் கடந்த இரண்டு நாள்களாக அடைமழை பெய்து வருகின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பெய்து வருகின்ற அடைமழையினால் நீர் வற்றிப் போயிருந்த நீரோடைகள், ஆறுகள், நீர்த்தேக்கங்களில் தற்போது நீர் நிறைந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

இந்த நிலையில் கண்டி மாவட்டத்திலும் தொடர்ச்சியான மழை வீழ்ச்சி காணப்படுவதால் மகாவலி கங்கையின் நீர் மட்டமும் உயர்ந்து வருகின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் கடுங்குளிர் நிலவுகின்ற அதேவேளை மேகமூட்டமும் ஏற்பட்டுள்ளதால் வாகன சாரதிகள் அவதானமாக வாகனங்களைச் செலுத்த வேண்டுமென போக்குவரத்துப் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ச)

## களுவாஞ்சிக்குடியில் பொலிஸார் மீது தாக்குதல்

மட்டக்களப்பு,ஜூலை4

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி - பெரியபோரதீவுப் பகுதியில் பொலிஸாரின் இரண்டு மோட்டார் சைக்கிள்களைச் சிலர் தீயிட்டு கொளுத்தியுள்ளதுடன் பொலிஸார் மீது தாக்குதலும் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பெரியபோரதீவு - பழுகாமம் வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகக் களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சிலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிவிலுடையில் சட்ட விரோத செயற்பாடுகள் தொடர்பில் கண்காணிப்பதற்காக சென்றவர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை சிவிலுடையில் வந்து இவர்கள் சட்ட விரோத நடவடிக்கையில் ஈடுபடுவதுடன் தவறான செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் அவர்களுக்கு பல்வேறு தடவைகள் எச்சரிக்கை விடுத்த நிலையில் சில இளைஞர்கள் அவர்களின் நடவடிக்கையைப் பொறுக்க முடியாமல் தாக்குதல் நடத்தியதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## வலிந்த குடும்பக் கட்டுப்பாட்டால் மலையகத்தில் சனத்தொகை வீழ்ச்சி

நுவரெலியா,ஜூலை4

மலையகப் பகுதிகளிலுள்ள தோட்டப்புறங்களில் வலிந்த குடும்பக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையால் அங்கு மக்கள்தொகை வளர்ச்சி வெகுவாக குறைந்து வருகின்றது என்று சமூக அமைப்புகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் நாடு தழுவிய அளவில் நடத்தப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் ஆரம்பகட்ட அறிக்கை இலங்கை அரசால் வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில் மலையகப் பகுதியில் வேலைவாய்ப்புகள் குறைந்து வருவதும், அப்பகுதிக்கு வெளி மாவட்டங்களிலிருந்து வந்திருந்த பலர், போருக்கு பின்னரான காலத்தில் தமது மாவட்டங்களுக்குத் திரும்பிச் சென்றதாலுமே நுவரெலியா மற்றும் பதுளை போன்ற மாவட்டங்களில் மக்கள் தொகை வளர்ச்சி குறைவடைந்ததற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், மலையகத்தின் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் இரண்டு பிள்ளைகளைப் பெற்ற பெண்கள் நிரந்தர குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இதனால் அங்கு மக்கள்தொகை வளர்ச்சி குறைவதற்கு ஒரு முக்கிய காரணம் என்று கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் இயக்குநர் பெரியசாமி முத்துலிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.

தோட்டங்களில் தொழில்புரியும் பெண்களிடம், அவர்கள் எதிர்கொள்ளும் வறுமை மற்றும் வாழ்க்கைப் பிரச்சினைகளை காரணம் காட்டி அவர்களைச் சம்மதிக்க வைத்து நிரந்தர கர்ப்பத்தடைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்று அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல பகுதிகளிலும் சுகாதாரப் பணியாளர்கள் குடும்பக்கட்டுப்பாடு தொடர்பிலான செயற்பாடுகளை முன்னெடுத்தாலும், அது மற்றப் பகுதிகளில் இல்லாத அளவுக்கு மலையகத்தில் வலிந்து முன்னெடுக்கப்படுவது தவறானது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

மலையக சமூகத்தின் அரசியல் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் இந்த விடயம் குறித்து அரசியல் பிரதிநிதிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். (ச)

**கிழக்கு மாகாணசபைத் தேர்தல்:**

## ஐ.தே.க.முதலமைச்சர் வேட்பாளராக தயா கமகே

மட்டக்களப்பு,ஜூலை4

கிழக்கு மாகாணசபை தேர்தலுக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளராகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் தயா கமகேயின் பெயர் பரிந்துரைக்கப்படவுள்ளது.

இந்தத் தகவல் கட்சியின் தரப்புகளில் இருந்து வெளியாகியுள்ளது.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக்கட்சியுடன் பேச்சு நடத்தியபோதும் முதலமைச்சர் வேட்பாளர் பதவி காரணமாகக் குறித்த பேச்சு முறிவடைந்துள்ளது.

இந்த நிலையில் தயா கமகே முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டால் மாகாண சபையின் முக்கிய அமைச்சுப் பதவிகள் தமிழ் மற்றும் முஸ்லிம் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தரப்புகள் தெரிவித்துள்ளன. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதுவுக்கு மாற்றுவழியில்லை

நீண்டகாலமாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த சேதுசமுத்திரக் கால்வாய் திட்டம் இப்போது மறுபடியும் தூசு தட்டி எடுக்கப்பட்டுள்ளது. இலங்கை-இந்திய நாடுகளுக்கிடையில் பிரிகோடாக இருக்கும் பாக்குநீரிணைப் பகுதியில் அமைக்கத் திட்டமிடப்பட்ட இந்தத் திட்டம் சமயம் மற்றும் பண்பாட்டு உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் இடைநிறுத்தப்பட்டிருந்தது. இந்தியாவில் இயங்கும் முக்கியமான இந்துத்துவக் கட்சிகள் சேதுத்திட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் பகுதிகளுக்குள், இராமர் பாலம் எனப்படும் தொன்ம இந்துத்துவ சின்னங்கள் இருப்பதாகக் கூறி அந்த அமைப்புகள் பணிகளை இடைநிறுத்தக் கோரியிருந்தன. அதற்காக நீதிமன்ற உதவியை நாடியிருந்தன. இராமர் பாலம் அமைந்திருக்கின்ற பகுதியை விடுத்து மாற்றுக் கடல்ப்பாதை ஒன்றைக் கண்டுபிடித்து சேதுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என இந்துத்துவ அமைப்புகள் வழக்குத் தொடர்ந்தன. அதனை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் மாற்று வழிக்கான சாத்தியங்கள் பற்றி ஆராய கடலியல் நிபுணர் ஆர்.கே.பச்சௌரி தலைமையில் குழுஒன்றை அமைத்தது. இப்போது அந்தக் குழுவின் ஆய்வறிக்கை வெளிவந்துள்ளது.



6ஆவது தடத்துக்குப் பதில் மாற்றுவழியில் சேது திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சாத்தியங்கள் உள்ளனவா என்பதை ஆராயும்படி மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் 2008ஆம் ஆண்டில் உத்தரவிட்டது. இந்த உத்தரவைத் தொடர்ந்து மத்திய அரசால் சுற்றுச்சூழல் நிபுணர் பச்செளரி தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இப்போது அந்தக் குழு தனது அறிக்கையை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

''சேது சமுத்திரக் கப்பல் கால்வாய்த் திட்டத்தை'' மாற்று வழியில் செயல்படுத்துவது சாத்தியமில்லை என்று சுற்றுச்சூழல் வல்லுநர் ஆர்.கே. பச்செளரி குழு உச்ச நீதிமன்றத்திடம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

சுற்றுச்சூழல் நிபுணர் ஆர்.கே. பச்செளரி தலைமையில் நிபுணர் குழுவை உச்ச நீதிமன்ற உத்தரவின்பேரில் மத்திய அரசு 2008ஆம் ஆண்டு நியமித்தது.

அந்தக் குழு கடந்த மூன்றரை ஆண்டுகளாகத் திட்டம் நிறைவேற்றப்படும் பகுதியில் கடலியல், புவியியல், சுற்றுச் சூழலியல், பேரிடர் பாதிப்புகளுக்கான வாய்ப்புகளை ஆய்வு செய்தது. இராமர் பாலம் இருப்பதாகக் கூறப்படும் வழிக்கு மாற்றாக தனுஷ்கோடி வழியாகத் திட்டத்தைச் செயல்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு வாய்ப்புகள் பற்றி பச்செளரி குழு ஆய்வு செய்தது.

ஆய்வுகளின் அடிப்படையில் ''மாற்று வழியில் திட்டத்தை நிறைவேற்றுவது சாத்தியமில்லை. அவ்வாறு செய்வது கடலியல் ரீதியாகவும் சுற்றுச்சூழல் ரீதியாகவும் பல பாதிப்புகளை ஏற்படுத்தும்'' என்று பச்செளரி குழு தனது அறிக்கையில் கூறியுள்ளது.

இராமேஸ்வரம் அருகே பாக் ஜலசந்தியையும் தலைமன்னாரையும் இணைக்கும் வகையில் உருவாக்கப்பட்டது ''சேது சமுத்திரக் கப்பல் கால்வாய்த் திட்டம்''. 167 கிலோ மீற்றர் தூரமும் கடலில் 12 மீற்றர் ஆழமும் 30 மீற்றர் அகலமும் கொண்ட இந்தத் திட்டத்தைப் பிரதமர் மன்மோகன் சிங் 2005ஆம் ஆண்டு தொடங்கிவைத்தார்.

இந்தத் திட்டத்தின் 6ஆவது தடத்தில் இராமர் பாலம் இருப்பதாக சில இந்து அமைப்புகள் கூறின. இதையடுத்து, இந்தத் திட்டத்துக்குத் தடை விதிக்க வேண்டும் என்று கோரி ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமியும், அ.தி.மு.க., விஸ்வ ஹிந்து பரிஷத் உள்ளிட்ட பல்வேறு அமைப்பினரும் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். அது மட்டுமின்றி, சேதுக் கால்வாய்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பகுதியை தேசிய புராதனச் சின்னமாக அறிவிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரினர். இது தொடர்பாக அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் தனியாக வழக்குத் தொடர்ந்தனர்.

இதையடுத்து, 6ஆவது தடத்துக்குப் பதில் மாற்று வழியில் சேது திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சாத்தியங்கள் உள்ளனவா என்பதை ஆராயும்படி மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் 2008ஆம் ஆண்டில் உத்தரவிட்டது. இந்த உத்தரவைத் தொடர்ந்து மத்திய அரசால் சுற்றுச்சூழல் நிபுணர் பச்செளரி தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இப்போது அந்தக் குழு தனது அறிக்கையை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

இந்த நிலையில், சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் தொடர்பான வழக்கு கடந்த திங்கள்கிழமை நீதிபதிகள் எச்.எல். தட்டு, சி.கே. பிரசாத் ஆகியோர் கொண்ட அமர்வின் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, சேது சமுத்திரத் திட்டம் குறித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பச்செளரி அறிக்கையில், மாற்று வழித்தடத்தில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவது சாத்தியமில்லை எனக் கூறப்பட்டுள்ளது பற்றி நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதில் அளித்த மத்திய அரசின் பேச்சாளர் ஜெனரல் ரோஹின்டன் நாரிமன், "பச்செளரி அறிக்கை குறித்து மத்திய அமைச்சரவை இன்னும் பரிசீலிக்கவில்லை. அமைச்சரவை விவாதித்த பின்னரே அரசின் நிலையை நீதிமன்றத்தில் தெளிவுபடுத்த முடியும்'' என்றார்.

இதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், ''பச்செளரி அறிக்கை குறித்தும் அதன் தொடர்ச்சியாக சேது சமுத்திரக் கப்பல் கால்வாய்த் திட்டத்தில் அரசு எடுக்கவுள்ள நடவடிக்கை குறித்தும் 8 வாரங்களுக்குள் பதில் அளிக்க வேண்டும்'' என்று மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளனர்.

நன்றி:- தினமணி

---

ஜோ.தட்சா
எம்.ஆர்.ரி.சி

# தமிழ் இதழியல் வரலாறு

## கண்காட்சியும் எதிர்வினையும்

தமிழர்கள் கண்டுவந்த தகவல் பரிமாற்ற பாரம்பரியங்களையும் வளர்ச்சியையும் வெளிப்படுத்தும் நோக்கோடு "தமிழ் இதழியல் வரலாறு" எனும் தலைப்பிலான கண்காட்சி ஒன்று நிகழ்த்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சிமைய மாணவர்களும், கொக்குவில் இந்துக் கல்லூரி ஊடகக் கழக மாணவர்களும் இணைந்து நடத்திய இந்தக் கண்காட்சி, கொக்குவில் இந்துக் கல்லூரி சுப்பிரமணியம் அரங்கில், கடந்த 28ஆம் மற்றும் 29ஆம் திகதிகளில் நடைபெற்றிருந்தது. இரு நாள்கள் இடம்பெற்ற இந்தக் கண்காட்சியில் ஏராளமான பாடசாலை ஊடகக் கற்கை மாணவர்கள், ஊடகத்துறை சார்ந்தோர்கள் மற்றும் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கண்காட்சியில் யாழ்ப்பாணப் பத்திரிகைகள் மற்றும் அவற்றின் முதற்பிரதிகள், அவற்றின் தொகுப்புகள், சர்வதேசப் பத்திரிகைகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சஞ்சிகைகள், ஆரம்ப காலத்தில் பயன்படுத்துப்பட்ட ''ப்ளொக்'' முறைகள், ஆசிரியர் பீடத்தின் அமைப்பு என்பன ஒரு பிரிவாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்தப் பகுதியில், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகின்ற பத்திரிகைகளான உதயன், வலம்புரி, தினக்குரல், ஈழநாதம், ஈழமுரசு, ஈழநாடு, வீரகேசரி, தினகரன் போன்றவற்றின் முதலாவது பிரதிகள் மற்றும் தினமுரசு, வீரகேசரி, ஈழநாடு, சைவ சித்தாந்தம் மற்றும் சுதந்திரன் பத்திரிகைகளின் தொகுப்புக்கள் மற்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்து இடையில் நின்றுவிட்ட பத்திரிகைகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டிருந்த காகிதாதிகள் பற்றாக்குறையின் போது வெளிவந்த அட்டை வடிவிலான பத்திரிகை, ஊடகக் கற்கை பயிலும் மாணவர்களை ஈர்ப்பதாக அமைந்தது.


சஞ்சிகைகள் பக்கத்தில், தனிப்பட்ட நபர்களின் சேகரிப்பில் இருந்த சஞ்சிகைகள் மற்றும் வெளிநாட்டுச் சஞ்சிகைகள் என்பன வகைப்படுத்தப்பட்டிருந்தன.

தொழில்நுட்பத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக தற்காலத்தில் அச்சுக்கோப்பு முறை (Blog) இல்லாது போய் விட்டது. பத்திரிகை நிறுவனங்களில் பயன்படுத்திய அச்சுக்கோப்பு அமைப்புகளை சேகரித்து வைத்தமை மாணவர்களிற்கு அதுபற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்பாக அமைந்தது.

சங்கானையில் உள்ள ஒரு அச்சகத்தில், அச்சடிக்கும் இயந்திரம் தொழிற்படும் விதத்தினை காணொலி ஆவணமாகக் காட்டி இருந்தமையும், அச்சியந்திரத்தின் தொழிபாடு பற்றி அறிந்து கொள்வதற்கு உதவியாக அமைந்தது.

ஒரு பத்திரிகை நிறுவனத்தின் ஆசிரியர் பீடத்தினுள் யாரும் அவ்வளவு எளிதில் போய்விடமுடியாது. இருப்பினும் ஆசிரியர் பீடம் எவ்வாறு அமைந்திருக்கும் எனக்காட்ட வேண்டிய தேவை இருந்தது. அதற்காக செய்தி சேகரிப்பு முதல் பத்திரிகை வெளிவரும் வரையான செயற்பாடுகளை ஒரு விளக்கப்படத்தில் காட்டியிருந்தமை ஆசிரியர் பீடம் தொடர்பான மேலதிக விளக்கத்தை வழங்குவதாக இருந்தது.

புகைப்படங்கள் தொடர்பான பிரிவும் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தப் பிரிவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் இடம்பெற்ற "my vision" கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட புகைப்படங்கள் உட்பட அரிய பல புகைப்படங்கள் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன. அத்துடன் புகைப்படக் கருவிகளின் வளர்ச்சி பற்றிய விளக்கமும் அடுக்காக வடிவமைத்து விளக்கம்



கொடுக்கப்பட்டது. இவைகள் கூட ஊடகக் கற்கை நெறி மாணவர்களுக்கும் ஊடகத்துறை சார்ந்தோருக்கும் பயனுள்ளதாக அமைந்தது.


இறுதிப் பிரிவாக ஒரு பத்திரிகை நிறுவனத்தில் இருந்து எவ்வாறு தினமும் பத்திரிகை வெளிவருகின்றது என்பதைக் காட்டும் காணொலி அமைந்திருந்தது. அதில் அந்தப் பத்திரிகை நிறுவனத்தில் ஒரு நாள் நடைபெறும் பணிகள் ஆவணமாக்கப்பட்டிருந்தன.

தினப்பத்திரிகைக்கு ஆயுள் ஒரு நாள் தான். பின்னர் அது பழைய பத்திரிகை ஆகிவிடும். ஆனால் அந்தப் பத்திரிகைக்குப் பின்னால் எத்தனை பேருடைய உழைப்பு உள்ளது என்பதை அந்தக் காணொலி கூறிநின்றது.

இரு நாள்கள் இடம்பெற்ற இந்தக் காண்காட்சியில் முதல்நாள் (28.06.2012 வியாழக்கிழமை) ''வெகுஜன கலாசாரம்'' எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக்கற்கைகள் விரிவுரையாளர் த.கிருத்திகாவும், "சமூகத்தில் ஊடகங்களின் தாக்கம்'' எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய பயிற்றுவிப்பாளர் அ.சபேஸ்வரனும் கருத்தரங்குகளை வழங்கி இருந்தனர்.

இரண்டாம் நாளில் (29.06.2012 வெள்ளிக்கிழமை) ''புதிய ஊடகத்தில் பத்திரிகையியல்'' எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சிமைய இயக்குனர் தே.தேவானந்தும், ''ஆங்கிலேயக் கல்வியும் தமிழ்ப் பத்திரிகை வளர்ச்சியும்'' எனும் தலைப்பில் தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் ஆயர் அருட்கலாநிதி.ஜெபநேசனின் விசேட கருத்தரங்குகளும் இடம் பெற்றிருந்தன. இதில் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தியத்தலாவை இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிகளை நிறைவு செய்த 140 இராணுவ அதிகாரிகள் நேற்றுமுன்தினம் திங்கள்கிழமை வெளியேறியுள்ளனர். இந்தநிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய ஆகியோர் கலந்துகொண்டனர். இராணுவ அதிகாரிகளின் அணிவகுப்பு மரியாதையும் இடம்பெற்றது.

## ஆயிரத்து 350 பேருக்கு இலங்கையில் எயிட்ஸ்

கொழும்பு,ஜூலை 4

நாடளாவிய ரீதியில், எயிட்ஸ் நோய்த் தொற்றுக்குள்ளாவதைத் தடுப்பது தொடர்பில் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயற்றிட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டும், இலங்கையில் எயிட்ஸ் தொற்றுக்குள்ளான ஆயிரத்து 350 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் என்று எயிட்ஸ் ஒழிப்பு மற்றும் தேசிய பாலியல் நோய்கள் தொடர்பான பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் நிமல் எதிரிசிங்க தெரிவித்தார்.

இந்த வருட ஆரம்பம் தொடக்கம்,இதுவரை எயிட்ஸ் தொற்றுக்குள்ளாகியதில் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து வருகை தருபவர்கள் மூலமே எயிட்ஸ் நோய்தொற்று அதிகமாகப் பரவுவதாகக் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சிறுவர் துஷ்பிரயோகம் பெற்றோரே காரணம்

### அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 4

இலங்கையில் சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாவதற்கு பெற்றோரின் கவனயீனமே பிரதான காரணம் என்று சிறார் மற்றும் பெண்கள் விடயங்கள் தொடர்பான அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறுவர்களுக்கான பாதுகாப்பை அரசால் மாத்திரம் வழங்க முடியாது.

இதற்கு பெற்றோரின் பங்களிப்பு மிக அத்தியாவசிமாக இருக்கின்றது. சிறார்கள் நாளாந்தம் வன்புணர்வுகளுக்கு உட்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

சிலர் தமது பிள்ளைகளை வேறு ஒருவரின் பாதுகாப்பில் விட்டுத் தமது பணிகளைச் செய்வதற்காகச் சென்று விடுகின்றனர்.

இவ்வாறான நிலையில், பிள்ளைகளின் பயணங்கள், செயற்பாடுகள் மற்றும் அவர்களின் தேவைப்பாடுகளைப் பெற்றோர் அறிந்திருக்க வேண்டும். அரசு என்ற வகையில் எங்களுக்கு ஒரு வரையறுக்கப்பட்ட வேலைத் திட்டங்களையே முன்னெடுக்க முடியும்.

ஒவ்வொரு குழந்தையையும் பாதுகாப்பதற்கு அரசு பொறுப்புகளை ஏற்கமுடியாது, அதற்குப் பெற்றோரே உரியமுறையில் பங்களிப்பைச் செலுத்த வேண்டும். பிள்ளையைப் பெற்றெடுப்பது மாத்திரம் பெற்றோரின் கடமையல்ல- என்றார். (ச)

# பந்துல, எஸ்.பி. இருவரும் பதவி விலக வேண்டும்

## மறுத்தால் இன்று ஆர்ப்பாட்டம்

போராட்டத்தை இன்று முதல் நாடு முழுவதும் ஆரம்பிக்கப் போவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பு,ஜூலை 4

உயர்தரப்பரீட்சை முடிவுகள் தொடர்பான பிரச்சினைக்குப் பொறுப்புக் கூற வேண்டிய அமைச்சர்கள் பந்துல குணவர்தன, எஸ்.பி. திஸாநாயக்க ஆகியோர் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அவமதிக்காது, உடனடியாக அமைச்சர் பதவிகளில் இருந்து விலகவில்லை என்றால் அவர்களை வீட்டுக்கு அனுப்பும் போராட்டத்தை இன்று முதல் நாடு முழுவதும் ஆரம்பிக்கப் போவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள நகரங்களில் அமைச்சர்களைப் பதவியில் விலக்க கோரும் மனுக்களில் பொது மக்களிடம் கையெழுத்துக்களைப் பெறவுள்ளதுடன், ஆர்ப்பாட்டங்களை நடத்தப் போவதாகவும் சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டு உயர் தரப்பரீட்சையின் வினாத்தாள்களின் மீள் திருத்த முடிவுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மாணவர்களும் பெற்றோரும் அறிவித்துள்ளதால், நியாயத்தை பெற்றுக்கொள்வதற்காக மீண்டும் நீதிமன்றத்தை நாட முடியுமா என்பது குறித்து ஆராய்ந்துவருவதாக அவர் கூறினார். (ச)

## தமக்குள் சண்டை போட்டுக்கொள்ளும் பௌத்த பிக்குகள்

கொழும்பு,ஜூலை 4

பௌத்தம் பற்றிய மாற்றுக் கருத்துடைய பிக்கு ஒருவர் பௌத்த பிக்குகள் தலைமையிலான அடிப்படைவாதிகள் குழுவினால் தாக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் காலியில் உள்ள பத்தேகம நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

புதிய பௌத்த சித்தாந்த உபதேசத்துக்காக பத்தேகமவுக்கு சென்றபோதே பௌத்த பிக்குகள் தலைமையில் சென்ற பௌத்த அடிப்படைவாதிகளால் இவர் தாக்கப்பட்டுள்ளார்.

இவருடன் கூடச் சென்ற பாதுகாவலர்களும் தாக்குதலுக்குள்ளாகினர்.

முன்னர் வண.பிரிதுவ சிறி தம்ம தேரர் என்று அழைக்கப்பட்டவரும் தற்போது சிறி சம்தபத்ர என்று அழைக்கப்படுபவருமான பெல்லந்தோட்ட சிறிசாந்தக ஆசிரமத்தைச் சேர்ந்த பௌத்த பிக்குவே தாக்கப்பட்டுள்ளார்.

இவர் பௌத்த போதனைகளுக்கு முரணான வகையில், புதிய சிந்தனைகளைப் பரப்பி வருவதால் சர்ச்சைகளுக்குள்ளாகியுள்ளார்.

காலியில் மாற்றுச் சிந்தனை கொண்ட மற்றொரு பௌத்த நிலையம் பௌத்த அடிப்படைவாதிகளால் சில நாள்களுக்கு முன்னர் தாக்கப்பட்டதும், அதனை அகற்றுவதற்கு அரசுக்கு காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச)

## குடிதண்ணீர் கட்டணமும் அதிகரிக்கும்

கொழும்பு,ஜூலை 4

குடிதண்ணீர்கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பிலான கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகச் சபையின் தலைவர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அதிகரித்துச் செல்லும் செலவை ஈடு செய்யும் வகையில் குடிதண்ணீர் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகத் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப் புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும் உத்தேச கட்டணத் திருத்தம் காரணமாக குடிதண்ணீர் கட்டணங்கள் மிகவும் குறைந்த அளவிலேயே அதிகரிக்கப்படும் என்று நீர் வழங்கல் சபையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். இலாபத்தை நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்று அவர் தெரிவித்தார். தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் செயற்றிறன் அதிகரிக்கப்பட்டு, நீர் வீண் விரயமாவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார். (ச)

## மெருகூட்டப்பட்டுள்ள ஒல்லாந்தர் தேவாலயம்



கொழும்பு,ஜூலை 4

கற்பிட்டி நகரில் காணப்படும் ஒல்லாந்தர் காலத்து தேவாலயம் ஒன்று தற்போது புனரமைக்கப்பட்டு மெருகூட்டப்பட்டுள்ளது.

இந்தத் தேவாலயத்தினுள் 18ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட பழமைவாய்ந்த கல்லறைகள் காணப்படும் அதேவேளை, தேவாலயத்தின் எல்லைக்குள் தொல்பொருள் திணைக்களத்தினால் புராதன பொருள்களைப் பாதுகாக்கும் நோக்கில் எச்சரிக்கைப் பதாகை வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேவாலயத்துக்கும் கற்பிட்டி கோட்டைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## நூதனசாலை திருட்டு; ஒருவருக்கு விளக்கமறியல்

கொழும்பு,ஜூலை 4

கொழும்பு நூதனசாலையில் திருடப்பட்ட தொல்பொருள்கள் சிலவற்றை உருக்கி 630 கிராம் எடையுள்ள தங்க பிஸ்கட்டுகளைத் தயாரித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்ட கடவத்தையைச் சேர்ந்த நபர் ஒருவரை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் உத்தரவிட்டார்.

### மூதூரில் கொலை செய்யப்பட்ட

## தொண்டு நிறுவன ஊழியரின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு

### வழங்குமாறு வலியுறுத்தியது பிரான்ஸ்

2006ஆம் ஆண்டு மூதூரில் கொலை செய்யப்பட்ட 17 தொண்டு நிறுவன ஊழியர்களின் குடும்பங்களுக்கும் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று கொழும்பிலுள்ள பிரெஞ்சு தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

பிரான்ஸின் பட்டினிக்கு எதிரான அமைப்பு என்ற அரச சார்பற்ற நிறுவனத்தில் பணியாற்றிவந்த இந்த 17 பேரும் மூதூரில் கொலை செய்யப்பட்டிருந்தனர். அதே வருடத்தில் மற்றுமொரு சம்பவத்தில் திருமலை நகரில் 5 மாணவர்கள் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கூட்டத்தொடரின்போது, அரச தூதுக்குழுவினர், இவ்விரு சம்பவங்கள் தொடர்பான வழக்குகளை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவும் சந்தேக நபர்கள் மீது வழக்குத் தொடர்வதற்கும் இணங்கினர்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கை மீண்டும் விசாரணை செய்யுமாறு பொலிஸாரைக் கேட்டு சட்ட மா அதிபர் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. பொலிஸார் மீள் விசாரணையை ஏற்கனவே மேற்கொண்டுள்ளனர். இதற்கிடையில் இந்த வழக்குத் தொடர்பாக இராஜதந்திர முயற்சிகளை முன்னெடுத்த கொழும்பிலுள்ள பிரெஞ்சுத் தூதரகம், இந்த வழக்குகளின் விசாரணையின் முன்னேற்றம் குறித்து சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கமைய கொலைசெய்யப்பட்ட தொண்டர் நிறுவனப் பணியாளர்கள் 17 பேரின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரிகளுடனான சந்திப்பின்போது பிரெஞ்சு தூதர் கிறிஸ்ரின் ரிபச்சொன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவும் பரிந்துரைத்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதன் மூலம் இலங்கைக்கு எதிரான சர்வதேச அழுத்தத்தைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்று திணைக்கள அதிகாரியொருவர் கூறினார். (ச)

## மீனவரை காணவில்லை

கொழும்பு,ஜூலை4

பலப்பிட்டிய பகுதியிலுள்ள ஆற்றில் மீன் பிடிப்பதற்காகச் சென்ற 70 வயதான மீனவரொருவர் படகுடன் நேற்றுமுன்தினம் திங்கள்கிழமை வீசிய கடும் காற்றை தொடர்ந்து காணாமல் போயுள்ளார்.

இந்த மீனவர் பலப்பிட்டியவைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காணமற் போனவர் குறித்து தகவல் கிடைக்காத நிலையில் அஹுங்கல்ல பொலிஸார் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுப்பிட்டி இலங்கை வங்கி கிளை திறப்புவிழா

# சிறப்பு மலர் — 04.07.2012



இலங்கை வங்கி BANK OF CEYLON சிறுப்பிட்டி SIRUPIDDY

தலைவர் இலங்கை வங்கி
உயர்திரு.கலாநிதி காமினி விக்கிரமசிங்கா

வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர்
உயர்திரு. கே.ஈ.டி.சுமணசிறி

## விவசாயிகளின் நண்பன் வீடுதேடி வந்துள்ளான் வாழ்த்தி வரவேற்போம்



எமது நீண்டநாள் ஆசை இன்று நிறைவேறுகின்றது. இந்த நல்ல வசதியை வழங்கிய இலங்கை வங்கி நிர்வாகிகளுக்கும் குறிப்பாக அச்சுவேலி இலங்கை வங்கி முகாமையாளர் த.புவனேந்திரனுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள். பாராட்டுக்கள்.

விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு இலங்கை வங்கியின் தலைமைப்பீடம் தனித்துவமான சில வசதிகளை, உதவிகளை அச்சுவேலி இலங்கை வங்கி வாடிக்கையாளர்களுக்கு வழங்கியது. ஆயிரம் மண்வெட்டிகளை (யாழ்.தோட்ட மண்வெட்டி) அன்பளிப்பாக வழங்கியது. மேலதிக கடன் வசதிகளையும் கடன் தொகை உச்ச எல்லையையும் அதிகரித்தது. இது வங்கிக்கும் விவசாயிகளுக்கும் உள்ள நெருக்கமான உறவு நிலையை வலியுறுத்தி நிற்கின்றது. சிறுப்பிட்டி விரிவாக்கல் கிளையின் வருகை விவசாயிகளின் வாழ்வில் மேலும் வளம் சேர்க்கும். சகல தரப்பு மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கும் கைகொடுத்து உதவும். இந்தக் கிளை காலக்கிரமத்தில் நிரந்தரமான கிளையாக உறுதிபெறும் என்ற இறை நம்பிக்கையோடு வாழ்த்துகின்றோம்.

"வாழ்வில் வளம் பெற இலங்கை வங்கியுடன் இணைவோம்"

**முத்துக்குமாரு இராமநாதன்**
தலைவர் - சிறுப்பிட்டி கிழக்கு, விவசாய சம்மேளனம்.

## வாழ்வின் வளம் சேர்க்க வந்திருக்கும் இலங்கை வங்கி



மக்களின் சகல தேவைகளையும் நிறைவு செய்வதற்கு கை கொடுத்து வளம் சேர்க்கும் நிறுவனம் இலங்கை வங்கி. அச்சுவேலி இலங்கை வங்கியின் முகாமை வாடிக்கையாளர்களை இன்முகத்தோடு வரவேற்று அவர்களின் நிதிச் சேவையை நிறைவு செய்கின்றது. சகல தரப்பு மக்களும் தமது தேவை களை மனம் விட்டு கலந்துரையாடி நிறைவு செய்கின்றனர்.

இலங்கை வங்கிக்கும் வாடிக்கையாளர்களுக்கும் உள்ள நெருக்கமான தொடர்பின் வெளிப்பாடே 'சிறுப்பிட்டி விரிவாக்கல் கிளையை' ஸ்தாபித்ததற்கு வழிவகுத்தது. கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறையில் வளர்ந்து வரும் சிறுப்பிட்டிக் கிராமத்துக்கு மேலும் வளம் சேர்க்க வந்திருக்கும் இலங்கை வங்கியை மனதார வாழ்த்தி வரவேற்பதில் மகிழ்வடைகின்றேன். இந்தவகையில் சகலரும் மகிழ்வெய்துகின்றனர். வாடிக்கையாளர்களின் வீடுதேடி இலங்கை வங்கியின் சேவை வந்திருப்பது மக்களின் வாழ்வில் மேலும் வளம் சேர்க்கும்.

அத்துடன் இலங்கை வங்கியின் அதிகாரிகளின் சேவை முன்னெடுப்புக்களைப் பாராட்டுகின்றேன்.

'இலங்கை வங்கி எங்களின் வங்கி'

**கந்தையா துரைராசா,**
தலைவர் - சிறுப்பிட்டி மேற்கு, விவசாய சம்மேளனம்.

## கிராமிய மீள் எழுச்சிக்கு வலுவூட்டும் வங்கி



எமது பிரதேச மக்களின் வாழ்வியல் முறையில் பெரியதோர் புரட்சியை எற்படுத்தி பொருளாதார மேம்பாட்டிற்கு ஆணிவேராக இன்று எம்மோடு இரண்டறக் கலந்த வங்கியாக அச்சுவேலிக் கிளை திகழ்கின்றது.

இன்றைய தினம் புகழ் பூத்த எமது சிறுப்பிட்டி மண்ணில் அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளை தனது விரிவாக்கற் கிளையை இங்கே ஸ்தாபிப்பதனை இட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். அச்சுவேலி இலங்கை வங்கி சுன்னாகக் கிளையின் கீழ் விரிவாக்கற் கிளையாக இருந்து இன்று குறுகிய காலத்தில் தனிக் கிளையாக மாற்றம் பெற்று 'B' தர கிளையாக தரமுயர்த்தப்பட்டு பல வேலைத் திட்டங்களை உருவாக்கி வறிய மக்களின் பாதுகாவலனாக இருந்து அளப்பரும் சேவையாற்றி வருகின்றது. எமது சிறுப்பிட்டி கிளையை குறுகிய காலத்தில் தனிக்கிளையாக செயற்படுவதற்கு அயராது உழைப்போம்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

**மாணிக்கம் வாசுதேவன்**
தலைவர், ஜனசக்தி மீளெழுச்சி கிராமம் - சிறுப்பிட்டி

## வாழ்வோடு இணைந்த வசந்தம் எங்கள் வங்கி



இலகுவான வங்கிச் சேவையை மக்களின் வாழ்வோடு இணைந்த நிலையில் வழங்கிவருவது இலங்கை வங்கி. அதிலும் அச்சுவேலி இலங்கை வங்கியின் சேவை தனிரகம். அது சொல்லில் விவரிக்க முடியாதது. அனுபவ ரீதியாகக் கண்டுணர வேண்டியது. அது வாடிக்கையாளர்களுக்குக் கிடைத்த மேலதிக வசதி.

வங்கி எங்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான சேவைகளை வழங்கிவரும் அதேவேளையில் நாங்களும் வங்கியின் தேவைகளை நிறைவு செய்யவேண்டும் என்ற காலத்தின் தேவையை அறிந்தே எமது தேவையை மறந்து கட்டட வசதியை வழங்கியுள்ளோம். இந்தவகையில் மனநிறைவடைகின்றேன். வர்த்தகத்துறையில் மேல் நிலை பெற்று வளர்ந்து வரும் சிறுப்பிட்டிக் கிராமத்தின் வளர்ச்சிக்கு உரியமுறையில் கைகொடுத்து உதவ இலங்கை வங்கி வந்திருப்பது மகிழ்வைத் தருகின்றது.

இந்த விரிவாக்கல் அலகு நிரந்தரமான கிளைக்கான கட்டுமானங்களுடன் இன்றுமுதல் செயற்படுவது இது குறுகிய கால இடைவெளியில் சிறுப்பிட்டி இலங்கை வங்கிக் கிளையாக வளர்ச்சிபெறும், முதிர்ச்சி பெறும் என்பதில் ஐயமில்லை.

**விசுவலிங்கம் சத்தி கிருஷ்ணா,**
பிள்ளையார் பில்டிங் கட்டட உரிமையாளர், சிறுப்பிட்டி.

(J/1206)2-6-7-9)



## அச்சுவேலி இலங்கை வங்கி அன்றில் இருந்து.....

அச்சுவேலியில் இலங்கை வங்கியின் செயற்பாடுகள் சுன்னாகம் இலங்கை வங்கியின் நீடித்த கருமபீடம் என்ற நிலையில் 2002 பெப்ரவரியில் ஆரம்பமானது. அதன் அமைவிடம் 2006 ஆம்ஆண்டு அச்சுவேலி மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள "வங்கி வளாகத்துக்கு" இடமாற்றம் செய்யப்பட்டது. முகாமையாளராக திரு.த.புவனேந்திரன் 2007 மே 21 ஆம் திகதி கட மையேற்றார்.

நீடித்த கருமபீடம் என்ற நிலையில் இருந்து 2009 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தனித் துவமான "C" தர கிளையாக அச்சுவேலி இலங்கை வங்கி தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஒக்ரோபரில் "B" தரக் கிளையாகத் தரம் உயர்த்தப்பட்டது. இரண்டு வருடங்களில் B தர கிளையாக உயர்வு பெற்ற பெருமை அச்சுவேலி இலங்கை வங்கிக்குத் தனித்துவமானது. வங்கிக்கு வாடிக்கையாளர்கள் வழங்கிய ஒத்துழைப்பையும் முகாமையாளர் த.புவனேந்திரன் அவர்களின் முகாமைத்துவ நுட்பத்தையும் துலாம்பரப்படுத்தியது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் உயர்திரு அஜித் நிவாட் கப்ரால் மூன்று தடவையும் இலங்கை வங்கியின் தலைவர் டாக்டர் காமினி விக்கிரமசிங்கா மற்றும் வங்கி உயர் அதிகாரிகள் குழு நான்கு தடவைகளுக்கு மேலும் வங்கிக்கு நேரடியாக விஜயம் செய்து முகாமையாளர் த.புவனேந்திரன் மற்றும் வங்கி உத்தியோகத்தர் குழுமத்தைப் பாராட்டி வழிப்படுத்தி இருப்பதோடு கடன் வழங்கல் மற்றும் லீசிங் நடைமுறையில் விசேட நடைமுறை சலுகைகளையும் அச்சுவேலி இலங்கை வங்கிக்கு வழங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது. இன்று சிறுப்பிட்டியில் முதலாவது நீடித்த கருமபீடம் செயற்படும் வேளையில் மேலும் பணியால் சிறக்க வாழ்த்துவோம்.

**- விழா அமைப்பாளர்கள்.**

## இறையருள் பெற்று உய்ய!

அச்சுவேலி இலங்கை வங்கியின் சிறுப்பிட்டி விரிவாக்கல் அலுவலகம் திறந்துவைக்கப்படுவதை மகிழ்ச்சியுடன் வாழ்த்தி வரவேற்கின்றோம். விவசாய மண்ணை எங்கள் பொன்விளையும் பூமியை மேலும் செழிப்புற வாழவைக்கும் இலங்கை வங்கி எமது மண்ணில் கிளை பரப்பும் இந்த நன்னாளில் விரிவாக்கல் அலகு மக்கள் சேவையால் உயர்ந்து தனிக்கிளையாக உயர்வுபெற இறை ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**பரிபாலன சபையினர்,**
மனோன்மணி அம்மன் தேவஸ்தானம் - சிறுப்பிட்டி,
பெருந்தலையம்பதி பார்வதி பரமேஸ்வரன் தேவஸ்தானம் - சிறுப்பிட்டி.

## திருவோடு வளம் சேர்க்கும் தேசத்தின் வங்கி



சகல தரப்பினரையும் சமமாக மதித்து அவர்களின் வாழ்வில் திருவோடு வளம் சேர்க்கும் தேசத்தின் வங்கியாகிய இலங்கை வங்கியின் செயற்பாடுகள் இன்றுமுதல் சிறுப்பிட்டியில் செயற்படவிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. கடந்த பத்து வருடங்களாக அச்சுவேலியில் இருந்து எமக்கு உதவிய வங்கி இன்று கிராமத்தில் தனது செயற்பாட்டை ஆரம்பிக்கின்றது. இதற்கு முன்னின்று உழைத்த அனைத்துத் தரப்பினரும் பாராட்டுக்குரியவர்கள்.

இலங்கை வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்கிரம சிங்கா, பொது முகாமையாளர் கே.தர்மஸ்ரீ, பிரதிப் பொதுமுகாமை யாளர் டி.எம்.குணசேகரா, வடபிராந்திய உதவிப் பொதுமுகாமை யாளர் கே.ஈ.டி.சுமணசிறி ஆகிய உயர் அதிகாரிகள் குழுமம் இன்றைய திறப்புவிழாவில் கலந்துகொள்வது எமது ஊருக்குப் பெருமை சேர்க்கின்றது. இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு எமது உயர்வுக்காக உழைத்துவரும் அச்சுவேலி இலங்கை வங்கி முகாமையாளர் த.புவனேந்திரனின் சேவை மேலும் தொடரவேண்டும்.

"மக்கள் சேவையே மகேசன் சேவை"

**நமசிவாயம் அஞ்சலன்,** ஐங்கரன் நெற் கொம் - சிறுப்பிட்டி.

## தேடிவந்த செல்வம் அதனை நாடிச்செல்வோம்



எங்கள் கிராமத்துக்கு வங்கிச் சேவை வந்து சேராதா? என்று நினைத்த வேளையில் அச்சுவேலி இலங்கை வங்கியின் விரிவாக்கல் கிளை திறக்கப் படுகின்றது என்ற நல்ல செய்தி கிடைத்தது. இந்த வகையில் எங்களைத் தேடிவந்த செல்வம் அதனை நாடிச் செல்வோம். எங்கள் நிதித் தேவைகளை நிறைவுசெய்து மேல் நிலை பெறுவோம்.

வங்கி இல்லாமல் வாழ்வில்லை என்ற சமகாலச்சூழலில் இலங்கை வங்கியின் சிறுப்பிட்டி உதயம் நல்ல சகுணம். எமது சூழலில் எமது வங்கித் தேவையை நிறைவு செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. கால நேரக் கட்டுமானங்களை மேல் நிலைப்படுத்துகின்றது. வர்த்தகத்துக்கு வளம் சேர்க்கின்றது. நாங்களும் இலங்கை வங்கியும் ஒன்றிணைந்து செயற்படுவோம்! உயர்வடைவோம்! எங்களுக்குக் கிடைத்திருக்கும் வங்கிச் சேவை வசதியை உரிய முறையில் நாணயத்தோடு பயன்படுத்தி எமது தொழில் முயற்சிகளை நம்பிக்கையோடு மேல்நிலைப்படுத் [illegible]

[illegible] கிருஷ்ணா
[illegible], யாழ்.பருத்தித்துறை, [illegible] வீதி - புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★ மலர் அமைப்பு அச்சுவேலி செய்தியாளர் ★★★

## முகாமைத்துவத்தின் முன்னோடி



வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவு J/31 கிராம அலுவலர் பிரிவை உள்ளடக்கி விவசாய நிலங்களைத் தன்னகத்தே பெரியளவில் கொண்டு விளங்கும் ஒரு பிரதேசம் ஆகும். இப் பிரதேசத்தில் கடந்த சில வருடங்களுக்கு முன்னதாக வங்கிச் சேவையைப் பொறுத்தமட்டில் விவசாயிகள் சுன்னாகம் செல்ல வேண்டிய நிலை. விவசாயிகள் விவசாயக் கடனை சுன்னாகம் HNB மற்றும் இலங்கை வங்கியூடாக பெற்று வந்தனர். இது விவசாயிகளைப் பொறுத்தமட்டில் போக்குவரத்து மற்றும் கால நேரம் ஆகியவை அவர்களுக்கு இடையூறாக இருந்தது உண்மை. இந்த வேளையில் இலங்கை வங்கிக்கிளை அச்சுவேலியில் இயங்கத் தொடங்கியது.

ஒரு விரிவாக்கற் கிளையாக ஆரம்பித்து இன்று வீறு நடைபோடும் கிளையாகப் பரிணமித்துள்ளது என்றால் அதற்கு காரணகர்த்தா வங்கி முகாமையாளர் திரு. T. புவனேந்திரன் அவர்கள். தனது பிரதேச எல்லைக்குள் அமைந்த சிறுப்பிட்டியில் தொடங்கி வளலாய் ஈறாகவுள்ள அனைத்து விவசாய சம்மேளனங்களையும், அவர் தனது அன்பான வார்த்தை அரவணைப்பு மற்றும் அறிவு சார்ந்த ஆலோசனைகள் மூலம் தன் வங்கி வசம் ஈர்த்து இன்று விவசாயிகளுகுரிய அனைத்து நடவடிக்கைகளையும் யாவரும் வியக்கத்தகும் வண்ணம். செயற்படுத்தி அதாவது விவசாயக் கடன், விவசாய உபகரணங்கள் இலகு கடன் அடிப்படையில் வழங்கல் மற்றும் இலவச மண்வெட்டி விநியோகம் ஆகியவற்றையும் மேற்கொண்டு விவசாயிகளின் நிழலாக அவர்களின் மனதில் என்றும் நிலைநிற்கக் கூடியதாக விளங்குவது வெள்ளிடைமலை.அவர் தனது மகத்தான சேவையை விரிவுபடுத்தி மேலும் இலகுபடுத்தும் நோக்கமாக சிறப்பிட்டியில் ஒரு கிளையைத் தனது அச்சுவேலி வங்கியின் விரிவாக்கல் கிளையாக இயங்குவதற்கு தனது முயற்சியின் பலனாக செயற்படுத்தியுள்ளார். அந்த செயல்வடிவம் இன்று நிறைவேறி சிறுப்பிட்டிக் கிராமத்திற்கும், அதனோடு அண்டிய கிராமங்களுக் கும் தனது சேவையை அது வழங்கவுள்ளமை ஒரு சிறந்த வரப்பிரசாதமாகும். இதனை நிறைவேற்றித் தந்த திரு. T.புவனேந்திரன் அவர்களை சிறுப்பிட்டிக்கிராம மக்கள் மனதார வாழ்த்துவதோடு இக்கிளை மேலும் வளர்ச்சியுற்று எதிர்காலத்தில் நிரந்தரக் கிளை யாக மிளிர எல்லாம் வல்ல மனோன்மணி அம்பாள் திருவருள் நல்க வேண்டி நிற்கின்றேன்.

**கந்தையா ஸ்ரீஸ்கந்தராசா,** கிராம அலுவலர் சிறுப்பிட்டி கிழக்கு.

## மக்களின் சேவகன் இலங்கை வங்கி



அச்சுவேலி இலங்கை வங்கிக்குச் செல்வது தாய் வீட்டுக்குச் செல்வது போன்று மகிழ்வைத்தரும். அங்கு அதிகாரிகளைச் சந்திப்பது என்ற உணர்வு இல்லை. நெருக்கமான உறவினர்களுடன் உரையாடுகின்றோம் எமது தேவையை எடுத்து உரைக்கின்றோம், மனநிறைவுடன் பெற்றுக்கொள்கின்றோம். இது எந்த வங்கியிலும் கண்டு கொள்ள முடியாத உறவுமுறை. இந்த உறவுமுறைதான் அச்சுவேலி இலங்கை வங்கியின் அதீத வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்திருக்கின்றது. இலங்கைவங்கி எங்களை மேலும் அரவணைக்க எங்கள் வீட்டு வாசலுக்கு வந்துள்ளது. அதுவே சிறுப்பிட்டி விரிவாக்கல் கிளையின் உதயம். இந்த நல்ல வேளையில் இலங்கை வங்கியின் சேவை முன்னெடுப்பை இருகரம் கூப்பி வரவேற்பதோடு இறையாசியை வேண்டி என் வாழ்த்துக்களை முன்வைப்பதில் மகிழ்வெய்துகின்றேன்.

"இலங்கை வங்கியின் சேவைகள் மேலும் வளர்க!"

**கதிரவேல் சத்தியதாஸ்,** வில்லிசைப் புலவர் - சிறுப்பிட்டி.

## வங்கிச் சேவை மக்களுக்காக வளர மனமார்ந்த வாழ்த்துக்கள்



எமது விவசாயக் கிராமமாகிய சிறுப்பிட்டியில் அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளை தனது விரிவாக்கற் கிளையினை இன்று ஆரம்பிப்பதனையிட்டு ஆனந்தமடைவதோடு எமது பகுதிக்கும் இலங்கை வங்கிக் கிளையைத் தந்துதவியமைக்காக இலங்கை வங்கியின் தலைவர் DR.காமினி விக்கிரமசிங்க அவர்களுக்கும் உயர் அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

பற்றைக் காணிகளாக இருந்த காணிகளை பொன் விளையும் பூமியாகவும் எதிர்காலவாழ்வு எப்படி அமையுமோ என பணமின்றி ஏங்கித் தவித்த விவசாயிகளுக்குப் புதுத்தெம்பூட்டி பாரபட்சம் எதுவுமின்றி எல்லா விவசாயிகளுக்கும் சிறுபோகம், பெரும்போகம் என இரு காலப் பகுதியிலும் இற்றைக்கு 5 வருடங்களுக்கு மேலாக 11 தடவைகள் கோடிக் கணக்கில் பணத்தை அள்ளித் தந்து விவசாயதிற்கும் எமது பிரதேச வளர்ச்சிக்கும் பெரும் பங்கு ஆற்றிக் கொண்டிருக்கும் இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளையை நாம் என்றும் மறந்து விட முடியாது. விவசாய மேம்பாட்டிற்கும் சுயதொழில் மேம்பாட்டிற்கும் வியாபார மேம்பாட்டிற்கும் உதவிக்கரம் தந்தது அச்சுவேலி இலங்கை வங்கி. சிறுப்பிட்டி விரிவாக்கல் அலகு தனித்துவமான கிளையாக காலவோட்டத்தில் தரமுயர வேண்டும் என்ற பெரு விருப்போடு வாழ்த்தி வரவேற்கிறேன். முயற்சி திருவினையாக்கும்.

**கந்தசாமி கிருபாகரன்** தலைவர், கிராம அபிவிருத்திச் சங்கம் சிறுப்பிட்டி மேற்கு.

## புகழோடு பொருள் சேர்ப்போம்

பொருள் இல்லார்க்கு இவ்வுலகு இல்லை அந்தப்பொருளை தேடிக் கொள்வதற்கு நிதிசார் முகாமைத்துவம் மிகமிக அவசியம். சேமிப்பே எம்மைப் பெருமை கொள்ள வைத்து இன்று தலை நிமிர்ந்து நிற்க வைத்துள்ளது. இவற்றை எல்லாம் உயர்நிலையில் பேணி முன்னேற வங்கித் தொடர்பு அவசியம். அந்த வகையில் எமது கிராமத்தில் இன்று இலங்கை வங்கி தனது தனித்துவமான சேவையை ஆரம்பிக்கின்றது. இந்த நன்னாள் எமது கிராமத்தின் வரலாற்றில் பொன் னாள். அச்சுவேலி இலங்கைவங்கி வழங்கி வந்த பல்வேறுதரப் பட்ட சேவையினால் நாம் உயர்வு பெற்றுள்ளோம். எமது கிராமம் மேலும் வளம்பெற இலங்கை வங்கியின் சேவையை உரியமுறையில் பயன்படுத்துவோம். சிறுப்பிட்டி கரும பீடத்தை நிரந்தரவங்கிக் கிளையாக நிலைபெற உழைப்போம் உயர்வு பெறுவோம். "உழைப்பால் உயர்ந்திடுவோம்".

**கனகலிங்கம் சிவசங்கர்,** முருகன் ஸ்ரோர்ஸ் - சிறுப்பிட்டி.




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன்கூடிய காலநிலை நிலவும்.

வெள்ளைவான் பீதி தமிழகத்திலும்

# ஈழத்தமிழ் இளைஞர்கள் 4 பேர் அகதி முகாமிலிருந்து கடத்தல்

தமிழகத்திலும் ஈழத்தமிழ் இளைஞர்கள் 4 பேர் வெள்ளை வானில் நேற்றுமுன்தினம் மாலை கடத்திச் செல்லப் பட்டுள்ளனர்.

சென்னை புழல் சிறைச் சாலை அருகில் காவாங்கரை இலங்கைத் தமிழர் தங்கியிருக்கும் அகதி முகாமுக்கு நேற்றுமுன்தினம் மாலை 6மணியளவில் வெள்ளை வானில் வந்தவர்கள் அங்கிருந்து நான்கு இளைஞர்களைப் பிடித்து வானில் ஏற்றிச் சென்றுள்ளனர். அவர்களின் இரு சைக்கிள்களையும் வானில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

33வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான சுரேஷ்குமார், ரமேஸ், உமேஸ், சுயா ஆகியோரே வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டவர்களாவர். நேற்றுக்காலை புழல் பொலிஸ் நிலையத்தில் சுரேஸ்குமாரின் மனைவியும், அவரது மூன்று பிள்ளைகளும் முறைப்பாடு செய்ததுடன் தங்களது உடலில் மண்ணெண்ணையை ஊற்றிக் கொண்டு, அவரது கணவனின் நிலையை அறிவிக்காவிட்டால், தீயிட்டுக்கொள்ளுவோம் என்று எச்சரித்துள்ளனர். கியூப்பிரிவு பொலிஸாரே இவர்களைக் கடத்தி இருக்கலாம் என்று சந்தேகிக்கப் படுகிறது.

செங்கல்பட்டுசிறப்பு முகாமில் பல்வேறு போராட்டத்தின் பின்னர் நேற்றுமுன்தினம்2பேரும், நேற்று2பேரும் விடுதலை செய்யப்பட்டனர். ஏனையவர்களும், தங்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்து 2 வாரங்களுக்கு மேல் உண்ணா நிலையில் போராட்டம் நடத்தி வருகின்ற நிலையில், தமிழக கியூப் பிரிவு பொலிஸார் ஈழத்தமிழர்களின் மேல் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளதாக மனிதம் மனித உரிமை அமைப்பின் தலைவர் அக்னி சுப்பிரமணியம் தெரிவித்தார். (வ)

## தேசிய கல்வியியற் கல்லூரி விசேட கல்வி நூற்றாண்டையொட்டி போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விசேட கல்வி நூற்றாண்டை முன்னிட்டு வடமாகாணத்துக்கு உட்பட்ட மாணவர்கள், ஆசிரியர்களிடமிருந்து ''விசேட தேவைக்குட்பட்டவர்களை கல்வியினால் வலுவூட்டுவோம்'' எனும் தலைப்பில் சித்திரப் போட்டி, இறுவட்டு தயாரித்தல் போட்டி ஆகியவற்றுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

சித்திரப் போட்டிக்கு ''உட்படுத்தற் கல்வி வகுப்பறை, ''விசேட தேவையுடைய மாணவர்களின் சாதனைகள்'' ''எல்லோருக்கும் கல்வி'' எனும் தலைப்புகளில் ஆரம்பப்பிரிவில் தரம் ஒன்று முதல் தரம்-5 வரையான மாணவர்களும், இடைநிலைப் பிரிவில் தரம் 6 முதல் தரம் 11 வரையான மாணவர்களும், மேல்பிரிவில்க.பொ.த. உயர்தர மாணவர்களும் பங்குபற்றலாம்.

இறுவட்டு தயாரித்தல் போட்டியில் சகல பாடத்துறை ஆசிரியர்களும் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலை மேம்படுத்தத்தக்க வகையில் ஆக்கத்தை அனுப்பலாம்.

கற்பித்தல் சாதன உருவாக்கப் போட்டிக்கு விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கக் கூடிய கற்றல் கற்பித்தல் சாதனங்களைப் போட்டிக்கு அனுப்பலாம்.

ஆர்வமுடையவர்கள் ஆக்கங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக யோகநாதன் பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி என்னும் முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கலாம். (வ-14)

## ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 4

தென்மராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை காலை 8 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை வரணி ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கே.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

'மகிழ்ச்சியான வாழ்வு-தொடர் நூல்' என்ற இந்தக் கருத்தரங்கு இன்றும், நாளை 'வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமையும்', வெள்ளிக்கிழமை 'வழிகாட்டலும் ஆலோசனையும்' என்ற தொனிப் பொருளில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட துறைகளைச் சார்ந்த ஒவ்வொரு ஆசிரியர்களையும் கருத்தரங்கிற்கு அனுப்பிவைக்குமாறு அதிபர்களை அவர் கேட்டுள்ளார். (வ-16)

## 'முதியோர்' சஞ்சிகை ஒக்டோபர் 1 இல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 4

சர்வதேச முதியோர் தினத்தையொட்டி முதியோர்களின் ஆக்கங்களைக் கொண்ட 'முதியோர்' என்னும் சஞ்சிகை ஒக்டோபர் முதலாம் திகதி வெளியிடப்படவுள்ளது.

இந்தச் சஞ்சிகைக்கான ஆக்கங்களை பிரதேசத்தில் உள்ள முதியோர் அமைப்புக்களிடமிருந்து பெற்று ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு சமூக சேவைகள் அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணிப்பாளர் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளார். (வ-9)




தென்மராட்சி, ஜூலை 4

மீசாலை இராமாவில் ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை காலை 9 மணி தொடக்கம் 10.43 வரையுள்ள சுபவேளையில் இடம்பெறும்.

அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம்பெறும். (வ-9)

* * *

வலி.வடக்கு, ஜூலை 04

மல்லாகம் கோணப்புலம் அருள்மிகு ஸ்ரீஞான வைரவர் திருக்கோயில் புனருத்தாரண 2அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 7.28 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை 7மணி முதல் மாலை 5 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (வ-8)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 4

சாவகச்சேரி மறவன்புலோ மேற்கு ஸ்ரீவிரகத்தி விநாயகர் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்பக்கிரியைகள் கடந்த 2 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இன்று புதன்கிழமை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (வ-14)

* * *

வடமராட்சி, ஜூன் 4

உரும்பிராய் மேற்கு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத்திருவிழா கடந்த 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ந்து 12 நாள்கள் இடம்பெறும் இந்தத் திருவிழாவில் இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு கற்பூரச்சட்டி திருவிழாவும், நாளை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். (வ-8)

* * *

வடமராட்சி, ஜூலை 4

பருத்தித்துறை, மாதனை அம்மன் கோயில் புனராவர்த்தன, அஷ்டபந்தன, பஞ்ச குண்டபக்ஷ கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 9.04 மணி தொடக்கம் 10.43 வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

இந்தக்கும்பாபிஷேகத்தை இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் மனோகரக்குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்தி வைப்பார். (வ-8)

## வீதி திருத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

இருபாலை டச்சுவீதியை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த பலவருடங்களாக பெரும் சேதமடைந்து காணப்பட்ட இந்தவீதி அகலித்து புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

மக்கள் போக்குவரத்துச் செய்வதற்குப் பெரும் சிரமப்பட்டு வந்த இந்த வீதியில் புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை(வ-து)
90ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா
போட்டி திகதிகள்

| திகதி | விபரம் | இடம் |
| --- | --- | --- |
| 05.07.2012 | காலை 9.00 மணி பாடசாலை மாணவர் பேச்சுப் போட்டிகள் | வீரசிங்கம் மண்டபம் |
| 05.07.2012 | பி.ப. 1.00 மணி பாடசாலை மாணவர் வினாடி வினா | வீரசிங்கம் மண்டபம் |
| 07.07.2012 | காலை 6.00 மணி சைக்கிள் ஓட்டம் | வீரசிங்கம் மண்டப முன்றில் |
| 07.07.2012 | காலை 9.00 மணி மைதானப் போட்டி | மத்திய கல்லூரி மைதானம் |
| 08.07.2012 | காலை 6.00 மணி மரதன் ஓட்டம் | வீரசிங்கம் மண்டப முன்றில் |
| 08.07.2012 | காலை 9.00 மணி மைதானப் போட்டி | மத்திய கல்லூரி மைதானம் |
| 15.07.2012 | மு.ப. 10.00 மணி பனைமரம் ஏறுதல் போட்டி | அரியாலை |
| 21.07.2012 | சிறுவர் பாடசாலை நடனம், ஆடல்பாடல், நாடகம் | வீரசிங்கம் மண்டபம் |
| 22.07.2012 | அங்கத்தவர் பணியாளர் பேச்சு, கட்டுரை, வினாடிவினா | வீரசிங்கம் மண்டபம் |

பாடசாலைகளுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விபரமான கால அட்டவணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களை சபையில் பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர்,
யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபை.

இல.12,கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.:021 222 2324
(சி/1207)(5-6-7)

கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட "A" தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

(19703)(6-8-9)

திருமண சேவை

79ஆம் ஆண்டு, பரணி, லண்டன் மணமகனுக்கு வெளிநாட்டு பிரஜா உரிமை மணமகள் தேவை. 72, மகம், 8ல் செவ்வாய், நோர்வே மணமகனுக்கு P.R. மணமகள் தேவை. துர்க்கா திருமண சேவை 16, 4ஆம் லேன் அரசடி கந்தர்மடம்.
தொடர்பு: 021 321 1814, 077 818 5978

விற்பனைக்கு உண்டு

நகைக்கடை ஒன்று நடத்துவதற்கு தேவையான சகல பொருள்களும், கண்ணாடி, (Fitting) உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 990 5057 (1925)(5-7-5)

ஓட்டோ சாரதி தேவை

வவுனியாவில் உள்ள வீடு ஒன்றுக்கு நற்பண்புகளுள்ள ஓட்டோ சாரதி தேவை. சிறிய குடும்பமாயின் (2 அல்லது 3 அங்கத்தவர்கள்) வசிப்பதற்கு வீடும் வழங்கப்படும்.
தொடர்பு: 075 045 0295 (16902)

வீடு வாடகைக்கு

வவுனியா நகரில் இருந்து 3km தள்ளி மன்னார் வீதிக்கு அருகில் மாடிவீடு இரு குடும்பங்கள் வசிப்பதற்கு சகல வசதிகளுடன் உண்டு. தனியார் நிறுவனங்களுக்கு ... வழங்கப்படும்.
தொடர்பு: 077 469 6042
(16903)(5-6-7)

## மரண அறிவித்தல்

### திருமதி தாசிலம்மா சிங்கராயர்



யாழ்ப்பாணம், சென். பற்றிக்ஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தாசிலம்மா சிங்கராயர் நேற்று (03.07.2012) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பத்திநாதர் -கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மனுவல்- ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிங்கராயரின் அன்பு மனைவியும் றமி, டோல்ரன், தீபா, சொபியா ஆகியோரின் பாசமிகு தாயும் யோகன், டெல்மா, றமேஸ் (யாழ். மாநகரசபை ஊழியர்), எட்மன் ஆகியோரின் மாமியும், கிறிஸ்ரின், காலஞ்சென்றவர்களான பிலோமினா, பெர்ணம் மற்றும் லூர்த்து, டொறேற்றா, காலஞ்சென்ற அலோசியஸ் மற்றும் ஜெனிற்றா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பேக்மன்ஸ், மனுவல் யோசப், சூசைப்பிள்ளை, மரியதாஸ் மற்றும் ஞானேந்திரவேல், ராணி, மரியதாஸ் ஆகியோரின் மைத்துனியும், யோணத்தான், ஆசேர், டெபி, டரன், நினுசன், நிருஷா, தெபோரா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை (05.07.2012) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென். பற்றிக்ஸ் வீதி,
றெக்ளமேசன்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சி. றமேஸ் (மருமகன்)
(யாழ். மாநகர சபை ஊழியர்)
(20027)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றுமுதல் கிளிநொச்சி நகரில்

**"சஜீஸ் வெளிநாட்டு பார்சல் சேவை"** நிறுவனம்
ஆரம்பிக்கப்படவுள்ளது.

உலகில் பிரபல்யம் வாய்ந்த கூரியர் கம்பனிகளின் ஊடாக அனைத்து நாடுகளுக்கும் பொருள்கள், ஆவணங்கள் என்பவற்றினை மிக விரைவாக அனுப்பும் வசதிகள் எம்மிடம் உண்டு.

எமது மேலதிக சேவையாக

வெள்ளவத்தை விஜயா என்டர்பிரைசஸ் நிறுவனத்தின் ஊடாக லண்டன், சுவிஸ், கனடா போன்ற நாடுகளுக்குக் குறைந்த கட்டண சேவையும் எம்மிடம் உண்டு.

**தலைமைக்காரியாலயம்**
சஜீஸ்கொமினிக்கேசன்
இல.22, பஸ் நிலையம், வவுனியா.
தொ.பே.024 222 2166, 024 222 2804
E-mail:- ssa832@gmail.com

தொடர்புகளுக்கு:-
சஜீஸ் வெளிநாட்டு பார்சல் சேவை,
ஏ- 9, வீதி
(நீதிமன்றம் முன்பாக)
கிளிநொச்சி.

(16904) (2-6-9)


## யக்ஞோபவிதகாரண பிரஹ்மோபதேஷ சுப முகூர்த்த அழைப்பு

நிகழும் சர்வ மங்கலகரமான நந்தன வருஷம் ஆனித் திங்கள் 21 ஆம் நாள் (05.07.2012) வியாழக்கிழமை உத்தர நட்சத்திரமும் சிங்க லக்கினமும் கூடிய சுபமுகூர்த்தமாகிய காலை 09.04. மணிமுதல் 10.43 மணிவரையுள்ள சித்த யோக சுபவேளையில் எமது சீமந்த புத்திரன்

### பிரம்மஸ்ரீ யதுர்ஷன சர்மா

அவர்களுக்கு ஸ்கந்தபுரம் முருகன் ஆலயத்தில் சௌள உபயந ப்ரம்மோபதேசம் செய்வதற்கு திருவருள் கைகூடியுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் பந்துமித்ர சகிதம் வருகை தந்து குமரனை ஆசீர்வதித்து அறுசுவை உணவு அருந்திச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தங்கள் நல்வரவை இனிதே நாடும்

ஸ்ரீ முருகன் தேவஸ்தானம்,
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

பிரம்மஸ்ரீ பா.பாலச்சந்திரசர்மா
சர்வேஸ்வரி தம்பதியினர்.

(19276) (2-6-9)

## உறவுதனை நாம் இழந்து 45 ஆம் நாள் நினைவில்...



தோற்றம்
29✻03✻1975

மறைவு
21✻05✻2012

### அமரர் நவரத்தினம் சிறீஸ்குமார்

கோலநிலவாய் எம்மோடு ஒளிர்ந்தவனே
கோளரியாய் முன்வந்து குறைகள் பல தீர்த்தவனே
ஞாலத்துணையிழந்து நாமெல்லாம் கையறுந்து
நாளும் உன்நினைவால் நலிவுற்றோம் பாராயோ?
காலக்கொடுமையினால் நினைவாகிப்போனவனே
எம் நெஞ்சிருக்கும் வரை உந்தன் நினைவிருக்கும்
சாலத்துதித்து என்றும் சாயா நல் நினைவெழுதி
அல்லைக்கந்தனடி சாந்தி பெற அஞ்சலித்தோம்.

சாரதாபீடம்
அல்லையம்பதி

நிதம் உன் நினைவோடு நொந்துருகும்
சிவ ஸ்ரீ ராம் கெங்காதரக்குருக்கள் குடும்பத்தினர்
(மயிலையா)

(சி/1208)(2-6-9)

## நீங்காத நினைவலைகள்

**அரையாண்டு**



அமரர்
**செபஸ்ரியன் மேரியோசை**
மண்ணில்:- 04.04.1938
விண்ணில்:- 04.01.2012

கண்ணின்
இமையாய்
எமைக்
காத்தீர்கள்
காலமெல்லாம்
எமக்காய்
வாழ்ந்தீர்கள் -
ஆனால்
இன்று உமைக்
காணாது
தேடுகின்றோம்
ஒரு தரம்
வருவீரோ!

**ஈராண்டு**



திருமதி
**மேரியோசை லூர்த்து மரிய லூவிசா**
மண்ணில்:- 18.08.1938
விண்ணில்:- 01.06.2010

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவுகள்.
தொ.பே.:- 0774922395

மெமோறியல் லேன்,
மானிப்பாய்.(நாரந்தனை)

(சி/1210)(2-6-9)


WORLD'S NO 1 BRANDS UNDER ONE ROOF




# 81, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

#81, Stanley Road,
Jaffna.

MALABAR
AUTHORIZED DEALER FOR

Tel : 021 222 2043
021 4923609

(சி/1209) (2-6-9)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கணக்காளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல இலத்திரனியல் விற்பனை நிலையத்துக்கு மூன்று வருட கணக்கு எழுதும் அனுபவம் உள்ள கணக்காளர் தேவை. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

முகாமையாளர்,
மீடியா எலக்ரோமாட்,
இல.1-1-H, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.Tel:0212224566

(ச/1213) (6.14,10)

# பல்கலை விரிவுரையாளர்கள் இன்று புறக்கணிப்பில்

யாழ்ப்பாணம், ஜூலை 4

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர்களும் இன்று தொடக்கம் தொடர் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களும் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும்பொருட்டு இன்று முற்பகல் 10 மணி தொடக்கம் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் என அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியசங்க உப தலைவர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

முன்னர் பல தடவைகள் எமது கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் நடத்தியிருந்தோம். அது இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை.

எனவே தமது கோரிக்கைகளை அமுல்படுத்தக்கோரி தொடர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை பல் கலைக்கழக ஊழியர் தொழிற் சங்கங்களும் இன்று முற்பகல் 10 மணிமுதல் 12 மணிவரை இரண்டு மணி நேர அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக ஊழியர்களும் களத்தில் இறங்கவுள்ளனர்.(10-4-86)



மணிவிழா நாயகனே வளமாகப் பல்லாண்டு வாழியவே

திரு.வே.சிவசிதம்பரம்
அவர்கள் S.L.E.A.S
அதிபர் யா/ விக்கினேஸ்வராக் கல்லூரி

வடமராட்சி அரிமாக் கழகமதன் கல்விச்சேவை தனில்
திடமான வளவாளராய் விஞ்ஞானம் புகட்டிய - பீடுடைமீர்
விக்கினேஸ்வராக் கல்லூரியை நிர்வகித்தலங்கரித்த அதிபரே
விக்கினேஸ்வரனே! தந்தை சிவசிதம்பரமே! பல்லாண்டு வாழியவே
வடமராட்சி லயன்ஸ் கழகம், பருத்தித்துறை.
(18881) (2-6-7)

## தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் உயர் தொழில்சார் நிறுவனம் ஒன்றுக்கு சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனுபவம் வாய்ந்த, பட்டதாரி தகைமையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயது எல்லை: 25 - 32

Tel: 0212220727, 0217200777

(20033) (6.14,10)

VingCard Elsafe
Guestroom Security



MINIBAR
At Your Service

Your Global Partner

Day - to - Day operations
Audit trail & reports
Front desk stability
User friendliness




Vingcard Elsafe
AUTHORISED DISTRIBUTOR

Effective Keycard Management
One and only island wide Service Provider
Professional Engineering Team
Global Strength & Knowledge

(1151) (2-6)

JAFFNA DEALER-
DAVID-0777107487
COLOM-0773475970

NPS EQUIPMENT (PVT) LTD
NO:132, MAYA AVENUE. COLOMBO 6
TEL: 0094 114542896 FAX: 0094 112508647,
EMAIL : npseq@sltnet.lk MOB: 0773475970
FLEX Graphic

## வரலட்சுமி விரதம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ். வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான வரலட்சுமி விரத உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

அம்பாளுக்கு சாத்திய பட்டுப்புடைவைகள் எதிர்வரும் சனிக்கிழமை முதல் விற்பனைக்கு விடப்படவுள்ளது. அத்துடன் நோன்பு நூல்களைப் பெறவிரும்பும் அடியார்கள் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஆலய நிர்வாகசபை அறிவித்துள்ளது. (16)

## பட்டதாரிப் பயிலுநர்களாக ஏற்கனவே வேலை செய்தோரும்

யாழ்ப்பாணம், ஜூலை 4

வேலையற்ற பட்டதாரிகளுக்கான ''பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தை'' பெற்றுக் கொள்வதில் ஏற்கனவே நிரந்தரமாக நியமனம் பெற்றுக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் பட்டதாரிகளும் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வேலை இல்லாமல் இருக்கும் பட்டதாரிகளுக்கு அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தில் வேலையில் இருக்கும் பட்டதாரிகளும் கணிசமான தொகையில் இணைந்துள்ளனர்.

கடந்தகாலங்களில் நடைபெற்ற முகாமைத்துவ உதவியாளர் நியமனங்களில் க.பொ.த. உயர்தரப்பெறுபேறுகளை மட்டும் நேர்முகப்பரீட்சையில் காண்பித்து பெருமளவு பட்டதாரிகள் வேலை பெற்றிருந்தனர். இவர்களில் பலர் சேவை நிரந்தரமாக்கும் காலத்தையும் நிறைவு செய்துள்ளனர்.

இவர்களுக்குப் பட்டதாரிகளுக்கு உரிய சம்பளநிலை இல்லை என்பதைக் காரணமாகக்கொண்டு அவர்கள் இப்போது பட்டதாரிப் பயிலுநர்களாகியுள்ளனர். பட்டதாரிகளுக்கு ஆறுமாதங்களுக்கு ஊக்குவிப்புப் படியோடு கூடிய கொடுப்பனவு வழங்கப்பட்டாலும் ஆறுமாதத்தின் பின்னர் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான சம்பளத்திட்டத்திலும் கூடிய நிலையில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் நியமனம் வழங்கப்படலாம் என்ற எதிர்பார்ப்புக் காரணமாக இவர்கள் பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தில் இணைந்துள்ளனர் என்று கூறப்பட்டது. இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (கு-11)


உ
இணுவை ஸ்ரீ பரராஜசேகரன் ஆசியுடன்....
வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி
தென்மராட்சி மண்ணில் முதன் முறையாக
கொடிகாமத்தில்...

Sekaran Graphic
Digital Printing
சேகரன் கிறபிக்

டிஜிற்றல் பெனர்கள்
டிஜிற்றல் ஸ்ரிக்கர்கள்
விளம்பரப் பெயர்ப் பலகைகள்
பெரிய விளம்பரப் பதாகைகள்
6 Colours



அதிரடி விலைக்கழிவுடன்
24 மணி நேர சேவை

மற்றும் பந்தல் தட்டிகள், ஆலய முகப்புகள்
திரை அலங்காரங்கள் டிஜிற்றல் பிறிண்ட் மூலம்
உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்.
கச்சாய் வீதி, கொடிகாமம். T.P - 0213219437
(கொடிகாமம் சந்தியிலிருந்து 500 M தூரத்தில்) 0779405802
Email - psivasekaran@gmail.com
(20031) (2-6)

## மரண அறிவித்தல்

### சீனிவாசகம் சுந்தரலிங்கம்

(உரிமையாளர் - V.K.அம்பாள் ஸ்ரோர்ஸ்)



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், வெல்லிக்கம் தோட்டம், துன்னாலை கிழக்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சீனிவாசகம் சுந்தரலிங்கம் நேற்றுமுன்தினம் (02.07.2012) பிற்பகல் 3 மணிக்கு இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம்- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், இராணிராசசுலோசனாவின் அன்புக் கணவரும், சுதர்சன் (லண்டன்), சுபேதா (கனடா), சுஜாதா (ஆசிரியை, பளை மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், விதுரா (லண்டன்), யசோதரன் (கனடா), ராதாகிருஷ்ணன் (உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும், ஆருஜன், ஐஸ்வின், யகானா, பிரஜன், ரக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, ராசன், ரத்தினவேலு, சத்தியதாசன், ராஜேஸ்வரி, ஜெகதீஸ்வரி (கனடா), சிவதாசன் (இலங்கை), ஜெகதீஸ்வரன் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிறீராஜகுலேந்திரம் (ஓய்வுபெற்ற நில அளவையாளர் திணைக்களம்), சிவஞானப்பிரகாசம் (மருதங்கேணி, உதவி அரசாங்க அதிபர் அலுவலகம்), காலஞ்சென்ற துரைராஜசிங்கம், ஜெயராசாலிங்கம் (லண்டன்) தனராசசேகரம் (லண்டன்), ஜானகிராச சுலோசனா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2012) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கியான்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெல்லிக்கம் தோட்டம்,
துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

(18680) (2-6-9)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### விமலாதேவி தங்கராசா



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விமலாதேவி தங்கராசா நேற்று (03.07.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தங்கராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ரெத்தினத்தின் சகோதரியும், கஜேந்திரன், சுஜீந்திரன், சுரேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயும், கிரியாவின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2012) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை கிழக்கு, மீசாலை. (20032) (2-6-7)


தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத் தடகளப் போட்டிகள் இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

வலி.வடக்கு, ஜூலை 4

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் வீர வீராங்கனைகளுக்கு இடையேயான மாகாண மட்டத் தடகளப்போட்டிகள் இன்று புதன்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகவுள்ளன.




வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டு அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்துகொள்ளவுள்ளார்.

ஆரம்ப நாளில் சிறப்பு நிகழ்வாக யாழ்.மாவட்டப் பாடசாலைகளான யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களின் பாண்ட் வாத்தியக் குழுவினரின் அணிவகுப்பு மரியாதையுடனும் மற்றும் சம்பிரதாய பூர்வமான நிகழ்வுகளுடனும் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளது.

மைதானத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக முதல் தடவையாக யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 'கடேற்' வீரர்கள் பணியில் ஈடுபடவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்தவருடம் மாகாண மட்டத்தில் நடைபெற்று முடிந்த 55 பெரு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்று முதல் இடங்களைப்பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கான வெற்றிக் கிண்ணங்களும் ஆரம்ப நிகழ்வின்போது வழங்கப்படவுள்ளன.

இந்தநிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் இருந்து பங்குபற்றி சம்பியனான அணிகளின் அனைத்து வீர, வீராங்கனைகளும், சம்பியன் பட்டம் வென்ற வெளிமாவட்ட அணிகளின் தலைவர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு வெற்றிக் கிண்ணங்களைப் பெறவுள்ளனர். (ந-86)



மாகாண மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான கராத்தே போட்டிகள் கடந்த மாதம் 28ஆம், 29ஆம் திகதிகளில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற போது ஆக்ரோஷமாக மோதிக் கொள்ளும் வீரர்கள். (ந-130)

# வட்டுக்கோட்டை வை.எம்.எச்.ஏ. காமாட்சியை இலகுவில் வென்றது

வலி.வடக்கு, ஜூலை 4

அராலி தெற்கு களுவத்துறை விளையாட்டுக்கழகம் ஆடிப்பிறப்பு பெருவிழாவையொட்டி நடத்தும் 12 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 7 பேர் பங்குபற்றும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆட்டம் ஒன்றில் வட்டுக்கோட்டை வை.எம்.எச்.ஏ விளையாட்டுக்கழகம் 33 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

களுவத்துறை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் வண்ணார் பண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழகமும் வட்டுக்கோட்டை வை.எம்.எச்.ஏ விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய வை.எம்.எச்.ஏ விளையாட்டுக்கழகம் 12 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் மூன்று இலக்குகளை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரவீந்திரன், சீராளன் ஆகியோர் ஆட்டமிழக்காது முறையே 50, 34 ஓட்டங்களைத் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் ஸ்ரீ கமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சாருக் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 35 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், குகன் 24 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

108 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீ காமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழகம் 11.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 74 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் தீபன் 26 ஓட்டங்களையும், சுஜீபன் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் வட்டுக்கோட்டை வை.எம்.எச்.ஏ விளையாட்டுக்கழகத்தை சேர்ந்த கார்த்திக், ரகுமான், நிரோசன் ஆகியோர் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினார்கள். (ந-86)

# கடற்கரை கரப்பந்தாட்டத்தில் முதன்முறையாக யாழ்.அணி

## மகளிர் அணி முதற்சுற்றில் போராடித் தோல்வி

வலி.வடக்கு, ஜூலை 4

யாழ்.மாவட்டத்தில் இருந்து சென்ற மகளிர் கடற்கரை கரப்பந்தாட்ட அணி கடுமையாகப் போராடிய போதிலும் கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டிகளில் முன்னனுபவம் இல்லாத காரணத்தினால் முதல் சுற்றிலேயே தோல்வியைத் தழுவியது.

இலங்கைத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் தேசிய ரீதியில் நடத்தப்படும் கடற்கரை கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நீர்கொழும்புக் கடற்கரையில் இடம் பெற்றது.

முதற் சுற்றில் மகளிருக்கான போட்டியில் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணியும் குருநாகல் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணியும் மோதிக்கொண்டன.

யாழ்.மாவட்ட அணி கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்டது இதுவே முதல்முறை. குறித்த போட்டி தொடர்பாக உரிய பயிற்சியைக் கூட பெற்றுக்கொள்ளாதவர்களாக யாழ்.மாவட்ட வீராங்கனைகள் கலந்துகொண்ட போதிலும், எதிரணி வீராங்கனைகளுக்குத் தம்மாலான எதிர்ப்பைக் காட்டிப் போராடித் தோற்றார்கள்.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களை குருநாகல் மாவட்ட தேசிய சேவைகள் மன்ற அணி 21 :15, 21: 16 புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணியை வெற்றி பெற்று இரண்டாம் சுற்றில் விளையாடத் தகுதி பெற்றது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து முதல் தடவையாக கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் வீர, வீராங்கனைகள் இந்த வருடமே கலந்து கொண்டனர்.

யாழ்.மாவட்டத்தில் இருந்து ஆண்கள் அணியில் டஜித், தனுரதன் ஆகியோரும் மகளிர் அணியில் மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த பரதந்ஜா, சஜித்தாவும் ஆகியோரே இவ்வாறு கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் யாழ். அணி சார்பாக முதன் முறையாக விளையாடிய பெருமையைப் பெற்றுள்ளார்கள். (ந-86)

# உடுவில் மகளிர் கல்லூரி கூடைப்பந்தில் சம்பியன்

வலி.வடக்கு, ஜூலை 4

வட மாகாணக் கல்வித் திணைக்களமும் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கமும் இணைந்து முதல் தடவையாக வட மாகாண பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 13 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியும், மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலையும் மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் உடுவில் மகளிர்கல்லூரி 10 :4 புள்ளிகள் என முன்னிலையில் நின்ற வேளையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தமது திறமைகளை வெளிப்படுத்தின. எனினும் இரண்டாம் பாதி ஆட்டத்திலும் உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டியது. அந்த அணி 9 : 2 புள்ளிகள் என்ற நிலையில் முன்னிலை பெற்ற இரண்டாம் கால் பாதி ஆட்டமும் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் உடுவில் மகளிர் கல்லூரி 19:6 புள்ளிகள் என்ற அடிப்படையில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலையை வெற்றி கொண்டு வட மாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ந-86)

## 'எச்.பி.எல்' கரப்பந்தாட்டம்


**இன்று மோதும் அணிகள்**

- ஜப்னா பிரண்ட்ஸ் எதிர் றோயல் லீடர்ஸ்
- ஜப்னா கிங்ஸ் எதிர் சுப்பர் கிங்ஸ்



மாகாண மட்ட 19 வயதுக்குட்பட்ட மகளிருக்கான எல்லே போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட மணற்காடு றோ.க.த.க. பாடசாலை வீராங்கனைகள் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளருடன். (ந-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பெடரர், வில்லியம்ஸ் காலிறுதிக்குள்

விம்பிள்டன் ரென்னிஸ் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் முன்னேறினார்.

லண்டனில், விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், கஜகஸ்தானின் யாரோஸ்லாவா ஷிவ்தோவாவை சந்தித்தார்.

முதல் செற்றை 6-1 என்று மிகச் சுலபமாக கைப்பற்றிய செரினா, இரண்டாவது செற்றை 2-6 என்று எளிதாக கோட்டைவிட்டார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செற்றில் செரினா 7-5 என்று போராடி தன் வசப்படுத்தினார். இறுதியில் செரினா 6-1, 2-6, 7-5 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

### கிவிட்டோவா வெற்றி

மற்றொரு போட்டியில் நடப்பு சம்பியன் செக்குடியரசின் பெட்ரா கிவிட்டோவா, இத்தாலியின் பிரான்சஸ்கா ஷியவோனை சந்தித்தார். முதல் செற்றை 4-6 என்று இழந்த கிவிட்டோவா, இரண்டாவது செற்றில் எழுச்சி கண்டு 7-5 என்று பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செற்றில் மீண்டும் அசத்திய கிவிட்டோவா 6-1 என்று கைப்பற்றினார். இறுதியில் கிவிட்டோவா 4-6, 7-5, 6-1 என்ற செற் கணக்கில் போராடி வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

### ஷரபோவா 'அவுட்'


மற்றொரு நான்காவது சுற்றுப் போட்டியில் உலகின் முதல்தர வீராங்கனையான ரஷ்யாவின் மரியா ஷரபோவா, ஜேர்மனியின் சபின் லிசிக்யை எதிர்கொண்டார். இதில் ஷரபோவா 4-6, 3-6 என்ற நேர் செற் கணக்கில் தோல்வி அடைந்து வெளியேறினார். மற்றொரு ஆட்டத்தில் பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ், ஜேர்மனியின் கெர்பரிடம் 1-6, 1-6 என்ற நேர் செற் கணக்கில் தோல்வி அடைந்து வெளியேறினார்.

மற்ற போட்டிகளில் ஆஸ்திரியாவின் தமிரா பசக், போலந்தின் அக்னீஸ்கா ரத்வான்ஸ்கா ஆகியோர் வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தனர்.

### பெடரர் முன்னேற்றம்

ஆண்கள் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், பெல்ஜியத்தின் சாவியர் மாலிசியை சந்தித்தார். முதலிரண்டு செற்றை 7-6, 6-1 எனக் கைப்பற்றி பெடரர், மூன்றாவது செற்றை 4-6 என்று கோட்டைவிட்டார். பின்னர் எழுச்சி கண்ட பெடரர் நான்காவது செற்றை 6-3 என்று தன் வசப்படுத்தினார். இறுதியில் பெடரர் 7-6, 6-1, 4-6, 6-3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

(5)





# அடிக்கடி கோபப் படமாட்டேன்

ஆட்டமிழந்த பின்னர் உடைமாற்றும் அறைக்குள் நுழைந்ததும் சில வேளைகளில் எனது துடுப்பாட்ட மட்டையை தூக்கி எறிந்திருக்கின்றேன். அதற்காக நான் எப்போதும் கோபப்படுபவன் அல்ல. சிலவேளைகளில் முக்கிய தருணங்களில் ஆட்டமிழக்கையில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்றேன். இவ்வாறு, இந்திய கிரிக்கெட் அணியின் தடுப்பு சுவர் என்றழைக்கப்பட்ட முன்னாள் அணித் தலைவர் ராகுல் டிராவிட் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார். அப்போது செய்தியாளர்களை சந்தித்த டிராவிட் அவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார். அவரிடம் வருங்காலத்தில் இந்திய அணியின் பயிற்சியாளர் ஆக விருப்பம் உள்ளதா என்று கேட்கப்பட்டதற்கு, விருப்பமுள்ளது ஆனால், எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பது யாருக்கும் தெரியாது என்று பதிலளித்தார்.

மேலும் அவர் கூறுகையில், எனது 16 ஆண்டுகால சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையில் சில சமயம் நிதானத்தை இழந்து கோப்பட்டிருக்கிறேன். வீரர்களின் ஓய்வு அறைக்குள் நுழைந்ததும் சில முறை மட்டைகளை தூக்கி எறிந்திருக்கிறேன்.

அடிக்கடி கோபப்படமாட்டேன். ஆனால் மோசமான 'ஷொட்டுகள்' அடிக்கும் போதோ அல்லது முக்கியமான கட்டத்தில் ஆட்டமிழக்கும் போதோ ஏமாற்றத்தின் தாக்கமாக எனக்குரிய சில உபகரணங்களை சேதப்படுத்தி இருக்கிறேன் என்றார்.

2003 ஆம் ஆண்டு அடிலெய்டில் நடந்த ஆஸ்திரேலியாவுக்கெதிரான டெஸ்டில் இரட்டைச் சதம் அடித்தது தனது சிறந்த இன்னிங்சிஸ் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(5)

# வேகமான மனிதர் வேகமாகச் சரிகிறார்




உலகின் வேகமான மனிதரான உசைன் போல்ட், ஜமைக்காவின் ஒலிம்பிக் தெரிவுப் போட்டிகளில் மீண்டு மொருமுறை தோற்கடிக்கப்பட்டுள்ளார். 100 மீற்றர் ஓட்டத்தில் முன்னர் தோற்கடிக்கப்பட்டிருந்த அவர், தற்போது 200 மீற்றர் ஓட்டத்திலும் தோற்கடிக்கப்பட்டுள்ளார்.

ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஜமைக்காவின் வீரர்களைத் தெரிவதற்கான ஓட்டப் போட்டிகளிலேயே உசைன் போல்ட் தோற்கடிக்கப்பட்டுள்ளார். உசைன் போல்டை 100 மீற்றர் போட்டிகளில் தோற்கடித்த யொஹான் பிளேக் என்ற வீரரே அவரை 200 மீற்றர் போட்டிகளிலும் தோற்கடித்துள்ளார்.

200 மீற்றர் ஓட்டத்தை 19.80 செக்கன்களில் ஓடி முடித்த யொஹான் பிளேக் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார். 19.83 செக்கன்களில் ஓடி முடித்த உசைன் போல்ட் இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொண்டார். மூன்றாவது இடத்தை 20.03 செக்கன்களில் ஓடி முடித்த வரென் வெய்ர் பெற்றுக் கொண்டார்.

போட்டியின் பின்னர் கருத்துத் தெரிவித்த உசைன் போல்ட், நிரூபிக்க வேண்டிய தேவை தனக்குள்ளதாகத் தெரிவித்தார். நான் ஒலிம்பிக் சம்பியனாகக் காணப்படுகிறேன் எனத் தெரிவித்த அவர், நான் இன்னமும் உலகின் சிறந்த வீரர் என்பதை நிரூபிக்க வேண்டிய தேவையுள்ளதாகத் தெரிவித்தார். எனினும் இரண்டாமிடம் பெற்றுக் கொண்டமை தொடர்பாக கவலைப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். எங்கு பிழை நடந்தது என்பது தொடர்பாக ஆராய வேண்டிய தேவையுள்ளதாகத் தெரிவித்த அவர், அது தொடர்பாக தனது கவனத்தைச் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

கடந்த வாரம் கருத்துத் தெரிவித்திருந்த உசைன் போல்ட்டின் பயிற்றுவிப்பாளர், உசைன் போல்ட் இன்னமும் 10[illegible] இல்லை எனவும், அவர் அது தொடர்பாகக் கவன[illegible] தெரிவித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டம் சமநிலை நோக்கி...

பாகிஸ்தானின் வெற்றிக் கனவை தூள் தூளாக்கி பலமான அடித்தளமிட்டது சங்கா-டில்சான் ஜோடி

இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் கொழும்பு எஸ்.எஸ்ஸி மைதானத்தில் இடம்பெற்றுவருகின்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 551 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்து தனது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

கடினமான இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இலங்கை அணிக்கு அதிர்ச்சி கொடுக்கும் வகையில் பரண விதாரண யுனைட்கானினால் வெளியேற்றப்பட்டார்.

பின்னர் இணைந்தனர் டில்சான் சங்ககாரா இருவரும் மிகச்சிறப்பாக பாகிஸ்தான் பந்து விச்சாளர்களின் பந்துக்கு முகம் கொடுத்து ஓட்ட வேகத்தையும் அதிகரித்துச் சென்றனர்.

எதிர்பாராதவிதமாக மழை குறுக்கிட்டதால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

15 பந்துப் பரிமாற்றங்களில் ஒரு இலக்கை இழந்து 70 ஓட்டங்கள் என்ற நிலையில் மீண்டும் நேற்று ஆட்டம் ஆரம்பமானது.

நேற்றைய ஆட்டத்தின் போது டில்சான், சங்கா இணையைப்பிரிக்க பாகிஸ்தான் அணி பல வியூகங்களை வகுத்தது. எனினும் அது கைகூடாத நிலையில் பாகிஸ்தான் பந்து வீச்சுக்கள் நாலாபுறமும் பறந்தன.

மிகவும் அதிரடியாகவும் நிதானமாகவும் விளையாடிய டில்சான் சதம் கடந்த நிலையில் 121 ஓட்டங்களுடன் யூனைட்கானின் பந்தில் வெளியேறினார். மறுமுனையில் சங்ககாரவும் சதமடித்து அசத்தினார்.

டில்சானின் இழப்பை அடுத்து களம் புகுந்த அணித்தலைவர் ஜெயவர்த்தன ஏமாற்றினார். ஓட்டமெதனையும் பெறாமல் யூனிஸ்கானிடமே வீழ்ந்தார்.

பின்னர் இலங்கை அணியின் தடுப்பு சுவரான சமரவீர களம் புகுந்தார் மறுமுனையில் 127 ஓட்டங்களுடன் சங்ககார ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளார்.

நேற்றைய ஆட்ட நேர முடிவில் 3 இலக்குகளை இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றது இலங்கை.

பாகிஸ்தான் அணி சார்பில் யூனைட்கான் 3 இலக்குகளை வீழ்த்தினார். இன்று ஐந்தாவதும் இறுதியுமான நாள் போட்டி நடைபெறவுள்ளது.

ஆட்டம் சமநிலையில் முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது

(16)

வருடாந்த ஆடித் தள்ளுபடி



அதிரடி விலைக் கழிவுடன்

சமையலறை மின்சார உபகரணங்கள்,
Bathroom கொமட் றைல் வகைகள்,
Fan வகைகள்

AHIEZER SUPPLIERS

காலம்: 02.07.2012 - 15.07.2012 வரை



289, Brown Road,
Kalatti Junction, Jaffna

(யாழ்.பல்கலைக்கழகத்துக்கும் தொழில் நுட்பக் கல்லூரிக்கும் அண்மையில்) T.P-+94(0) 21 5100700, Fax- +94 (0) 21 2220227

# சிறந்த வீரர் இனியஸ்டா

ஐரோப்பிய கிண்ண உதைபந்துத் தொடரின் சிறந்த வீரராக அன்ட்ரஸ்ட் இனியஸ்டாவை 'பீபா' தேர்வு செய்துள்ளது.

ஐரோப்பிய கிண்ண உதைபந்துத் தொடர் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்தது. இந்தத் தொடரின் சிறந்த வீரர்கள் உள்ளடக்கிய 'பீபா' அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் ஸ்பெயினை சேர்ந்த 10 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். 'பீபா'அணியில் இடம் பெற்ற வீரர்கள் விவரம் வருமாறு-

கோல் காப்பாளர்கள் - ஜியான்லுகி பப்பன் (இத்தாலி), இகெர் கேசிலாஸ் (ஸ்பெயின்) மனுவேல் நியூயார் (ஜேர்மனி)

தடுப்பாட்டம் - ஜெரார்டு பிக்கு (ஸ்பெயின்), கோயின்ட்ரா (போர்த்துக்கல்), பிலிப் லாம் (ஜேர்மனி), பெப் (போர்த்துக்கல்), செர்ஜியோ ரமோஸ் (ஸ்பெயின்), ஜோர்டி அல்பா (ஸ்பெயின்)

நடுகளம் - டேனியல் டி ரோஸி (இத்தாலி), ஸ்டீவன் ஜெரார்டு (இங்கிலாந்து), சேவி ஹெர்னான்டஸ் (ஸ்பெயின்), அன்ட்ரஸ் இனியஸ்டா (ஸ்பெயின்), சமி கெடிரா (ஜேர்மனி), செர்ஜியோ பஸ்குயிட்ஸ் (ஸ்பெயின்), மெசூட் ஓசில் (ஜேர்மனி), அன்ட்ரூ பிர்லோ (இத்தாலி), சேபி அலான்சோ (ஸ்பெயின்)

முன்களம் - மரியோ பொலட்டலி (இத்தாலி), செஸ்க் பெப்ரிகாஸ் (ஸ்பெயின்), ரொனால்டோ (போர்த்துக்கல்), ஸ்லாட்டன் இப்ராஹிம்விச் (சுவீடன்), டேவிட் சில்வா (ஸ்பெயின்)

மேற்கண்ட 23 வீரர்களில் இந்த யூரோவின் சிறந்த வீரராக ஸ்பெயினின் அன்டரஸ்ட் இனியஸ்டாவை 'பீபா' தொழில்நுட்ப குழு தேர்வு செய்துள்ளது. இந்த யூரோவில் ஸ்பெயினுக்காக 6 தொடரிலும் 28 வயது பார்சிலோனா மத்திய களத்தில் விளையாடியுள்ளார். சுமார் 551 நிமிடங்கள் களத்தில் இருந்துள்ள இனியஸ்டா கடந்த உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் ஸ்பெயினுக்கான வெற்றிக் கோலை அடித்தவர். இந்த யூரோவில் தங்கக் காலணி விருதை பெற்ற பெர்னான்டோ டார்ரசுக்கு 'பீபா' அணியில் இடம் கிடைக்கவில்லை. (5)

**பணிப்பெண் தேவை**

தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக் கூடிய 35 வயதிற்குட்பட்ட பெண் உடனடியாகத் தேவை.
தொடர்பு: 077 668 0013 (19996)(5-6-7)

## முதலாம் ஆண்டு நினைவலை

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 03 ★ 11 ★ 1955 |  | 15 ★ 07 ★ 2011 |

**அமரர் கிருஷ்ணபிள்ளை புஸ்பராசா**

திதி: பிரதமை (04.07.2012)

ஆண்டு ஒன்று ஆனதய்யா
ஆறவில்லை எங்கள் உள்ளம்
விழிக்க முடியாமல் விழியோரம் வடிகிறது கண்ணீர்
உன் கனவுகளை சுமந்து வாழ்கிறோம்.

'புஸ்ப இல்லம்',
அல்வாய் மேற்கு,
அல்வாய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, தாய், தந்தை,
சகோதரர்கள்.

(சி/1030) (2-4)

**மணல்**
**விற்பனைக்குண்டு**

கட்டட வேலைக்கும், பூச்சுவேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.

4 டிரக்டர் - 21, 000/=

தொடர்புகளுக்கு : ரமேஸ்
072 2694462
(19737)(6,8,)

யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரியில்

திருமணம் செய்து UK செல்வதற்கான A1 Exam

DMI COMPUTER EDUCATION

Sponsor/Settlement Visa

British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City &Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று, ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்.

# சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம் எமது நிறுவனத்தால் வழங்கப்படும்.

# சித்தியடையாவிட்டால் கற்கைநெறிக் கட்டணம் மீளளிக்கப்படும். (சி/1215)

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, ... வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V. வீதி, Tel. : 021-226 2470
சாவகச்சேரி No.174, கண்டி வீதி, Tel. : 021-227 0243

இலவச ஆலோசனைகளுக்கு. 0777577333

Latest mobile phone, digital camera
சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும்

I phone (Apple) I pad, 3GS,4S உட்பட அனைத்து phone உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு
(Original Battarys, Coversing, Display Ribbon பெற்றுக்கொள்ளலாம்)

Dise Antenna
Dise Antenna பொருத்துதல், அதில் ஏற்படும் பழுதுகள் யாவும் வீடுகளில் வந்து செய்துகொடுக்கப்படும்.
விவரங்களுக்கு-

NEW ASIAN CENTER
56/15 B ஸ்ரான்லி வீதி
(சம்பத் வங்கியருகாமை) யாழ்ப்பாணம்.
T.P- 0776510134, 0778249949

(சி/1202) (15)

## மரண அறிவித்தல்



**திருமதி கௌசலாதேவி செல்வராசா**

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கௌசலாதேவி செல்வராசா கடந்த (29.06.2012) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு (கணேசு) - செல்லாபரணம் தம்பதியரின் அன்பு மகளும், இணுவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை- அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், செல்வராசாவின் (ஓய்வுபெற்ற பதில் பிரதேச செயலர் - சண்டிலிப்பாய்) அன்பு மனைவியும், நிறஞ்சலா, துஸ்யந்தி, செந்தூர் ஆகியோரின் பாசமிகு தாயும், ஆனந்தராசா, கணேசராசா ஆகியோரின் அன்பு மாமியும், சச்சிதானந்தன், நித்தியானந்தன், காசிநாதர், விவேகானந்தன் ஆகியோரின் சகோதரியும் கமலாதேவி, பரமேஸ்வரி, மனோன்மணி, இரஞ்சிதமலர்,இராசமணி, காலஞ்சென்ற கணேசரத்தினம், புஷ்பலீலாவதி, அரியராசா, சிவயோகமணி, மகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும், அர்ச்சுவினியா, கபேஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2012) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'அன்பகம்'
சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

(20015)(5-6-7)

## வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான வருடாந்த பூங்காவன உற்சவம்



இன்று (04.07.2012) புதன்கிழமை 4.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையுடன் ஆரம்பித்து மணி மண்டபத்தில் அம்பிகை வீற்றிருப்பாள். அத்துடன் விசேட பூஜைகளும் இடம்பெறும். விஷேடமாக அமைக்கப்பட்ட அலங்கார முத்துப்பந்தலில் அம்பாள் வெளி வீதி வலம் வருவாள்

அடியார்கள் அனைவரும் அம்பாளைத் தரிசித்து சகல சௌபாக்கியங்களையும், நல்லாசிகளையும் பெற்று வளமுடன் வாழ்க

**விஷேட நிகழ்வுகள்**

1) தவில் மேதை சின்னராசாவின் புதல்வன் N.R.S. ரவீந்திரன், இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நாதஸ்வர வித்துவான் செந்தில்குமரன் குழுவினரின் நாதஸ்வரம்
2) N.நந்தகுமரனின் நாதஸ்வரக் கச்சேரியும் இடம்பெறும்

பூங்காவன உபயகாரர்

(சி/1218) (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆர்வம் இல்லாத இடத்தில் புதுமைகள் பிறப்பதில்லை -குஸ்டாவ் க்ராங்ஸ்மேன்-

# புதன் பொய்கை A

உதயன் 04 ஜூலை 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

# மாணவர் முகாமை சவாலாகுமா?

நடேசு தயாளன்

(கடந்தவாரத் தொடர்ச்சி)



வறுமையும், வேலையின்மையும் குடும்பங்களிடையே நிதி நெருக்கீடுகளை உண்டு பண்ணுவதாயுள்ளன. இந்த நிலையில் வயதுவந்தோர் தம் குடும்பங்களைச் சீர்தூக்க முனைகின்றனர். இத்தகைய குடும்பங்கள் அதிகளவான பதட்ட நிலைக்கும் உள்ளாகின்றன. இதன் தொடர்ச்சியாக குடும்ப வன்முறைகளும் தோற்றம் பெறுகின்றன. இதுவோர் பொதுவான விடயமாகின்றது.இதன் காரணமாக சிறுவர்கள் போதியளவு கண்காணிப்புக்குட்படாத நிலையும் உருவாகின்றது. இந்தச் சூழ்நிலை உருவாக்கமானது வன்முறைக்கும் வழிவகுக்கின்றது.

இதுமட்டுமன்றி மாற்றமடையும் சந்ததி மாற்றச் சமூகச் செயற்பாடானது பதட்ட நிலைகளை உருவாக்குவதோடு அது இளம் பராயத்தவர்களையும் பாதிப்பதாயுள்ளது.

### பாடசாலைச் சூழல்

பாடசாலைகளானது தம்மளவிலேயே அதிக மாற்றத்துக்குள்ளாகின்றன. கல்வியைப் பெறுவதில் தடைகளை உண்டு பண்ணி வந்த பொருளாதாரக் காரணிகள், சாதியக் கட்டமைப்புக்கள், வகுப்பு நிலைகள் என்பவற்றிலே தாக்கங்கள் குறைந்து கொண்டுள்ள நிலையில் பல்வேறு சமூக நிலைகளில் இருந்தும் பிள்ளைகள் பாடசாலைக்கு வருகைதருவதோடு நெருக்கமான முறையில் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளும் நிலையும் உருவாகின்றது. இங்கு நம்பிக்கைகளின் தோற்றப்பாடுகளில் உண்டாகும் வேறுபாடானது சந்ததி ரீதியிலான பதற்ற நிலையினை பாடசாலைகளில் தோற்றுவிக்கின்றது.

அதேவேளை அதிகளவான மாணவர் தொகை கொண்ட வகுப்பறைகளிலும் பார்க்க, குறைவான மாணவர் தொகை கொண்ட வகுப்பறைகளில் வன்முறையுணர்வு குறைவாகவுள்ளதும் அவதானிக்கத்தக்கது.

### தொடர்புச் சாதனங்கள்

தொடர்பு ஊடகங்களின் சில வகையான செயற்பாடுகள், மாணவர்களிடையேயான வன்முறை உணர்வுக்குக் காரணமாக அமைகின்றன. தொலைக்காட்சியில் இடம்பெறும் வன்முறைக் காட்சிகள், வீடியோ விளையாட்டுக்கள் அதிக அதிர்வு உடைய இசை ஒலி நாடாக்கள் என்பனவும் பிள்ளைகளின் உளவியல் நிலையில் எதிர் மனப்பாங்கினைத் தோற்றுவிப்பதாயுள்ளன. சிலவகையான திரைப்படங்களும் வன்முறையை தூண்டுவனவாக உள்ளன. மேற்கூறப்பட்டவை சாத்தியப்படாத நட்சத்திர மனப்பாங்கினைப் பிள்ளைகளிடம் ஏற்படுத்துவதால் பிள்ளைகளும் யதார்த்தத்தினை உணர முடியாதவர்களாக மாறும் நிலையுமுள்ளது.

மாணவர்களிடையேயான அமைதியின்மை பொதுவான விடயமாகவும், அதற்குப் பல்வேறு காரணிகள் பங்காற்றுவதாயுமுள்ளன. இதற்கு அவர்களது வயது நிலை, பால்நிலை என்பன காரணமாக அமைந்துள்ளன. பாடசாலைக் கற்றலில் கூடுதலான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படல், கற்றலை ஆர்வத்தோடு மேற்கொள்ளாத நிலையில் வகுப்பறையில் அவர்கள் பரீட்சிக்கப்படல், பரீட்சையில் புள்ளிகள் அதிகம் பெறாவிடில் பரிகாசம் செய்தல், பிள்ளைகளுக்கு புரிந்துணர்வுடன் கூடிய அன்பு கிடைக்காமை, குடும்பப் பிரச்சினைகள், நிதிப் பிரச்சினைகள், ஒப்படைக்கப்பட்ட கருமங்களை குடும்பங்களில், பாடசாலைகளில் நிறைவேற்ற முடியாமை என்பன மாணவரிடையே அமைதியின்மையைத் தோற்றுவிக்கின்றன. இவை பொதுவான பிரச்சினைகள் என நோக்கிவிட முடியாதுள்ளது. ஏனெனில் இவை பிள்ளைகளின் வாழ்க்கைக் கோலத்திலும் தாக்கத்தினை உண்டு பண்ணுவனவாக இருக்கும்.

இவ்வாறு அமைதியின்மைக்கு உள்ளாவோருக்கு இணைப்பாடவிதானச் செயற்பாடுகளினூடாக இதிலிருந்து விடுபடுவதற்கான பயிற்சிகளை வழங்க வேண்டும். பெற்றோர்களும், ஆசிரியர்களும் கூட்டுச் சேர்ந்து செயற்படுவதோடு, பிள்ளைகள் தொடர்பில் நெருக்கமான பார்வையினைச் செலுத்துதல் அவசியமாகும். இதனூடாகவே தேவையான கட்டுப்பாடுகளை மேற்கொண்டு மாணவர்களின் ஒழுக்கப் பிறழ்வினைத் தவிர்க்க முடியும். பிள்ளைகள் சமூகரீதியான காரணங்களாலும், தனிப்பட்ட காரணங்களாலும் வன்முறையில் ஈடுபடுகின்றனர் என்பது தொடர்பில் அனைவரதும் பார்வைப் புலம் இருத்தல் அவசியமாகும். பெற்றோருக்கும், பிள்ளைக்கும் இடையிலான தொடர்பு நெருக்கமான முறையில் ஒழுங்கமைக்கப்படலும், வன்முறையைத் தவிர்ப்பதற்கு வழி வகுப்பதாக இருக்கும். பிள்ளைக்கும் ஆசிரியருக்கும் இடையிலான தொடர்புகள் நெருக்கமாக இருத்தல் அவசியமாகும். பிள்ளைகள் தமது வாழிடங்களில் சிறப்பான முறையில் பயிற்றுவிக்கப்பட்டால் அவர்கள் வெளியிடங்களில் குறைந்தளவு வன்முறையிலேயே ஈடுபடுவார்கள். பெற்றோர்கள் பிள்ளைகளைத் தனிமையில் இயங்கவிடும் நிலையும் பாதக விளைவுகளையே உண்டு பண்ணுகின்றது. பெற்றோர் வினைத்திறனான தொடர்பாடல் முறையினைப் பிள்ளைகளிடம் பேணுதல் அவசியமாகும். இங்கு அன்பும் அரவணைப்பும் வழங்குதல் எல்லா நிலையிலும் சிறப்புடையதாகும்.

பாடசாலையானது பின்வரும் விடயங்கள் தொடர்பில் பிள்ளைகளுக்கு விழிப்புணர்வினை ஊட்டுதல் அவசியமாகும்.

***1.பாடசாலைக் கல்வியினூடாக பயன் அடைய முடியும் என்ற மனோ நிலையை வளர்த்தல்.***

***2.ஆசிரியர்கள் தமக்குரிய அந்தஸ்து நிலையினைப் பேணுதலில் மாணவர்களின் பங்கை உணர்த்துதல்.***

***3.மாணவர்களுக்கான ஆளுமைச் சீராக்கங்களைச் சிறப்பான முறையில் மேற்கொள்ளல்.***

***4.சமூக மாற்றங்களைப் பொருத்தமான வகையில் உள்வாங்கச் செய்தலும் அதற்கான பயிற்சிகளை வழங்கலும்.***

(FOREHAND & LONG) 2002 என்போர் பெற்றோரது பழக்கங்களானது பிள்ளைகளிடம் நேரானதும் எதிரானதுமான தாக்கங்களை உண்டுபண்ணுவதாகக் குறிப்பிடுகின்றனர். அந்த வகையில் நாம் நோக்கின் பெற்றோரின் செயற்பாடுகள் பின்வரும் வடிவங்களில் ஒழுங்கமைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

> **தொடர்பு ஊடகங்களின் சில வகையான செயற்பாடுகள், மாணவர்களிடையே யான வன்முறை உணர்வுக்குக் காரண மாக அமைகின்றன. தொலைக்காட்சியில் இடம்பெறும் வன்முறைக் காட்சிகள், வீடியோ விளையாட்டுக்கள் அதிக அதிர்வு உடைய இசை ஒலி நாடாக்கள் என்பனவும் பிள்ளைகளின் உளவியல் நிலையில் எதிர் மனப்பாங்கினைத் தோற்றுவிப்பதாயுள்ளன.**

மாதிரியாகச் செயற்படல் இங்கு மற்றவர்களை நோக்குவதன் மூலம் அவர்களது செயற்பாடுகளை மாதிரியாகக் கொள்ளலாகும். பிள்ளைகள் மற்றவர்கள் எதனைச் செய்கின்றார்களோ அதனைத் தாமும் அவ்வாறே செய்ய முற்படுகின்றார்கள். பிள்ளைகள் நல்ல நடத்தையினை நோக்குவார்களாயின் தாமும் அவ்வாறே செயற்படுவார்கள். மாறாகத் தீய நடத்தையினை நோக்கின் அவர்களும் அந்த தீய நடத்தையினையே மேற்கொள்வார்கள். வெகுமதிகள் கிடைக்கப்பெறுதலும் பிள்ளையின் நடத்தையில் தாக்கத்தினைச் செலுத்தும். தண்டனைகள் வழங்கப்படலானது பிள்ளையின் நடத்தையில் தாக்கத்தினை உண்டுபண்ணுவதாயிருக்கும். பொருத்தமான சந்தர்ப்பங்களில் தண்டனைகளை வழங்குவதனூடாக சிறந்த நடத்தை உருவாக்கத்தினை மேற்கொள்ள முடியும்.

பிள்ளைகளை வன்முறைச் சூழலில் இருந்து விடுபடச் செய்வதற்கு பெற்றோர்கள் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் பற்றி (FOREHAND & LONG) குறிப்பிடும் போது பின்வரும் விடயங்களைப் பிரேரிக்கின்றனர்.

***1.பிள்ளைகளோடு நகைச்சுவை உணர்வுடன் பேசுதல்.***

***2.நான் உன்னை நேசிக்கிறேன் எனப் பிள்ளைக்கு அடிக்கடி கூறுதல்.***

***3.ஏற்றுக்கொள்ளக் கூடிய செயலொழுங்குகளைக் கட்டியெழுப்புதல்.***

***4.குடும்பப் பாரம்பரியங்களை பேணக் கற்றுக் கொடுத்தல்.***

***5.பொறுமையோடு செயற்படும் மனப்பாங்கினைக் கட்டியெழுப்பல்.***

***6.பிள்ளைகளின் சுயதிறனைக் கட்டியெழுப்புதல்.***

***7.சகபாடிகளோடு சேர்ந்து பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனினைக் கட்டியெழுப்புதல்.***

பிள்ளையினது நடத்தைப் பாங்கினைக் கட்டியெழுப்புவதில் பெற்றோரதும் பாடசாலையினதும் பங்களிப்பானது அளப்பரியதாகும். இது தொடர்பில் திட்டமிடப்பட்ட தொடர் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படல் அவசியமாகும். பிள்ளையைப் பொறுத்தவரையில் தனக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரம் எதுவரையானது எச்சந்தர்ப்ப சூழ்நிலை சார்ந்தது என்பது தொடர்பான தெளிவு ஏற்படுத்தப்பட்டிருத்தல் அவசியமானதாகும். பாடசாலையைப் பொறுத்தவரையில் வகுப்பறைகளில் ஆசிரியர் இல்லாத நேரம், விளையாட்டு மைதானத்தில் விளையாடும் நேரம், பாடசாலை நேரத்துக்குப் பின்னரான நிகழ்ச்சிகள், செயற்பாடுகள், பொதுவான நிகழ்ச்சிகள் இடம்பெறும் சந்தர்ப்பங்களிலும் ஒழுங்கமைந்த மேற்பார்வை தொடர்பான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருத்தல் அவசியமாகும்.


இது தவிர பாடசாலையில் வழிகாட்டுதலும், ஆலோசனையும் சேவையினை வினைத்திறனாக மேற்கொள்ளலும் அவசியமான ஒரு விடயமாகவுள்ளது. பொருத்தமான ஆசிரியரை வழிகாட்டலுக்கும், ஆலோசனைக்கும் நியமித்தல், ஆலோசனை சேவை நிலையத்தினை பொருத்தமான வசதிகளுடன் பொருத்தமான இடத்தில் ஒழுங்கமைத்தல், மாணவர்களிடையே ஆலோசனை வழிகாட்டல் செயற்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்துதல், பாடசாலையில் இடம்பெறும் ஆலோசனையும் வழிகாட்டலும் தொடர்பான செயற்பாடுகள் நம்பகரமானவை என்ற மனவுணர்வு மாணவர்களிடையே ஏற்படுத்தப்படல் என்பன அவசியமான விடயங்களாகவுள்ளன. இத்தகைய தந்திரோபாயச் செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலமே மாணவர்களின் அமைதியின்மை நிலைமைகளைக் குறைத்துக்கொள்ள முடியும். இது தொடர்பில் அதிபரானவர் நேர் மனப்பாங்குடன் செயற்படுபவராகவும், போதிய அறிவினைப் பெற்றுக் கொண்டவராகவும் இருப்பதோடு ஆசிரியர்களை ஊக்கப்படுத்து பவராகவும் விளங்குதல் அவசியமாகும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உல்லாசமாக ஊஞ்சலாடும் செல்லப்பிராணிகள்

# ராட்சத நீளமுடைய பாலங்கள்



நீர்நிலைகளைக் கடந்து பிரயாணம் செய்வதற்காக அமைக்கப்படும் பாலங்களை சில சந்தர்ப்பங்களில் மிகவும் நீளமானதாகவும் அமைக்கவேண்டிய கட்டாயம் ஏற்படலாம். அவ்வாறான கட்டாய காரணங்களின் அடிப்படையில் உலகளாவிய ரீதியில் அமைக்கப்பட்ட பாலங்களுள் முதல்வனாக சீனாவின் ஷிங்டாஓ பிரதேசத்தில் காணப்படும் ஜியாஓஸ" பாலமே விளங்குகின்றது. இதன் நீளம் 26.4 மைல்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# வித்தியாசமான படங்கள்






ஜப்பானைச் சேர்ந்த பண் என்பவர் நவீன தொழில் நுட்பத்துடன் புகைப்படங்களை உருவாக்கி புதிய சாதனை புரிந்துள்ளார்.


# அழகான தலைகீழ் வீடுகள்






தலைகீழாக மிக அழகாகவும், தத்ரூபமாகவும் இந்த வீடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த வீடுகள் எட்டு மாதங்களில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.


# வித்தியாசமாக அமைக்கப்பட்ட கட்டடங்கள்





உலகில் பல நாடுகளில் மனிதனால் உருவாக்கப்பட்ட கட்டடங்கள் தான் இவை.வினோதமாக இந்தக் கட்டடங்கள் காட்சியளித்தாலும் இவைகளை உருவாக்கியவர்களின் கற்பனைத் திறனுக்கு ஓர் தனி சக்தி இருப்பதை உணர முடிகிறது.

# கடதாசியினால் திருமண ஆடை




கடதாசியினால் தயாரிக்கப்படும் திருமண ஆடைப் போட்டியில் அமெரிக்காவைச் சேர்ந்த பெண்ணொருவர் இரண்டாவது வருடமாக வெற்றிபெற்றுள்ளார். இவர் 10 மிகப் பெரிய கடதாசிச் சுருள்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஆடையை அணிந்து இந்தப் போட்டியில் கலந்துகொண்டார். மெக்சிக்கன் மாநிலத்தைச் சேர்ந்த சுசன் பிரெனன் என்னும் இப்பெண் 270,000 ரூபா பெறுமதியான பரிசை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கைரேகைகளின் பலன்கள்

17

### ஆயுள்ரேகை அமைப்பும் பலாபலன்களும் (தொடர்ச்சி)



5.ஆயுள்ரேகை அகன்று சின்னஞ் சிறிய துண்டு ரேகைகளால் பிணைக்கப் பட்டிருப்பின், வீரத்தன்மை கடுகளவேனும் இராது. நோயைத் தாங்கக்கூடிய சக்தியிராது. திடகாத்திரமில்லை. தசைப் பலமும் தேக சக்தியுமில்லை. எல்லாவித நோய்களுக்கும் சுலபமாய் ஆளாகி விடுவர். எப்பொழுதும் பலவீனம் குடி கொண்டிருக்கும். தன்னம்பிக்கை இராது. இத்தகையோர் மற்றவர்கள் ஆதரவிலிருக்கத் தக்கவராவர்.

### ஆயுள்ரேகையின் குற்றங்குறைகளும் பலா பலன்களும்


1.ஆயுள்ரேகை ஏணிப்படி போல அமைந்திருந்தால், ஆழமின்றி அகன்ற ரேகைக்குள்ள குணமே இதற்கும் இருக்கும். நிலையில்லாத ஆரோக்கியமும் அடுத்தடுத்து நோயும் வரும். அதனால் சபலபுத்தியும் இருந்துவரும். ரேகைத் துண்டுகளால் அடுக்கப்பட்டு ஒரே ரேகை போலக் காணப்படுவது துர் பலத்தைக் குறிக்கும்.

2.சிறு மெல்லிய ரேகைகளால் ஆக்கப் பெற்ற ஆயுள் ரேகை விசேஷமாய் நரம்புகளின் பலவீனத்தைக் குறிக்கும். இதில் ஒரு ரேகைக்குப் பதிலாக பல ரேகைகள் சேர்ந்திருக்கின்றன. அசமந்தமும், தேகமெலிவும் இருந்து வரும். இந்த ரேகைக் கூட்டம் வீரத்தன்மையைக் குறைத்து விடுகிறது.எந்தக்காரியத்திலும் சுறுசுறுப்புண்டாக்காமல் தடுத்து ஊக்கமில்லாது செய்துவிடும்.

3.ஆயுள் ரேகை சங்கிலிபோலிருந்தால், உயிர்ப்புள்ள சக்தி செல்வதற்குப் பெரும் தடையாகும். மனம் சங்கடப்படும் படி திரும்பவும் நோயுண்டாகும். அகன்று படர்ந்த ரேகையைவிடச் சங்கிலிபோன்ற ரேகை அதிக கேடு செய்ய வல்லதாகும். இரத்த ஓட்டமில்லாததாய் எப்பொழுதும் ஆரோக்கியமும் கெட்டிருக்கும்.




ஆயுள் ரேகை பொதுவாய் ஆரோக்கியத்துக்குக் காரணமாயிருப்பதால், குற்றங்குறைகள் நோய்களைக் குறிப்பிடுவதாயிருக்கின்றன. இந்த ரேகையிலிருந்து தேக அமைப்பு எவ்வாறு உள்ளதென்பது அறியத்தக்கதாயினும் திடீரென நோயுண்டாகக்கூடிய குறிகள் காணப்படும். அந்தக் குறிகளைக் கொண்டு எத்தகைய நோயுண்டாகுமென்பதை அறிந்து கொள்ள வேண்டும். அநேகருக்கு உடலொட்டிய நோயிருந்து வரும். அது கால அளவில் மாறி, ஆரோக்கியத்தைப் பாதிக்கக்கூடிய நோயாகி விடும். சிலருக்கு இளமையில் ஆயுள் ரேகை சங்கிலிபோல அல்லது மெல்லியதாய்ப் பட்டும்படாததுமாய் இருந்தாலும், குழந்தைப் பருவத்திலே நோயுண்டாவதைக் குறிக்கும். நோய்க்குள்ள கால அளவுக்குப் பிறகு ரேகை நன்றாய் அமைந்திருந்தால் பலவீனங் குறைந்து ஆயுள் முழுவதும் திடகாத்திரமாயிருந்து வரும். ஆயுள் ரேகை மெல்லியதாய் இருந்தால் ஆயுள் முழுதும் பலவீனத்தைக் குறிக்கும். நோய்க் குறியைக் காணும்போது விரல் நகங்களையும் கவனிப்பது நலம். பார்க்கும் போதே பலயீனப்பட்ட மனிதராயின், உடனே அதற்குரிய காரணத்தை ரேகையினின்றும் ஆராய்ந்து கண்டுகொள்ள வேண்டும். கிரக மேடுகளில் குறுக்கிட்ட சிறு ரேகைகளும் பல அளவில் நோய்க் குறிகளாகத் தோன்றி மறையும். அதுவே ஆயுள் ரேகையிலும் தோன்றும். குற்றமாகக் கருதப்படும் குறுக்கிட்ட ரேகை, புள்ளடி, புள்ளி, தீவு, வெட்டுப்பிளவு முதலியன தனித்தனியே நோயையும் குறிக்கும்.







4.ஆயுள் ரேகையில் அடுத்தடுத்துக் குறுக்கிட்ட மெல்லிய ரேகைகள் காணப்படும். அவைகள் ரேகையை வெட்டித் துண்டாக்கா. சில்லறை நோய்கள் அடிக்கடி தோன்றி மறையும். குறுக்கிட்ட சிறு ரேகை சுக்கிர மேட்டிலுமிருப்பதால், நோய் காணும் போதெல்லாம் மனத்துக்கு வேதனையையும் தரும். குறுக்கிட்ட சிறு ரேகை அழுத்தமாய்ப் பதிந்திருந்தால் நோயின் கடுமையைக் குறிக்கும்.

5.சுக்கிரமேட்டிலிருந்து ஒரு ரேகை ஆயுள் புத்தி இருதயம் என்ற மூன்று ரேகைகளையும் குறுக்கிட்டு சனி மேட்டிலுள்ள வலைக் குறியை நோக்கியிருக்குமாயின், சனியின் கோளாறினால் ஏற்பட்ட பிணியென்பதாகும். இதை நகத்தைக் கொண்டும் அறிந்து கொள்ளலாம்.

**(தொடரும்)**

## தேர்தலுக்கான இணக்க அரசியல்

வடமாகாணத்தில் விரைவில் தேர்தல் திருவிழா களை கட்டப் போகின்றது. அதற்கான முன்னாயத்தங்களில் ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் வெகுவேகமாகக் களமிறங்கி விட்டனர். தியேட்டர் அரசியல்வாதி அதற்குரிய வேலைகளை முழு மூச்சாக முன்னெடுக்கின்றார். அவர் தனது தாரக மந்திரமாக, ''கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை ஒழுங்காகப் பயன்படுத்துங்கோ'' என்று சொல்லிக் கொண்டே தன்ர கையில 'மைக்' கிடைக்கிற சந்தர்ப்பத்திலயெல்லாம் தன்ர இணக்க அரசியல் விண்ணாணங்களை அவிழ்த்துக் கொட்டுறதுக்குச் சரியாய் பயன்படுத்திறார்.

எவ்வளவோ காலமாக வேலையில்லாமல் திண்டாடிய பட்டதாரிகளுக்கு வேலை பெற்றுக் கொடுக்கும் கடப்பாடு அரசுக்குரியது. அந்தக் கடமையை அரசு செய்திருக்கின்றது. அதை வைத்துத் தன்ர அரசியல் சித்தாந்தங்களை படிச்சவைக்கு முன்னால உளறிக் கொட்டினார் அவர். ஏதோ தன்ர இணக்க அரசியலாலதான் உங்களுக்கு வாழ்வாதாரம் வந்திருக்கிறது என்று வாய் கிழியப் பேசினார்.




போதாக் குறைக்கு இடையில தன்ர காட்டிக் கொடுக்கிற தொழிலையும் செய்தார். அரசின் ஒரு பங்காளியாக யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற இளைய அரசியல் தலைவர் ஒருத்தரின் நெருங்கிய வட்டாரங்கள், பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுக்கக் காசு வாங்கியதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதை வச்சுக் கொண்டு ''அப்பிடி யாராவது காசு வாங்கியிருந்தா உடன போய் பொலிஸில அவையக் காட்டிக் கொடுங்கோ'' என்றார் தியேட்டர்காரர். வேலை தாறன் வேலை தாறன் எண்டு பட்டதாரிகளை ஒவ்வொரு தேர்தலுக்கும் சரியாகப் பயன்படுத்தினதை அவர் மறந்திட்டார் போல.

தியேட்டர்காரற்ற அமைப்பாளர்கள் எல்லாம் மேடையில ஏறி தங்கட கையால பட்டதாரிகளுக்கு நியமனம் கொடுத்தார்கள். நடந்த நிகழ்வைப் பார்த்தா அரச அலுவலகத்தின் நிகழ்வு மாதிரியாக இல்லை. கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் மாதிரியாகத்தான் இருந்தது. உள்ளுக்கை தியேட்டக்காரர் கத்த, வெளியில நீலக் கட்சிக்காரர் தங்களால்தான் பட்டதாரிகளுக்கு வேலை கிடைச்சது எண்டு போட்டிக்குக் கத்தினார்கள்.

மொத்தத்தில தேர்தல் திருவிழா வருவதற்கான அறிகுறிதான் எல்லாம்.

-நக்கல் நரசிம்மன்.

## உதயனை விமர்சியுங்கள்

போர் முடிவடைந்து மூன்று வருடங்கள் கழிந்த நிலையிலும் இனநல்லிணக்க விவகாரங்களைக் கையாள்வதற்கான செயற்திட்டம் ஒன்றை இலங்கை அரசு கொண்டிருக்கவில்லை என்று பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்து அமெரிக்கா. இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழர் விடயத்தில் அவர்களின் போராட்டத்தினை பூண்டோடு அழித்து, போரினால் இடம் பெயர்ந்த மக்களின் மீளக் குடியமர்வு விடயத்தில் எந்த விதமான அக்கறையும் காட்டாமல் இருந்து வருகிறார். எனவே அமெரிக்காவானது நல்லிணக்க விவகாரம் தொடர்பில் குற்றம் சாட்டியிருப்பது எந்த விதத்தில் பெறுமதி வாய்ந்தது.

தொட்டிலையும் ஆட்டிக் குழந்தையையும் கிள்ளி விடும் அமெரிக்கா இலங்கை விடயத்தில் தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. இதன் பின்னணி ராஜதந்திர நடவடிக்கையாக இருக்கலாம். மூன்று தசாப்த போர் முடிவடைவதற்குக் காரணமாக அமைந்த அமெரிக்கா தமிழர் விடயத்தில் நல்லதைச் செய்யும் என்று ஒரு போதுமே எண்ணி விட முடியாது.

அமெரிக்கா, தமிழர் தொடர்பான பிரச்சினையில் மூக்கை நுழைத்திருப்பது தொடர்பான உள்நோக்கம் இலங்கை அரசுக்கு தெளிவாக தெரிந்ததால்தான், மிரட்டுவதாக அமெரிக்காவும் பணியாத இலங்கை அரசும் நாடகம் ஆடுகிறது. மீண்டும் ஈழத்தில் போர் வெடித்தால் அதனை அழிப்பதற்காக அமெரிக்கா இலங்கைக்கு உதவி செய்யலாம். தமிழர் தீர்வு விடயத்தில் தனது ராஜதந்திர நடவடிக்கையை மேற்கொள்வது புரியாத புதிராக இருந்து வருகிறது. ஆனாலும் காலம் இவர்களின் கபடத்தனமான செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்பது உண்மை.

அமெரிக்கா இலங்கை விடயத்தில் எந்த வகையில் தனது நடவடிக்கைளை மேற்கொள்கிறது என்பதனை உதயன் தெளிவாக வாசகர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் அமெரிக்காவினால் தமிழர் தரப்பை மகிழ்ச்சி கொள்ளவைக்கும் இலங்கை அரசுக்கு எதிரான செய்திகள் தொடர்பில் பூரண தெளிவு ஏற்படும்.

தமிழர் பிரச்சினையை வெளி உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது உதயன் என்பது எவராலும் மறுக்கப்பட முடியாத உண்மையாகும். தமிழர்களுக்கே தீங்கு செய்து வரும் சிங்கள அரசுடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் தமிழ்க் கட்சிகள் உதயனை வீழ்த்துவதற்காக சதித்திட்டம் போடுகிறார்கள். தமிழ் மக்களின் ஒரே பத்திரிகை உதயன். உதயனை வீழ்த்த எவராலும் முடியாது.

கேசவன்,
ஆசிரியர், வன்னி.

★ ★ ★

உதயன் பக்கங்களில் ஒன்றிப் போயிருக்கும் வாசகர்களில் நானும் ஒருவன். வன்னிச் செய்திகள் உதயன் வன்னிப் பதிப்பில் இடம்பெறுவதால் யாழ்.பதிப்பில் வன்னிச் செய்திகளை முழுமையாகப் பார்க்க முடியாது உள்ளது. வன்னிச் செய்திகளை யாழ்ப்பாண மக்களும் பார்ப்பதற்கு ஆவன செய்வீர்களா?

சுபோ,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமேஸ்வரம் கரையைத் தொட்டவர்கள் மீண்டும் ஈழத்துக் கரையை தொடுவார்களா?

போர் இடம்பெற்ற காலப்பகுதியில் உயிரைக் கையில் பிடித்தபடி கடல் கடந்து இராமேஸ்வரம் கரையிறங்கிய ஈழத் தமிழ்மக்கள் தமிழ் நாட்டில் பல அகதி முகாம்களில் அடைக்கப்பட்டனர். அவர்கள் கியூப் பிரிவு பொலிஸாரினால் நாளாந்தம் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகிவருகின்றனர்.

எதுவித வாழ்வாதார முன்னேற்றமும் இன்றி தமிழ் நாடு அகதி முகாம்களில் துன்பங்களை அனுபவித்து வரும் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் தொடர்பில் தமிழ் நாடு அரசோ சர்வதேசமோ கண்டும் காணாமல் இருக்கிறது. ஆண் துணையின்றி பிள்ளைகளுடன் கஷ்டப் படும் பெண்கள் கியூப்பிரிவு பொலிஸாரினால் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். தமது பிள்ளைகளை வளர்க்கும் பொருட்டு முகாமை விட்டு வெளியே சென்று கூலி வேலை செய்தும் வாழ்வாதாரத்துக்கு போதுமாக இல்லையென கவலை தெரிவிக்கின்றனர்.

சிங்கள இராணுவத்துக்குப் பயந்து ஊரை விட்டு கடல் கடந்து தமிழ்நாடு அகதிகள் முகாம்களில் அடைபட்டு பல துன்பங்களை அனுபவித்து வரும் ஈழத்தமிழ் மக்களின் வாழ்வில் ஒளி வீசாதா என நாளாந்தம் தவித்துக்கொண்டு இருக்கிறார்கள். புலிகளுடன் தொடர்புபட்டவர்கள் என்று கூறி ஈழத்து தமிழ் மக்களை துன்புறுத்தும் கியூப் பிரிவுப் பொலிஸில் தமிழ் நாட்டு தமிழர்கள் இருப்பதுதான் வேதனை தரும் விடயமாகும். பணத்திற்காக எதையும் செய்யத் துணியும் தமிழ் நாட்டுப் பொலிஸார் தமிழ் நாட்டு அகதி முகாம்களில் இருக்கும் ஈழத் தமிழர்களின் பாதுகாப்பிற்கு உதவுவார்களா?

இரவானதும் மண்டப முகாம், கும்முடுப் பூண்டி அகதிகள் முகாம்களில் அடைக்கப்பட்டு இருக்கும் ஈழத் தமிழ் பெண்கள் கியூப் பிரிவு பொலிஸாரால் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இதனால் ஒவ்வொரு நாள் இரவும் நித்திரையில்லாது பயத்துடன் இரவுப் பொழுதினை கழித்து வருகின்றனர். கியூப் பிரிவுப் பொலிஸாரால் முகாம்களில் உள்ள பெண்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படும் போது அங்குள்ள பெண்கள் அவர்களுக்கு எதிராக பிரச்சினையைக் கையில் எடுக்கும்போது அவர்கள் விடுதலைப்புலிகள் என முத்திரை குத்தப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்றனர். சிங்களப் படைகள் வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆனால் தமிழ் நாட்டு கியூப் பிரிவு பொலிஸில் இருக்கும் பொலிஸாரோ தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள். தமிழர்களே தமிழர்களைத் துன்புறுத்தும் சம்பவங்கள் உலகிலேயே இந்தியாவில்தான் இடம் பெறுகின்றன.

தமிழ் நாட்டில் உள்ள தமிழ் உணர்வாளர்கள் அடிக்கடி ஈழத்தமிழ் மக்கள் இருக்கும் அகதி முகாம்களுக்கு சென்று வருவதால் ஈழத்தமிழ் பெண்களின் வாழ்வுக்கு பாதுகாப்பாக அமைகின்றது. ஆனாலும் கியூப் பிரிவு பொலிஸாரினால் பெண்கள் துன்புறுத்தப்படுவதும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதனால் தற்கொலைகளும், காணாமல் போகும் சம்பவங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இக்கரைக்கு அக்கரை பச்சை என்று நம்பி தமிழ் நாட்டு கரையைத் தொட்ட ஈழத் தமிழ் மக்கள் தமது எதிர்காலம் குறித்து எதுவுமே தெரியாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர். தம்மை மீண்டும் ஈழத்துக்கு அனுப்புமாறு கோரியும் அவர்களை அனுப்புவதற்கான எந்த முயற்சிளையும் எடுக்காமல் தமிழ் நாடு அரசு இருந்து வருகிறது.

தமிழ் நாட்டு அகதிகள் முகாம்களில் இருக்கும் ஈழத்தமிழ் மக்களுக்கு பல வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்கள் உதவி செய்து வருகின்றன. அந்த உதவி முழுமையாக அந்த மக்களுக்கு போய்ச் சேருகிறதா? என்பது இன்று வரை கேள்விக்குறியாகவே இருக்கின்றது. தொண்டு நிறுவனங்களால் வழங்கப்படும் உதவிகளில் அரைவாசிப் பங்கிற்கு மேல் கியூப்பிரிவு பொலிஸாரினால் அபகரிக்கப்படுகிறது. இந்த மக்கள் திருப்பி ஈழத்துக்கு அனுப்பப்படுவார்கள் ஆயின் அவர்களுக்கு வழங்கப்படும் உதவிகள் தமக்கு கிடைக்காமல் போய்விடும் என்ற காரணத்தால். அந்த மக்களை திருப்பி அனுப்புவதில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வருகிறது.

இறுதிப் போரில் கணவனை இழந்து இடம்பெயர்ந்து நலன்புரி முகாமில் இருந்து வெளியே வந்து பாதுகாப்பற்ற சூழ்நிலையில் கடலால் தமிழ் நாடு சென்று மண்டபம் அகதிகள் முகாமில் இருக்கும் மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவர் அங்குள்ள ஊடகம் ஒன்றிற்கு தெரிவிக்கும்போது "பிறந்து ஒரு சில மாதங்களேயான பச்சைக் குழந்தையுடனும் எனது மற்ற இரு பிள்ளைகளுடனும் தடுப்பு முகாமில் இருந்து கடந்த வருடம் வெளியே வந்தேன்.பிள்ளைகளின் எதிர்காலத்தை நினைத்து நாட்டை விட்டு வெளியேற முடிவெடுத்து தமிழ் நாட்டுக்கு எனது பிள்ளைகளுடன் வந்தேன். அது தான் நான் செய்த மிகப் பெரிய தவறென்பது இப்போது தெரிகிறது. போரில் செத்ததுகள் கடவுள்கள். நாங்கள் எல்லாம் தினம் தினம் செத்தபடி இருக்கிறம். வாய்பொத்திக்கொண்டு இனி இதுதான் எங்கடை விதியென்று இந்த முகாமுக்குள்ளேயே எல்லோரும் வாழுறம். குடும்பமாக இருக்கிறவர்கள் கொஞ்சம் பரவாயில்லை கஷ்ரம் என்றாலும் பல்லைக் கடித்துக் கொண்டு வாழப் பழகுதுகள். கணவர் இல்லாத பெண்கள்,தனியே வந்த யுவதிகள் ,இளைஞர்கள் படுகிற கஷ்ரம் கொடுமையிலும் கொடுமை.

படுகாயப்பட்டு வந்தவர்கள் பொது மக்களாக இருந்தாலும் சரி,முன்னாள் போராளிகளாக இருந்தாலும் சரி அதில் வேறுபாடு இல்லாமல் எல்லோரும் புலிகள் என்பது தான் கியூப் பிரிவு பொலிஸாரின் கருத்து. காயப்பட்டவர்கள் எல்லோரையும் செங்கல்ப்பட்டு சிறப்பு முகாமுக்கு அனுப்பி அங்கே வலியோட இருக்கிற அவர்களை சித்திரவதை செய்து கொடுமைப்படுத்துவதால் மன நிலை குழம்பிப் போய் இருக்கின்றனர். இவர்களை வெளியே கொண்டுவருவதற்கான எந்த முயற்சியையும் தமிழ் நாடு அரசுமேற்கொள்ளவில்லை என்பது வேதனை தரும் விடயமாகும். செங்கல்ப்பட்டு முகாமில் ஆயிரக் கணக்கில் ஈழத்து இளைஞர்கள் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் அடைக்கப்பட்டுள்ளனர். ஈழத்தில் போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும் இவர்களின் எதிர்காலம் சிறைக்குள்ளேயே முடங்கிப் போய் இருக்கின்றன.

மண்டப அகதிகள் முகாமில் இருக்கும் ஈழத்தமிழ் மக்கள் இரவு 8.00 மணிக்குப் பிறகு முகாமை விட்டு வெளியே போக முடியாது,வெளியில் இருந்து முகாமுக்குள் எவரையும் வந்து பார்க்கக் கூடாது என்று கியூப் பிரிவுப் பொலிஸார் சட்டம் விதித்துள்ளனர். எவரும் முகாமுக்குள் வருவதாயின் கலெக்டர் அனுமதி வேண்டும். கலெக்டர் அனுமதி பெற்று முகாமுக்குள் வந்து போகின்றவர்கள் எவரென பொலிஸார் துறுவ ஆரம்பித்து விடுகின்றனர்.ஏன் வந்தார்கள்? என்ன கொண்டு வந்தவர்கள்? என்று விசாரித்து எங்களிடம் மேலதிகமாக இருக்கும் பொருள்களையும் பறித்துக் கொண்டு சென்று விடுவார்கள். நிலைமை கட்டுக்கடங்காமல் செல்வதைப் பார்த்து பொறுக்க முடியாத முகாமில் உள்ள இளைஞர்கள் பலர் போராட்டங்களை மேற்கொண்டனர். இதன் போது பொலிஸாரின் கண்மூடித் தனமான தாக்குதலில் படுகாயம் அடைந்து மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

போராட்டங்களை மேற்கொண்டால் நிலைமை கவலைக்கிடமாகப் போய்விடும் என்ற பயத்தில் முகாம் மக்கள் போராட்டங்களைக் கைவிட்டு நிர்க்கதியான நிலையில் எதுவுமே பேசமுடியாமல் வாய்மூடி மௌனித்து இருக்கிறார்கள். திராவிடம்,தமிழ்த் தேசியம்,டெசோ, தலித்தியம், தமிழ்ப் பாசிசம், மாக்சியம் இப்படி பேசித் தர்க்கப் படுபவர்கள் மண்டப முகாமில் வதைபடும் ஈழமக்களின் விடுதலைக்கு முயற்சி எடுப்பார்களா? என்றார்.

■ பித்தன்

# மந்திரமா? தந்திரமா?

'பட்டதாரி பயிலுநர் நியமனம்' என்ற பெயருடன் 2048 பட்டதாரிகளுக்கு கடந்த திங்கள் கிழமை நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பல வருடக் கனவு நனவாகப் போகும் மகிழ்ச்சியில் பட்டதாரிகள் வழமையை விடவும் அன்றைக்கு நேரகாலத்துடனேயே மண்டபத்தை நிறைத்திருந்தார்கள். சொன்ன நேரத்துக்கு நிகழ்வும் ஆரம்பமாகியது. நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்ட ஒழுங்கு முறைப்பிரகாரம் பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. அன்றைக்கே அவர்கள் தங்களுடைய கடமைகளை அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பிரதேச செயலகங்களில் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டது.

பிரதேச செயலகங்களுக்குச் செல்லும் வழியில் தற்செயலாக நியமனக் கடிதங்களைப் பார்வையிட்ட பட்டதாரிகளுக்கு தூக்கிவாரிப்போட்டது. அந்தக் கடிதத்தில் குறித்த நியமனம் ஆறு மாதங்களைக் கொண்ட விசேட செயற்றிட்டம் ஒன்றுக்காகவே குறித்த பட்டதாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், ஆய்வு மற்றும் தகவல் திரட்டல் பணிகளுக்காக இந்த ஆறுமாதமும் அவர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் எனவும், இதற்காக அவர்களுக்கு அலவன்ஸாக மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா வழங்கப்படுமெனவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. குறித்த நியமனம் 6 மாதத்திற்கு பின்னர் நீட்டிக்கப்படக் கூடிய சாத்தியமோ அல்லது இந்தச் செயற்திட்டம் முடிவுக்கு வந்த பின்னர் பட்டதாரிகள் நிரந்தர சேவைக்குள் உள்ளீர்க்கப்படுவார்கள் என்ற உறுதிமொழியோ அந்தக் கடிதத்தில் இருக்கவே இல்லை.

ஏற்கனவே அரச சேவையில் இருந்த பட்டதாரிகள் சிலர் தமது பதவியை உதறிவிட்டு, குறித்த நியமனத்தைப் பொறுப்பேற்றிருந்தனர். அவர்கள் இதைவிடவும்(10ஆயிரத்தைவிடவும்) அதிக சம்பளத்தை மாதாந்தம் பெற்றுவந்தவர்கள். ஆயினும் தமது தகுதிக்கேற்ற பதவி இல்லாமல், அல்லது தமக்குப் பொருத்தமற்ற துறையில் நியமனம் கிடைத்தமை என்பவற்றுக்காகவே அவர்கள் இருந்த வேலையை உதறிவிட்டு இந்தப் பட்டதாரிகள் பயிலுநர் நியமனத்துக்கு விண்ணப்பித்திருந்தனர். ஆனால் இப்போது எட்டாத ஒன்றுக்காக ஆசைப்பட்டு, இருந்ததையும் இழந்த கதையாக பட்டதாரி பயிலுநர் பதவிக்கு வந்ததால் தமது எதிர்காலம் இருண்டுவிடுமோ என்ற அச்சம் குறித்த நியமனத்தை ஏற்றவர்களின் மனதில் எழுந்துள்ளது.

## கோணல் வலங்கள்

"எமக்கான நிரந்தர நியமனம் ஆறு மாதத்தின் பின்னர் வழங்கப்படுமா? நாங்கள் முன்னர் வகித்த அரச பதவியின் சேவைக்காலம் இதனோடு சேர்த்துக் கணிப்பிடப்படுமா? இந்த வேலை எங்களுக்குப் பிடிக்காவிட்டால் மீண்டும் எமது பழைய பணிக்கே திரும்ப முடியுமா?" என்று தமக்கு நியமனக் கடிதங்களைக் கையளித்த அதிகாரிகளிடம் பட்டதாரிகள் நேரடியாகவே கேட்டுள்ளனர். ஆனால் அதற்கு "எங்களுக்கு ஒன்றும் தெரியாது. எல்லாம் மேலிடத்து உத்தரவு. அவர்கள் இந்த நியமனங்களை வழங்குமாறு உத்தரவிட்டார்கள். அதைத் தவிர வேறு எந்த மேலதிக விளக்கங்களும் எங்களுக்கு வழங்கப்படவில்லை." என்று அந்த உயரதிகாரிகள் கைவிரித்து விட்டார்கள். இவ்வாறு பொறுப்புச் சொல்ல வேண்டிய அதிகாரிகளுக்கே இந்த நியமனத்தின் பின்னால் உள்ள தாற்பரியங்கள் தெரியாதுள்ள நிலையில், திரிசங்கு சொர்க்க நிலையில் பட்டதாரிகள் இந்த நியமனத்தை ஏற்பதா? இல்லையா? என்று முடிவெடுக்க முடியாமல் திண்டாடுகின்றனர்.

இதற்கு முன்னர் 1996 ஆம் ஆண்டளவில் –சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த போது –இதே போன்றே பட்டதாரிகள், பயிலுநர்களாக இணைக்கப்பட்டு பின்னர் அவர்கள் பல்வேறு திணைக்களங்களுக்கும் நிரந்தர நியமனம் செய்யப்பட்டார்கள். இத்தகைய ஒரு வழிமுறையே இப்போதும் பின்பற்றப்பட்டு, பட்டதாரிகள் அனைவருக்கும் ஆறு மாதத்தின் பின்னர் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டால் அது மகிழ்வுக்குரிய விடயம் தான். ஆனால் சந்திரிகாவின் காலத்தில் பயிலுநர் பதவிகள் வழங்கப்பட்ட போது, அவர்களுக்கு குறித்த காலத்தின் பின்னர் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் என்ற உறுதி மொழி பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளால் வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக விளக்கங்களும் எழுத்து மூலமாக அவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் இப்போது வழங்கப்பட்டுள்ள பயிலுநர் நியமனத்தில் அவ்வாறான உறுதிமொழிகள் வழங்கப்படவே இல்லை. அத்துடன் இது ஒரு ஆறுமாதகால பகுதியைக் கொண்ட செயற்திட்டம் என்று மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளதால், நிரந்தர நியமனம் குறித்த சந்தேகங்கள் இன்னும் அதிகமாகின்றன.

ஓடுகாலி

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று முடிந்த பின்னர் ஒரு கட்சிக்காக ஓடியாடி வேலை செய்த பட்டதாரிகள் சிலருக்கு இதே போன்று பிரதேச செயலகங்களில் பயிலுநர் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதுவும் இதே போன்று ஆறு மாதங் கொண்ட ஒரு செயற்திட்டத்தின் கீழேயே உள்வாங்கப்பட்டிருந்தனர். பின்னர் குறித்த செயற்திட்டத்தின் கால அளவு முடிவடைந்ததும் அந்தப் பட்டதாரிகளின் நியமனம் தானாகவே செல்லுபடியற்றதாக மாறிப்போக மீண்டும் அவர்கள் வேலையற்ற பட்டதாரிகளாக முருங்கை மரம் ஏறவேண்டியிருந்தது. இதே நிலைமை தமக்கும் வந்து, மீண்டும் கைகளில் பதாதைகளை ஏந்தியபடி வேலை கேட்டுப் போராடும் நிலைமை ஏற்பட்டுவிடுமோ என்ற ஏக்கம் 2048 பட்டதாரிகள் மனதிலும் தோன்றியிருக்கிறது.

தற்போது கிழக்கு மாகாணத்துக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் அங்கும் இதே போன்று 1400 பேருக்கு பட்டதாரிப் பயிலுநர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நியமனங்களை எலும்புத்துண்டுகளாக வீசிஎறிந்து தேர்தலில் வாக்குகளை அள்ளும் திட்டமே அரசிடம் உண்டு. உடனடியாக வடக்கிலும் தேர்தலை நடத்துங்கள் என்று இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் இலங்கையை நெருக்கி வரும் நிலையில், அரசு விரும்பா விட்டாலும் வட மாகாண தேர்தலை அது சொன்னபடி 2013 செப்ரெம்பருக்கு முன்னதாக நடத்த வேண்டிய சூழல். எனவே அவ்வாறான இக்கட்டான நிலையில் தேர்தலை நடத்த வேண்டியிருந்தால் வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினை அரசுக்கு எதிரான பெரும் ஆயுதமாக இருக்கும். இது பாதகமான விளைவையே அரசுக்கு ஏற்படுத்தும். எனவே பட்டதாரிகளின் வாயை அடைப்பதோடு அவர்களின் வாக்குகளையும் தன்பக்கம் ஈர்க்க அரசுக்கு பட்டதாரிப் பயிலுநர் நியமனம் உதவிபுரியக்கூடும். "வெல்வதற்காகத் தான் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன" என்று ஒரு நேர்காணலில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சொன்னது ஏனோ இந்த இடத்தில் நினைவுக்கு வருகின்றது. மீண்டும் ஒரு தடவை பட்டதாரிகள் பலிக்கடாக்களாக மாற்றப்பட்டுள்ளார்களா? அல்லது உண்மையாகவே அவர்களது வேலையில்லாப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி விழுந்திருக்கிறதா? என்பதை அறிய இன்னும் ஆறு மாதங்கள் காத்திருக்கத் தான் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு திரில்லியன் சொத்துக்களைக் கொண்டுள்ள,
## தேசத்திற்கான முதல் நிலையில் உள்ள இலங்கை வங்கியானது
வட மாகாணத்தில்

# ஒரேயொரு நாளில் அதன் 11 விரிவாக்கற் காரியாலயங்கள்
திறக்கப்படுவதைப் பெருமையுடன் அறிவிக்கின்றது.

அதன் சேவை நிலையங்களின் எண்ணிக்கை 1,000க்கு மேலாக அதிகரிப்பதுடன், இலங்கையின் வரலாற்றில் ஒரு சாதனையை இலங்கை வங்கி பதிவுசெய்கின்றது.

புதுக்குடியிருப்பு



இத் தினத்தன்று எமது வங்கியின் பட்டியலில் 1,000ஆவது இடத்தை புதுக்குடியிருப்புக் விரிவாக்கற் காரியாலயம் அடைகின்றது.




இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

www.boc.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவி வெப்பமடைவதைப் பயன்படுத்தி மீன் வளத்தைப் பெருக்க முயற்சி



மாறிவரும் புவியின் பருவநிலை மாற்றத்தை சாதமாகப் பயன்படுத்தி கூடுதல் மீன்வளத்தை எவ்வாறு பெறலாம் என்பது பற்றி ஆராய்வதற்காக ஆஸ்திரேலியா மற்றும் இந்தியாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆஸ்திரேலியப் பிராந்தியமான டாஸ்மேனியாவில் கூடியுள்ளனர்.

கடல் வெப்பமடைவதன் காரணமாக சில மீன் இனங்கள் தாம் வாழ்ந்துவந்த பகுதிகளை விட்டு இடம்பெயருவது என்பது ஏற்கனவே நடந்துவருகின்ற ஒரு சூழ்நிலையில், அந்த வகையான இடங்களில் மீன்வளத்தை வளர்த்து அறுவடை செய்வதற்குரிய புதிய வாய்ப்பு உருவாகியுள்ளதாக விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

இந்தியாவை அண்டிய கடற்பகுதிகள் மற்றும் தென்கிழக்கு ஆஸ்திரேலியாவை அண்டிய கடற்பகுதிகளை புவிவெப்பமடைந்துவரும் பருவநிலை மாற்றம் வேகமாக நடந்துவருகின்ற இடங்களாக விஞ்ஞானிகள் காண்கின்றனர்.

குளிர்ந்த நீருடைய இடமாக இருந்துவந்த டாஸ்மேனியக் கடல் பகுதியில் கடல் நீர் வெப்பமடைந்து வருவதன் காரணமாக, அந்தக் கடல் பகுதியில் ஏராளமான மீன் இனங்கள் செழிப்பாக பல்கிப் பெருகும் வாய்ப்பு உள்ளது என்றும் அந்த மீன்வளத்தை வர்த்தக ரீதியில் அறுவடைசெய்ய முடியும் என்றும் அவர்கள் நம்புகின்றனர்.

ஹோபர்ட் நகரில் இருநாட்டு விஞ்ஞானிகளும் கூடிய ஒரு சந்திப்பில், வெப்பமண்டலம் மற்றும் வெப்பமண்டலத்தை ஒட்டிய கடல் பிரதேசத்தில் வாழும் மீன் இனத்தின் முட்டைகளை புதிதாக வெப்பமடைந்துவரக்கூடிய கடல் பகுதிகளில் தூவி, அந்த இடங்களில் மீன்வளத்தைப் பெருக்குகின்ற ஒரு திட்டம் பற்றி விவாதிக்கப்படுகிறது.

ஒரு பிரதேசத்தில் அறவே இல்லாத மீன் இனங்களை அந்தப் பிரதேசத்தில் புதிதாக அறிமுகப்படுத்தும் வகையிலானது அல்ல தமது திட்டம் என்பதை ஹோபர்ட்டில் கூடியுள்ள விஞ்ஞானிகள் வலியுறுத்துகின்றனர்.

மாறாக வெப்பமான கடல்பகுதிகளை நோக்கி ஏற்கனவே இடம்பெயர்ந்துவரும் மீன் இனங்களை அந்த இடங்களில் செயற்கையாக வளரவிட்டு, இயற்கையில் நடந்துவரும் ஒரு மாற்றத்தை சற்றே வேகப்படுத்த தாங்கள் திட்டமிடுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.



Fitch BB+(lka). RAM BBB/P3
யூனியன் வங்கியானது, இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரையின் கீழ் செயற்படும் பதிவு செய்யப்பட்ட வணிக வங்கியாகும்

# விவாகரத்துக்குப் பின்னர் ஆண்கள் என்ன நினைப்பார்கள்?



திருமணமான பிறகு நடக்கக் கூடாத விடயங்களில் ஒன்று தான் விவாகரத்து. திருமணத்திற்கு பின் ஏற்படும் சண்டைகளும், புரிந்து கொள்ளாமல் இருப்பதுமே இந்த செயலுக்குக் காரணம்.

மேலும் இத்தகைய பிரிவு இருவருக்குமே பெரும் வழியை ஏற்படுத்தும். அப்படி விவாகரத்து ஆனபிறகு ஆண்களின் மனநிலை எப்படி இருக்கும், அவர்கள் என்ன நினைப்பார்கள், எதற்கு கவலைப்படுவார்கள் என்று உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

1. முதலில் அவர்கள் சந்தோஷப்படுவார்கள். ஏனெனில் அவர்களுக்கு எந்த ஒரு பொறுப்பும் இருக்காது, ஒருவித சுதந்திரமாக இருப்பதாக நினைப்பார்கள்.

அவர்கள் ஒரு சுதந்திரப் பறவை போல் உணர்வார்கள். மேலும் ஆண்களுக்கு பொதுவாக எந்த ஒரு பிடிக்காத வாழ்க்கையையும் விரும்பமாட்டார்கள். இருப்பினும், பொறுத்துக் கொண்டு இருப்பார்கள்.

ஆனால் அப்படி இருக்கும் போது மனைவி நிறைய உத்தரவு போட்டால் அவர்களுக்கு அது நரகமாகிவிடும். இப்போது அந்த வாழ்க்கை இல்லையென்று நினைக்கும் போது அவர்களைப் போல் சுதந்திரப் பறவை யாராகவும் இருக்க முடியாது என்பது போல் இருப்பார்கள்.

2. சமைக்கும் நேரத்தில் மிகவும் வருந்துவர். ஏனெனில் சமைத்துச் சாப்பிட வேண்டுமென்பது அவர்களுக்கு பிடிக்காத விடயம். அந்த நேரத்தில் அவர்கள் மனைவியை நினைத்து மிகவும் வருந்துவர்.

மேலும் சாப்பிட வேண்டுமென்றால் அருகில் இருக்கும் ஹோட்டல் அல்லது உணவகம் போய் நண்பர்களோடு சாப்பிடுவது என்று இருக்கும். இப்படி சாப்பிடுவது கொஞ்ச நாள்களுக்கு நன்றாக இருக்கும். ஆனால் போகப் போக அழுத்துவிடும். இதுவே விவாகரத்தான ஆண்களின் மிகுந்த கவலையாக இருக்கும்.

3. விவாகரத்து ஆகியதும், முதலில் ஆண்களின் மனதில் தோன்றுவது என்றால் அது என் துணியை யார் துவைப்பர்? முதலில் ஒரு வேலைக்காரி வேண்டும் என்பது தான்.

அப்போது அவர்கள் இதுவரை நம்மைப் பார்த்துக் கொண்ட, வீட்டை எல்லாம் சுத்தமாக வைத்துக் கொண்ட அவர்களது மனைவியை நினைப்பர்.

ஆனால் இப்போது... என்ற கேள்விக்குறி மனதில் வரும். மேலும் அந்த சமயத்தில் அவர்களுக்கு அவருடைய மனைவியுடன் வாழ்ந்த வாழ்க்கை அடிக்கடி நினைவுக்கு வரும்.

பின்னர் பழைய கல்லூரி வாழ்க்கை எல்லாம் நினைவுக்கு வந்து, அவர்கள் தங்களது வாழ்க்கையை மறுபடியும் மாற்ற வேண்டும் என்றெல்லாம் நினைப்பர்.

4. விவாகரத்தான பின் மறுபடியும் தனிநபர். அப்போது அவர்கள் யாருடன் வேண்டுமானாலும் பழகலாம். யாரும் அவர்களைக் கேள்வி கேட்கமாட்டார்கள்.

மேலும் இப்படியே தனியாகவே வாழ்க்கை முழுவதும் இருக்கவும் போவதில்லை. ஆகவே தனக்கு ஒரு துணை இருந்தால் நன்றாக இருக்கும் என்று எந்தப் பெண்ணைப் பார்த்து தோன்றுகிறதோ, அவர்களிடம் அவர்கள் போய் பேசி பழக வேண்டும் என்றெல்லாம் நினைப்பர்.

5. சுதந்திரப்பறவையான பின், இனிமேல் மனைவி தொல்லை இருக்காது. ஆகவே இனிமேல் நான் என்ன செய்கிறேன்?, எங்கு இருக்கிறேன்?, எதற்கு? ஏன் தாமதம்?, எங்கு சாப்பிட்டேன்? என்று எந்த ஒரு கேள்வியும் வராது, யாரிடமும் சொல்லவும் தேவையில்லை என்றும் சந்தோஷமாக இருப்பர்.

# மூட்டு வலியா? கவலை வேண்டாம்! இருக்கிறது ஆமணக்கு



ஆமணக்கு மிகச்சிறந்த எண்ணெய் வித்தாகும்.

இதிலிருந்து எடுக்கப்படுகின்ற விளக்கு எண்ணெய்யை யுனானி மருத்துவர்கள் மிகச்சிறந்த மருந்துப் பொருளாகப் பயன்படுத்துகின்றார்கள்.

ஆமணக்கு செடியின் விதைகள் முத்து எனப்படுகிறது. இதன் இலைகள், எண்ணெய், வேர் ஆகியவை மருத்துவப் பொருள்களாகப் பயன்படுத்துகின்றனர்.

குடிதண்ணீரில் ஆமணக்குச் செடியின் வேரைச் சேர்ப்பது வழக்கமாகும். அது போலவே, பல்வேறு விதமான தைலங்களிலும் இந்த வேரைச் சேர்ப்பார்கள்.

சளித் தொல்லை, காய்ச்சல் போக்க, காலை, மாலை இரு வேளைகளிலும் சிறிதளவில் தொடர்ந்து ஐந்து நாள்களுக்குக் சாப்பிட்டு வர சளித்தொல்லை குணமாகும்.

இதன் இலைகளை சின்னநெல்லிக்காய் இலைகளுடன் சேர்த்து அரைத்து சிறு எலுமிச்சம்பழ அளவில் எடுத்து மூன்று நாட்களுக்கு காலை நேரத்தில் தொடர்ந்து சாப்பிட்டு வர வேண்டும், சிற்றாமணக்கு எண்ணெய் அடிவயிற்றின் மீது பூசி, அதன் மேல் இந்த இலைகளை வதக்கிப் போட்டால் மலச்சிக்கல், வயிற்று வலி குணம் பெறும்.

இதன் இலைகளைப் பொடியாய் அரைத்து, அதில் ஆமணக்கு நெய்விட்டு வதக்கி ஒத்தடம் கொடுப்பதால் மூலக்கடுப்பு, கீழ்வாதம், வாத வீக்கம் குணம்பெறும்.

ஆமணக்கு விதைகளைப் பாலில் அல்லது தண்ணீரில் கொதிக்க வைத்து மூட்டுவலி, பின்தொடை, [illegible] விடைகொடுக்கலாம்.

இதன் விதைகள் கல்லீரல் நோய்கள்,மண்ணீரல் நோய்களையும் குணப்படுத்துகின்றது.

எனவே ஆமணக்கை பயன்படுத்தி நாமும் நோய்களை விரட்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org